ஸ்ரீ

அழகிய மணவாளதாசரென்னும்

திவ்யகவி பிள்ளைப்பெருமாளையங்கார்

இயற்றிய

# அஷ்டப்பிரபந்தம்

நூலாசிரியர் சரித்திரமும்,

செய்யுள் முதற்குறிப்பகராதியும் கூடியது.

[2-வது பதிப்பு]

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை,

87, தம்புசெட்டி வீதி, சென்னை.

1919

விலை அணா 12

[All Rights Reserved]

# பொருளடக்கம்.


| | | பக்கம் |
|---|---|---|
| I. | முகவுரை ... ... ... ... ... | க–ஊ |
| II. | நூலாசிரியர் சரித்திரம் ... ... ... | 1–16 |
| III. | நூல் | |
| | 1. திருவரங்கக்கலம்பகம் ... ... | 1–42 |
| | 2. திருவரங்கத்துமாலை ... ... .... | 1–22 |
| | 3. திருவரங்கத்தந்தாதி... ... ... | 1–20 |
| | 4. ஸ்ரீரங்கநாயகர் ஊசல் ... | 1–12 |
| | (ஸ்ரீரங்கநாயகியார் ஊசல்) ... | 13–18 |
| | 5. அழகரந்தாதி ... ... ... | 1–20 |
| | 6. திருவேங்கடமாலை ... ... ... | 1–19 |
| | 7. திருவேங்கடத்தந்தாதி ... ... | 1–20 |
| | 8. நூற்றெட்டுத்திருப்பதியந்தாதி ... | 1–26 |
| IV. | செய்யுள் முதற்குறிப்பகராதி ... ... | 1–28 |

# முகவுரை

இரங்கண் எட்டு நூல்கள் உளவேனும், அவை தமிழின்கணுள்ள தொண்ணூற்றறுபான்வகைப் பிரபந்தங்களுள் கலம்பகம், அந்தாதி, மாலை, ஊசல் என்னும் நான்கனுள்ளடங்கும். அவையாவன: திருவரங்கக்கலம்பகம், திருவரங்கத்தந்தாதி, அழகரந்தாதி, திருவேங்கடத்தந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி, திருவரங்கத்துமாலை, திருவேங்கடமாலை, ஸ்ரீரங்கநாயகரூசல்.

கலம்பகமாவது:—ஒருபோகும், வெண்பாவும், கலித்துறையு முதற்கலியுறுப்பாக முற்கூறி; புயவகுப்பு, மதங்கு, அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் என்னு மிப்பதினெட்டுறுப்புக்களு மியைய; மடக்கு, மருட்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம், கலித்தாழிசை, வஞ்சிவிருத்தம், வஞ்சித்துறை, வெண்டுறை யென்னு மிவற்றால் இடையிடையே வெண்பா கலித்துறை விரவி யந்தாதித் தொடையான் முற்றுறக் கூறுங்கால் தேவர்க்கு * நூறும், அந்தணர்க்குத் தொண்ணூற்றைந்தும், அரசர்க்குத் * தொண்ணூறும், வைசியர்க் கைம்பதும், சூத்திரர்க்கு முப்பதுமாகப் பாடுவது.

---

* இவ்விதி பிற்காலத்ததென்பது, 110 செய்யுட்களடங்கிய திருக்கலம்பகம், நந்திக்கலம்பகம் என்னு நூல்களைக் கண்டு ஊகித்தறியலாம்.

அந்தாதியாவது: ஒருபாட்டி னீற்றடியாவது, இறுதிச் சீராவது, ஈற்றெழுத்தாவது வருஞ் செய்யுளின் முதலாகப் பாடுவது. இது சாதாரணமாக முற்றும் வெண்பாவினாலும், விருத்தத்தினாலும், கலித்துறையாலும் பாடப்பெறுவது.

மாலை என்பது: பலவகைப் பாக்களாலேனும் ஒரு வகைப் பாக்களாலேனும் சாதாரணமாய்த் துதியாக ஏற்பட்ட நூல்.

ஊசல் என்பது: ஆசிரியவிருத்தத்தானாதல், கலித்தாழிசையானாதல் சுற்றத்தோடும் பொலிவதாக, ஆடிரூசல், ஆடிரூசல், ஆடாமோவூசல் என்று கூறுவது.

அஷ்டப்பிரபந்தத்தை முழுதும் கற்றுணர்வோர்க்கு இப்பிரபந்த இலக்கணம் எவ்வாறு அவற்றுட் பொருந்தியுள்ளதென்பது தெரியவரும்.

---

# பிள்ளைப்பெருமாளையங்கார்
# சரித்திரம்.

இவர் சோழநாட்டிலுள்ள திருமங்கை யென்னுந் திருப்பதியில் பிரமகுலத்தில் வைணவமரபிற் றோன்றியவர். இவர் இளமையிலே நல்லாசிரியர்பாற் றென்மொழியிலுள்ள தொல்காப்பிய முதலிய அரிய பெரிய இலக்கண நூல்களும் - சங்கமரீஇய முத்தமிழ் நூல்களும் - இன்னுமவர்காலத்து வழங்கிய மற்றைத் தமிழ் நூல்களும் கற்றுணர்ந்து, வடமொழியிலும் வேதம், வேதாங்கம், வேதாந்த முதலியவைகளில் மிக்க வல்லுநராகி, மற்றும் அவர்தம் வைணவ சமயத்திற்குரிய சம்பிரதாயக் கிரந்தங்க ளெல்லாவற்றையுங் கற்று அவற்றிலும் அதி நிபுணராய், அடக்க முதலிய நற்குணங்களெல்லாம் ஒருங்கே அமையப்பெற்று ஆழ்வார்கள் 'அருளிச்செயல்'களில் ஈடுபட்டவராய், திருவரங்கம் பெரிய கோயிலிற் கிடந்த திருக்கோலமா யெழுந்தருளியிருக்கும் அழகிய மணவாளரது திருவடித் தாமரைக்குப் பேரன்பு பூண்டவரா யொழுகுநாளில், அந்நாடாண்ட அரசன் அவரது சிறந்த குணங்களை யறிந்து 'இத்தகைய நற்குணங்கள் ஒருங்கே ஒருவரிடம் அமைவது அருமை அருமை' என வியந்து அவரைத் தனது அரண்மனைக்குத் தருவித்துப் பெரியதோர் உத்தியோகங் கொடுத்து, அவரைத் தன்னருகே வைத்துக்கொண்டிருந்தான்.

இவர் இவ்வாறு சிலகாலம் இலௌகிகத் தொழிலில் அமர்ந்திருக்கு நாட்களில், ஒருநாள் மற்றை உத்தியோகத்தருட னிருக்குங்காலத்துத் தமது உத்தரீயத்தை இரண்டு

கையிலுங் கொண்டு "கிருஷ்ண! கிருஷ்ண!!" என்று தேய்த்தனர். அதனைக் கண்ணுற்ற சிலர், "ஐயங்காரே! நீர் நிரந்தரம் பகவத் குணாநுபவ சீலரே என்பது யாவரும் அறிந்த விஷயம். ஆயினும் உமது உத்தரீயத்தை ஏன் இங்ஙன் செய்தீர்?" என வினவியவளவில் அவர், "ஆம் அருகு பந்தத்தின் சுவாலை தாவி எரிந்த திருத்திரை யவிந்து நமது ஸ்ரீ ரங்கநாயகரும் திருத்தேரில் எழுந்தருளுகின்றார்" என்றார். அதைக் கேட்டு உடனிருந்த உத்தியோகஸ்தர்கள், "ஐயா! திருவரங்கம் பெரியகோயிற் றிருவீதியில் நம்பெருமாள் திருத்தேருற்சவம் கண்டருளுகிறது உமக்கு எங்ஙனே தெரியலாயிற்று?" என்று நகைத்து "இவ்வா[illegible] சித்தப்பிரமை அடைதல் இராஜ சேவைக்கு விருத்த[illegible]மாகுமே" என்று பரிதபித்தனர். இஃதிப்படியாக, திருவரங்கத்திலே பெருமாள் திருத்தேரி லெழுந்தருளி உலாவரும்போது இரதத்திலிருந்த திருத்திரையிலே ஒரு கைப்பந்தத்தின் சுவாலை தாவி எரிகையில், தேரின்மேலே பெருமாளைச் சேவித்து நின்ற ஐயங்கார் இதைக் கண்டு அத் திரையைப்பற்றி யுதறிக் கீழே தேய்த்து அவித்தருளினதை அர்ச்சகர் முதலானவர்கள் தெரிந்து உடனே தோஷபரிகாரஞ் செய்து திருத்தேர் நடாத்தியருளினார்கள்.

இவ்விஷயங்களைச் செவியுற்ற அரசன் ஐயங்காரைத் தருவித்து அவரை நோக்கி, "திருத்தேருற்சவத்திற்கு எங்ஙனே போயினீர்?" என்ன, ஐயங்கார் "எனக்கு மானஸாநுபவமே யல்லது நான் கோவிலுக்குப் போனதில்லை" என்றார். அரசன் ஆக்ஷேபித்து, "நீவிர் ரதோற்சவத்தன்று ஸ்ரீரங்கத்தி லிருந்ததாக மற்றவர்கள் சொல்வது பொய்யோ?" என்ன, அப்போது, அவர் உத்தரீயத்தை 'கிருஷ்ண! கிருஷ்ண!!' என்று சொல்லித் தேய்த்ததைக் கண்[illegible]ருந்த

சிலர் "அவர் அன்று இங்குதானிருந்தார்" என்று நடந்ததைக் கூற, அரசன் "நன்று நன்று" என்று இவரது தெய்வீகத் தன்மையை வியந்தனன். அன்றிரவு அரசன் நித்திரையில் தான் பெருமாள் சந்நிதிக்குப் போனதாகவும், காவேரிக் கரையில் ஐயங்கார் நிற்கக்கண்டு அவருடனே சந்நிதிக்குப் போய்ப் பெரிய பெருமாளைச் சேவித்து மீளும்போது ஐயங்காரைக் காணாமல் மயங்கிக் கண்விழித்துப் பார்த்ததும், நடந்ததெல்லாஞ் சொப்பனமெனத் தெளிந்து, பொழுது விடிந்ததும் ஐயங்காரை வரவழைத்து, "நீரோ மஹாது பாவரா யிருக்கிறீர்; இனி என் சேவைக்குத் தக்கிரல்லீர்; நீவிர் விரும்புவது யாது?" என்ன, ஐயங்கார் "பெரிய கோயில் தளிகைப் பிரசாதமும் அங்குற்ற வாசமும் வேண்டும்" என்ன, அன்று தொடங்கிச் சலவைக்கல்மண்டபப் பிரகாரத்தில் வடமேற்கு மூலையில் அவர்தமக் கோரறையும் தளிகைப் பிரசாதமும் கிடைக்கும்படியான ஏற்பாடு செய்து ஐயங்காரை அனுப்பிவிட்டான். ஐயங்காரும் அங்ஙனே யெழுந்தருளியிருந்து திருவரங்கம் பெரியகோயிலுக்கு மாலை, ஊசல், அந்தாதி, கலம்பகம் என்னும் நான்கு பிரபந்தமியற்றி, பிறகு அழகர் திருமலைக்கோ ரந்தாதியும், திருவேங்கடத்திற்கோர் மாலையும் அந்தாதியும், நூற்றெட்டுத் திருப்பதிக்கும் ஒரு அந்தாதியும் செய்தனர். இவ்வெட்டு நூல்களுக்குந்தான் அஷ்டப்பிரபந்தம் என்று பெயர்.

இவர் "தமக்கு அந்தியதசை பசுமாட்டினாலே முடிவாம்" என்று சொல்லியிருந்தார். அதற்கிணங்க ஒருநாள் இவர், கோயிலிற் சக்ரவர்த்தித் திருமகன் சேவையாய் ஸ்ரீவைகுண்டநாதர் சந்நிதியிற் சேவித்துக்கொண் டிருக்கையில் ஒரு நொண்டிப்பசு வந்து தவறி இவர்மேல் விழ இவரும் கீழே வீழ்ந்ததனால் நேர்ந்த துன்பத்துடனே,

"துளவ துளவ வெனுஞ்சொல்லும் போச்சே
அளவி னெடுமூச்சு மாச்சே—முளரிக்
கரங்கால் குளிர்ந்ததே கண்ணும் பஞ்சாச்சே
இரங்கா யரங்கா வினி."

என்று சொல்லி உடனே வைகுண்ட நாதரிடமே சேர்ந்தா ரென்பது கல்வி கேள்வி யுள்ளோர் யாவரும் அறிந்த விஷயம்.

இவரைப் பற்றிய கதைகள் இன்னுஞ் சிலவுள. இவர் கவிபாடுதலில் வல்லுநரா யிருத்தல்பற்றி இவரைக்கொண்டு தங்களூர்க் கொருநூல் செய்வித்துக்கொள்ளல்வேண்டும் என்னும் எண்ணங்கொண்ட (ஜம்புகேசுவரம்) திருவானைக் காவிலுள்ளோர் இவரை வேண்டுதலும் இவர் இணங்க வில்லை. ஒருநாள் அரங்கநாதர் கோயிற் பசு ஒன்று ஆனைக் கா சென்று மேய்ந்துகொண்டிருந்த தருணம் பார்த்து அங் குள்ளோர் அதைப் பிடித்துக் கட்டிவைத்தலும், அதனை யறிந்த கோயில் அதிகாரிகள் பசுவை விட்டுவிடும்படிகேட்ட வுடன் அவர்கள் "ஐயங்கார் வந்து இவ்வூரைக் குறித்து ஒரு பாட்டாயினும் பாடினால்தான் பசுவைக் கொண்டுபோக லாம்" என்றார்கள். இதனைக் கோயில் அதிகாரிகள் இவர்க் குச் சொல்லி வேண்ட இவர் வைணவப்பற்றும் சிவத் துவேஷமும் உடையராதலால், "ஆனை துரத்திவரினும் ஆனைக்கா புகேன்" எனச் சொல்லிவிட்டார்.

இவரும் சைவ எல்லப்ப நாவலரும் ஒரு காலத்தவர் என்பது ஒரு கொள்கை. ஐயங்கார் கலம்பகம் பாடியவுடன் அந்நூலை நாவலருடைய பார்வைக்கு அனுப்ப, அவர் அதனை வாங்கிப் பார்த்து,

"தேனைமருஞ் சோலைத் திருவரங்க ரெப்பொருளு
மானவர்க ளாண்பெண் ணலியலர்கா ணம்மானை

யானவர்தா மாண்பெண் ணலியலரே யாமாகிற்
சானகியைக் கொள்வரோ தாரமா யம்மானை
தாரமாய்க் கொண்டதுமோர் சாபத்தா லம்மானை."

என்னும் அம்மானையைப் பார்த்தவுடன், "ஐயங்கார் அம்மானையில் அடி சறுக்கினார்" என்று சொல்லி, தாம் உடனே கலம்பகம் (திருவருணைக் கலம்பகம்) ஒன்று பாடி முடித்து அன்றிரவே அதனை ஐயங்காருக்கு அனுப்பினாரென்றும், அவ்வருணைக் கலம்பகத்தைப் பார்த்து ஐயங்கார் மிகக் களித்தனர் என்றுஞ் சொல்லுப.

திருவரங்கக் கலம்பகத்து 39-வது செய்யுளாகிய,

"வாடியோட வனசமன்ன விருகண்வெள்ள மருவிபோன்
மருவியோட மதனன்வாளி யுருவியோட வாடையூ
டாடியோட வன்றிலோசை செவியிலோட வண்டுழா
யாசையோடு மெங்கள்பேதை யாவியோட வீதியோ
மோடியோட வங்கிவெப்பு மங்கியோட வைங்கரன்
முடுகியோட முருகனோட முக்கணீசன் மக்களைத்
தேடியோட வாணனா யிரம்புயங்கள் குருதிநீர்
சிந்தியோட நேமிதொட்ட திருவரங்க ராசரே."

இத் தாழிசையை எல்லப்ப நாவலருடைய மனைவி கண்டு, ஐயங்கார் சிவபிரானையும் அவர் தம் குமாரர் முதலாயினோரையும் இவ்வாறு இழித்துக்கூறினதற்கு வெகுண்டு, தான் அதைப்போன்ற ஒரு * செய்யுள் செய்து அதனை அரு

* "கருடனோட மச்சமாமை கமலமோட முற்காங்
காட்டிலோட மூன்றிராமர் கண்டமட்டி லோடவே
மருளிவந்த சிங்கமோட வாமனென்பு பாறவே
வஞ்சமுள்ள கண்ணனோட மாரனீறச் சேனனு

னைக் கலம்பகத்துட் சேர்க்கும்படி வேண்டலும், நாவலர் அதன் பொருளும் மனைவியின் குரோதமும் கண்டு அவ்வாறு செய்திலர் என்ப. இன்னுமித்தகைய கதைகளனேகமுள. இவரும் ஐயங்காரும் ஒரு காலத்தவர் என்பது பட்டினத்துப் பிள்ளையாரும் அருணகிரிநாதரும் ஒரு காலத்தவர் என்னுங் கொள்கை போன்றது. ஆய்ந்து பார்க்கும்போது இக் கொள்கையும் வலியிழந்து விடுகின்றது.

ஐயங்காரவர்கள் சிலேடை, யமகம், திரிபு, மடக்கு முதலிய சொல்லணிகொண்டு நூலை யலங்கரிப்பதில் மிக்க சமர்த்தர் என்பதற்கு அவருடைய அஷ்டப் பிரபந்தங்களே சான்று பகரும்.

"வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோ சயங்கொண்டான்
விருத்த மென்னு
மொண்பாவிற் குயர்கம்பன் கோவையுலா வந்தாதிக்
கொட்டக் கூத்தன்
வண்பாய கலம்பகத்திற் கிரட்டையர்கள் வசைபாடக்
காள மேகம்
பண்பாய பகர்சந்தம் படிக்காச லாதொருவர்
பகரொ ணாதே."

என்னும் பாட்டிற் கூறியுள்ள வெண்பாப் புலியாகிய புகழேந்தியும், விருத்தத்தில் வல்ல கம்பரும், அந்தாதி பாடுவதிற் சமர்த்தரான ஒட்டக்கூத்தரும் கலம்பகத்திற் சிறந்த

---

மிருளினோடு முண்டகத்த னேங்கியோட வென்றவர்க்
கீறுருதவ் குயிரளித்த வேந்தல்யாவன் வேதமே
யருளுமந்த முதல்வன் யாவ னருணைகண்டு வாழ்மினோ
ராதி மூலமென்ப தறிகிலாத மாக்களே."

இரட்டையரும், சந்தப்பாவில் வல்ல படிக்காசும் ஒருங்கு சேர்ந்து பாடினாற் போன்றது ஐயங்காரியற்றிய திருவரங்கக்கலம்பகம். இதற்கு அக்காலத்துள்ளோர்,

"சொன்னோக்கும் பொருணோக்குந் தொடைநோக்கு
நடைநோக்குந் துறையினோக்கோ
டென்னோக்குங் காணவிலக் கியமாவ தன்றியிதி
லீடுபட்டோர்
நன்னோக்கும் புத்தியும் பத்தியும் பெறுவர் முத்தியுண்டா
நானென் சொல்கேன்
பன்னோக்க மணவாளர் பகாரங்கக் கலம்பகத்தைப்
பாரீர் பாரீர்."

என்றிவ்வாறு சிறப்புப்பாயிரங்கூறியிருத்தலுங் காண்க. இச்சிறப்புப்பாயிரம் எவ்வளவு பொருத்தமுடைத்து என்பது இந்நூலை வாசித்து அநுபவித்தோர்க்கு நன்கு புலப்படும்.

அஷ்டப்பிரபந்தத்திலுள்ள மற்றைய நூல்களும் எவ்வாற்றான் நோக்கினும் சுவைகனிந்த பாடல்கள் நிறைந்துள்ளனவாகவே காணப்படுகின்றன. இக்காலத்துப் புலவர் பாடும் யமகங்கள் போலாது பதம்பிரித்துப் பொருள் காண்பது மிக்க எளிதாயும்-நயமாயும்-மனத்திற்கு ஒருவித மகிழ்ச்சி உண்டுபண்ணத் தக்கதாயு மிருப்பது இவர் பாடிய யமகக்கவிகள். யமக வந்தாதியிற் சிறந்தது இவரியற்றிய திருவரங்கத்தந்தாதி. அதன் ஆறுவது செய்யுளாகிய,

"தருக்காவ லாவென்று புல்லரைப் பாடித் தனவிலைமா
தருக்காவ லாய்மயி லேகுயி லேயென்று தாமதராய்த்
தருக்காவ லாநெறிக் கேதிரி வீர்கவி சாற்றுமின்பத்
தருக்காவ லாயுதன் பின்றோன் றரங்கர்பொற் றுளிணைக்கே."

| | | |
|---|---|---|
| 1. தருக்காவலா என்று | = | கற்பக விருக்ஷத்திற்கு இறையாகிய இந்திரனே என்று |
| புல்லரைப் பாடி | = | அற்பர்களைத் துதித்து |
| தனவிலைமா 2. தருக்கு ஆவலாய் | = | கணிகையர்மீது ஆவல்கொண்டு |
| மயிலே குயிலே என்று | = | மயிலென்றுங் குயிலென்றுங் கொஞ்சிக் குலாவி |
| தாமதராய் | = | தமோகுணத்தாழ்ந்து |
| 3. தருக்கா | = | செருக்குற்று |
| அலா நெறிக்கே | = | தருமநெறியல்லாத அதரும வழியில் |
| திரிவீர் | = | உழலும் புலவீர்! |
| 4. (பத்) தருக்கா | = | பத்தர்களுக்காக |
| அலாயுதன்பின் றோன்று | = | கலப்பையை யாயுதமாகக்கொண்ட பலராமருக்குப்பின் றோன்றிய |
| அரங்கர் பொற்றாளிணைக்கே | = | ஸ்ரீரங்கநாதருடைய திவ்விய பாதாரவிந்தங்களுக்கே |
| (கவிசாற்றுமின்) | = | கவிமாலை சாற்றுங்கள். |

இதுவும் அந்தாதியின் மற்றைப் பாக்களும் எவ்வளவு சிறந்து விளங்குகின்றன வென்பது அந்நூலைக் கற்றுணர்ந்தோர் அறியக்கூடிய விஷயம்.

இவரது நூல்கள்: ஆழ்வாரருளிச் செயல்கள், ஸ்ரீமந் நாதமுனி யமுனைத்துறைவர் முதலான ஆசாரியர்கள் அருளின ரஹஸ்யார்த்தங்களின் ஸாரமாயுள்ளன.

இவரிருந்த காலம் திருமலை நாய்க்கருடைய காலம் * (கி. பி. 1623–1659, அதாவது பதினேழாவது நூற்

---

* See page 4 of the Introduction to the Meenakshi Ammai Pillai Tamil, edited by K. Kuppuswami Mudaliar, B.A. (Ripon Press, 1903.)

றாண்டு) என்று எழுதிவைத்துள்ளார் † திரிசிரபுரம் வித்வான் கோவிந்தப்பிள்ளை யென்பவர். இக்கூற்றுக் காதார மின்னதென்பது விளங்கவில்லை. சிலர் இவரை மேற்கூறிய (பதினெட்டாம் நூற்றாண்டிருந்த) சைவ எல்லப்பநாவலர் காலத்திருந்தனர் என்ப. இவர்க்கு ஆசிரியராகிய பராசர பட்டாது திருவவதாரகாலம் சாலிவாகன சகாப்தம் தொளாயிரத்து எண்பத்துமூன்று என்று பிரபந்நாம்ருதத்திற் கூறப்பட்டிருப்பதால், இன்னுஞ் சிலர், இவர் (983+78= 1061-A. D.) கி.பி. பதினோராவது நூற்றாண்டினிறுதியில் இருந்தனர் எனப. இவ்வாறு பதினோராவது நூற்றாண்டு என்று சிலரும், பதினேழாவது நூற்றாண்டு என்று சிலரும், பதினெட்டாவது நூற்றாண்டு என்று மற்றுஞ் சிலரும் கூறுவதனால் உண்மை இதுவெனத் தெளிதல் அருமையே யாகும். மேலும் இந்நாட்டு நூலின்காலம், நூலாசிரியரின் கால மின்னதெனக் கூறப்புகுங்கால் யுகம்யுகமாய்ப் புரட்டுவதில் நம்மவர்க்கு மிகப்பிரியம்; மேனாட்டுப் புலவருட் சிலரோ இவையெல்லாம் சில நூற்றாண்டுக்கு முன்னர்த்தாந் தோன்றினவென்று சொல்வதற்கு விரும்புவர். கால்டுவேல் பாதிரியார்: வைணவமதமே இராமாநுஜருக்குப் பிந்தியதென்பர். ஆழ்வார்கள் தோன்றியதும் அவர்க்குப் பிந்தியே யென்று வாய்கூசாது கூறுவர் சிலர். கீழ்நாட்டுப் பண்டிதருட்சிலர் இம்முனையிலும், மேனாட்டுப்பண்டிதர் அம்முனையிலும் நிற்பார். ஆகவே நடுநின்று உண்மை ஆராய்வோர் அரியராயினர்.

தேவார முதலிய சைவத் திருமுறைகளை நம்பியாண்டார் நம்பிகள் தொகுத்தாங்கு ஸ்ரீமந் நாதமுனிகள் நாலா

† See Preface to the K. R. Press Edition of Ashtapprabandham.

யிரப் பிரபந்தங்களைத் தொகுத்தனர் என்றும், பின்னொரு காலத்துச் சேக்கிழார் பெரியபுராணம் பன்னிரண்டாவது திருமுறையாகச் சைவத்திருமுறையுடன் சேர்க்கப்பட்டது போல, பிற்காலத்து இராமாநுஜர் நூற்றந்தாதியும் நாலாயிரப் பிரபந்தத்துட் சேர்க்கப்பட்டது என்ப. இந்நூற்றந்தாதி செய்தவர் திருவரங்கத் தமுதனார் என்பவர். இவர், பராசரபட்டருடைய தகப்பனாராகிய கூரத்தாழ்வாருடைய சிஷ்யர் என்பது இவர் தாமியற்றிய,

* "மொழியைக் கடக்கும் பெரும்புக ழான்வஞ்ச முக்குறும்பாம்
குழியைக் கடத்துமெங் கூரத்தாழ்வான் சரண் கூடியபின்
பழியைக் கடத்து மிராமாநுசன் புகழ் பாடியல்லால்
வழியைக் கடத்த லெனக்கினி யாதும் வருத்தமன்றே."

என்னுஞ் செய்யுளாற் றெரியவருகின்றது.

இத்திருவரங்கத்தமுதனாரைப் பிள்ளைப்பெருமாளையங்கார்தம் தகப்பனார் என்பர் பலர்; பாட்டனார் என்பர் சிலர். அஃது எவ்வாறாயினும், இராமானுஜருடைய ஜீவியகாலத்திலேயே இராமாநுஜருடைய பிரதாபம் எங்கும் விளக்கமுற்றிருந்தமையால் ஐயங்கார் மூதாதையால் இயற்றப்பட்ட இராமாநுஜ ஸ்தோத்திரமாயுள்ள நூற்றந்தாதியும் அக்காலத்திலேயே நாலாயிரப் பிரபந்தத்துட் சேர்க்கப்பட்டிருத்தல் கூடும். பிள்ளைப்பெருமாளையங்கார் இராமாநுஜருக்குப் பின்னிருந்தோரென்பது மேற்கூறியதனாலும்; ஐயங்கார் கூறும் திருவரங்கக் கலம்பகத்துக் காப்புச் செய்யுளொன்றானும் பெறப்படும். அதாவது,

"பிடிக்கும் பரசம யக்குல வேழம் பிளிறவெகுண்
டிடிக்குஞ் சுராற்சிங்க வேறனை யானெழு பாருமுய்யப்

---

* இராமாநுஜ நூற்றந்தாதி, செய்யுள் 7.

படிக்கு புகழெம் மிராமா நுஜமுனி பல்குணமும்
வடிக்குங் கருத்தினர்க் கேதிரு மாமணி மண்டபமே."

அதுவுமன்றி இவர் இராமாநுஜருடைய சிஷ்யராகிய கூரத்தாழ்வாரது 'பெருமாள் குமாரர்' என்னுஞ் சிறப்புப்பெயர் வாய்ந்த புத்திரராகிய (பராசர) பட்டரது சிஷ்யர் என்பது இன்னொருகாப்புச் செய்யுளால் விளங்குகிறது. அதாவது,

"வானிட்ட கீர்த்தி வளர்கூரத் தாழ்வான் மகிழவந்த
தேனிட்ட சார்ங்க பெருமாள் குமாரர் சிவனையயன்
முனிட்ட சாபந் துடைத்தா ளரங்கர்சங் காழிபுய
தானிட்ட னென்றருள் பட்டர்பொற் றுள்கதி நந்தமக்கே."

இராமாநுஜர், தென்னிந்தியாவில் ஸ்ரீவைணவ சமயத்தைப் பரவச்செய்ததை யறிந்த சோழன் இவரை யிந்நாட்டினின்று துரத்தவே இவர் மைசூர் நாடு சென்று ஸ்ரீரங்கபட்டினத்திற்கு வடக்கே இருபதுமைல் தூரத்திலுள்ள மேற்கோட்டை (மேலுகோட்டே) என்னு நகரில் இருந்த சமணர்களை வாதில்வென்று அக்காலத்தரசாண்ட ஹாய்சால வம்சத்தரசனாகிய பிட்டிதேவராஜனை (1104-1141 கி-பி) சமணமதத்தினின்றும் விலகச்செய்து அவனை வைணவனாக்கி, அப்போது அவனுக்கு விஷ்ணுவர்த்தனன் என்னுந் தீக்ஷாநாம மளித்தார். அதுமுதற்கொண்டு அவனுக்கு அப்பெயர் விளங்கிவந்தது. அப்போது அங்கே ஒரு ஸ்ரீ வைஷ்ணவமடமும் ஸ்தாபித்தார். அதற்கு இப்போது பரகாலசுவாமி மட மென்றுபெயர். அவர் அவ்வரசனை வைணவனாக்கியது கி. பி. 1117-வது வருஷமென்பதும், அவர் அந்நாட்டிற் பிறகு 14 வருஷ மிருந்தாரென்பதும், சாசன ஆராய்ச்சியினாற் றெரியவருகின்றது. *

* P. 333, Vol. 1, Lewis Rice' Mysore.

ஆய்ந்துபார்க்குமிடத்து இவரைச் சோழநாட்டினின்றுந் துரத்திய சோழன்: சைவத்தில் அதிக பற்றுவைத்திருந்த * அநபாயச் சோழ (1070—1118 A. D.) னுதல் வேண்டுமெனத் தெரியவருகிறது. இராமாநுஜர் பன்னிரண்டாவது நூற்றாண்டின் முதலில் இருந்தனர் என்றேற்படுகிறபடியால், அவர் காலத்தவரான கூரத்தாழ்வாரும் அவர் புத்திரராகிய பராசரபட்டரும் அக்காலத்தவரே என்று கொள்ளலாம். ஆயினும் பிரபந்நாமிருதத்தில் பட்டர் அவதார காலமே கி. பி. 1061-ம் (983+78)ஆக என்று கூறியிருக்கிறதே. இராமாநுஜர் மைசூர் நாட்டிற் சென்றது கி. பி. 1117-வது வருஷமென் றேற்பட்டதே; இவ்வளவுகால வித்தியாசமிருப்பதால் பட்டர் அவதாரகாலம் 1061-வதாக என்பது பொருந்துமா என்று ஐயுறுவோர் சற்றே ஆழ்ந்து ஆய்ந்து பார்த்தால், அசாத்திய மொன்று மின்றென்பது விளங்கும். பிள்ளைப்பெருமாளையங்கார் இயற்றிய நூல்கள் அனைத்திலும் ஆதியினேனும் அந்தத்தினேனும் இப்பட்டரைத் † துதியாது விட்டிலர். சங்கும் ஆழியும் இப்பட்டரே ஐயங்காரது புயத்துப் பொறித்தனர் என மேற்கூறிய "வானி

---

* Page 133, Epigraphia Indica, 1902, and also the foot-note †) on page 16.

† சீரங்கநாயகர் ஊசற்றிருநாமம் - காப்புச் செய்யுள்.

திருவரங்கக் கலம்பகம் - செய்யுள் 101.

திருவரங்கத்தந்தாதி - செய்யுள் 3, 101.

திருவேங்கடமாலை - செய்யுள் 101.

திருவேங்கடத்தந்தாதி - செய்யுள் 101.

நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி - செய்யுள் 110.

ட்டகீர்த்தி'' என்னும் பாட்டில் ஐயங்கார் தாமே கூறி யிருப்பதால்பராசரபட்டரே இவர்க்கு ஆசாரிய ரென்பதும், சிலர் கூறுவதுபோன்று பட்டர்வம்சத் துதித்துப் பிற்கால த்து அப்பெயர் கொண்டவரு ளொருவ ரன்றென்பதும் ஏற்படும். மேலும் இப்பட்டரது கனிஷ்ட சகோதரராகிய வியாசபட்டர் ஐயங்காரது பௌத்திரராகிய கோனேரியப்ப னையங்காருக்கு ஆசாரியர் என்பது ஸ்ரீரங்கநாயகியார் ஊசல் என்னும் பிரபந்தத்துள்ள,

''தாரங்கத் திருவரங்கர்க் கூசல் பாடிச்
சாத்தினன் பேரனென்னுந் தன்மை யாலும்
ஆருங்கண் டேதெளியு மவன்சொல் பாட்டி
னதிசயத்தை யறிவனென்னு மாசை யாலும்
பாரெங்கும் புகழ்வேத வியாச பட்டர்
பதம்பணிகோ னேரியப்பன் புன்சொல் லாகச்
சீரங்க நாயகியார்க் கொருபத் தாறு
திருவூசற் றிருநாமஞ் செப்பி னானே.''

என்னுஞ் செய்யுளாற் றெரியவருவதனாலும், கூரத்தாழ்வா ருடைய புத்திரராகிய பராசரபட்டர் காலத்தே ஐயங்கா ரிருந்திருத்தல் வேண்டுமென்னுங் கொள்கை வலியுறுகின் றது. இராமாநுஜரும், கூரத்தாழ்வாரும், பராசரபட்டரும் பதினோராவது நூற்றாண்டி னிறுதியிலும், பன்னிரண்டா வது நூற்றாண்டின் முதலிலும் இருந்திருக்கிறபடியால், பிள்ளைப்பெருமா ளையங்கார் பன்னிரண்டாவது நூற்றாண்டி னிடைக்காலத் திருந்தனரேன்று கொள்ளலியலும். பதினே ழாவது நூற்றாண்டிலாவது பதினெட்டாவது நூற்றாண்டி

லாவது இவரிருந்தன ரென்பது ஏற்றுக்கொள்ளத்தக்க தன்று. "அஷ்டப்பிரபந்தத்திலடங்கியுள்ள கலம்பகம் மாலை முதலிய பிரபந்தங்கள் அக்காலத்தில; அவை பிற்காலத் தேற்பட்டன; ஆகையா லிவரும் இந்நூல்களும் இக்காலத் தன" என்பார் சிலருளர். அத்தகையோரும் ஆய்ந்துபார்க்கில், செல்வாக்குற்று நாளடைவில் ஜீரணித்துவந்த தேவார முதலியவைகளை * ராஜ ராஜ சோழனுடைய முயற்சியினால் கி. பி. 1011 - வருஷம் எடுத்துத் தொகுத்துத் திருமுறைகளாக வகுத்த † நம்பியாண்டார் நம்பி யியற்றிய பதினோராந் திருமுறையுட் சேர்க்கப்பட்டுள்ள பிரபந்தங்களுள், கலம்பகம், மாலை முதலிய பிரபந்தங்க ளிருத்தலாலும், கி. பி. 710 - வருஷமுதல் 760 - வது வருஷம் வரையில் தொண்டை நாடாண்ட பல்லவ சக்ரவர்த்தியாகிய ‡ நந்திபோதவர்மனது சேனைத்தலைவன் பாண்டியனைத் தெள்ளாற்றின்கண் ணடைந்த போரில் வெந்நிடச் செய்து ¶ வெற்றிகொண்டதைக் குறித்துப் புகழ்ந்து அவ்வரசன

* Raja Raja Deva. 985—1012. A.D. See Epigraphia Indica, 1902, page 113.

† The Age of Sekkilar, the author of the Periyapuranam, and that of Nambi Andar Nambi, by K. Kuppuswami Mudaliyar, B. A.

‡ See page 3. Report on Epigraphy for 1889.

¶ நந்திக்கலம்பகம் செய்யுள் 4; 28; 33.

மீது நந்திக்கலம்பகம் என்னுமோர் கலம்பக மியற்றப்பட்டிருத்தலானும், திருநாவுக்கரசு நாயனார், திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்பாடிய ஏழாவது நூற்றாண்டுக்கு முன்னர் பல்லவ அரசர் § சமணரா யிருந்தகாலத்து

§ Cf. திருக்கலம்பகம், செய்யுள் 61.

"உரந்திகழும் வில்லவன்றன் சிலையையிறுத் துயர்ஞான
மகளை வேட்டு
வரந்திகழும் புகழ்ச்சோதி வளநாடு கைப்படுத்த
வரதர் கண்டீர்
பரந்தியலுஞ் சுடர்மௌலிப் பல்லவரும் பண்ணவரும்
விண்ணு டாளும்
புரந்தாரும் தொழவுறையும் பொன்னெயில்விட் டென்னிதய
நண்ணி னாரே."

திருநாவுக்கரசு நாயனார் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் என்னு மிவ்விருவர்தம் காலத்தும் பல்லவர் சமணர் என்பது திருத்தொண்டர் புராணத்தினின்றும் அறியலாம். சுந்தரமூர்த்தி நாயனார் காலத்துப் பல்லவ அரசர் சைவமரபினரா யிருந்தனர் என்பது,

"கருமையாற் றருமனார் தமர்நம்மைக் கட்டியகட்
டறுப்பிப் பானை
யருமையாந் தன்னுலகந் தருவானை மண்ணுலகங்
காவல் பூண்ட
வுரிமையாற் பல்லவர்க்குத் திறைகொடா மன்னவரை
மறுக்கஞ் செய்யும்
பெருமையார் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப்
பெற்றா மன்றே."

அருமுகக் கடவுள்மீது தொண்டைநாட்டுப் பையூர்க்கோட்டத்து ஆர்ப்பாகை யென்னு நகரின்கண்ணிருந்த உதீசிதேவ ரென்பவர் திருக்கலம்பகம் என்னும் ஒரு கலம்பக மியற்றி யிருப்பதாலும், கலம்பக முதலாய பிரபந்தங்கள் பன்னிரண்டாவது நூற்றுண்டில் இருந்திராவென்று சொல்வதற்கு மிடமில்லை யென்பது எளிதிற் றெளிதல் கூடும். ஆகவே அத்தகைய காரணத்தினுல் பிள்ளைப்பெருமாளையங்காரவர் களைப் பிற்காலத்திய கவிகளு ளொருவரெனக் கொள்ளுதல் கூடாது. மேற்கூறி யாங்கு அவர் பன்னிரண்டாவது நூற்றுண்டி னிடைக்காலத் திருந்தவர் என்று கொள்ளுதலே சால்புடைத்து.

தென்மொழி
ஆராய்ச்சிக்கழகம்,
சென்னை.
29—8—1904.

கல்குளம்-குப்புசாமி முதலியார்.

---

"பாரூர் பல்லவனூர் மதிற்காஞ்சி மாநகர்வாய்ச்
சீரூரும் புறவிற்றிரு மேற்றளிச் சிவனை
யாரூரனடியா னடித்தொண்ட னூரான் சொன்ன
சீரூர்பாடல் வல்லார் சிவலோகஞ் சேர்வாரே."

என்னு மித்தேவாரங்களாற் றெரியவருகின்றது. ஆகவே சமணரா யிருந்தகாலம் அதற்கு முற்பட்ட காலமாதல்வேண்டும். திருக்கலம்பகமும் அவர்கள் சமணராயிருந்தகாலத் தேற்பட்டது என்பது மேற் குறித்த திருக்கலம்பகம், 61-வது செய்யுளாற் றெரியவருகின்றது.

# திருவரங்கக் கலம்பகம்.

ஸ்ரீ

# திருவரங்கக் கலம்பகம்

## தனியன்கள்

### நேரிசை வெண்பா

ஆழ்வார்முன் பின்னவர்க்கு மாமறைதந் தார்தமிழால்
வாழ்வார் மணவாளர் மாண்பவருட்—டாழ்வாரு
மெம்போ லியர்க்கு மிரங்கியாங் கக்கலம்ப
கம்போத நல்கவைத்தார் காண்.

### அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

சொன்னோக்கும் பொருணோக்குந் தொடைநோக்கு நடைநோக்குந் துறையி னோக்கோ
டெந்நோக்குங் காணவிலக் கியமாவ தன்றியிதி லீடு பட்டோர்
தன்னோக்கும் புத்தியும்பத் தியும்பெறுவர் முத்தியுண்டா நாமென் சொல்கேன்
பன்னோக்க மணவாளர் பகரரங்கக் கலம்பகத்தைப் பாரீர் பாரீர்.

### காப்பு

### கட்டளைக் கலித்துறைகள்

வேதந் தொகுத்துத் தமிழ்ப்பாடல் செய்த விமலன்பொய்கை
பூதன் மயிலையர் கோன்புகழ்ச் சேரன்புத் தூரன்றொண்டர்
பாதந் தருந்துகண் மாமழி சைக்குமன் பாணன்மங்கை
நாதன் மதுர கவிகோதை பாதங்க ணண்ணுதுமே. (1)

மறைப்பாற் கடலைத் திருநாவின் மந்தரத் தாற்கடைந்து
துறைப்பாற் படுத்தித் தமிழா யிரத்தின் சுவையமிர்தங்
கறைப்பாம் பணைப்பள்ளி யானன்ப ரீட்டங் களித்தருந்த
நிறைப்பான் கழலன்றிச் சன்ம விடாய்க்கு நிழலில்லையே. (௨)

பிடிக்கும் பரசம யக்குல வேழம் பிளிறவெகுண்
டடிக்குங் குரற்சிங்க வேறனை யானெழு பாருமுய்யப்
படிக்கும் புகழெம் மிராமா நுசமுனி பல்குணமும்
வடிக்குங் கருத்தினர்க் கேதிரு மாமணி மண்டபமே. (௩)

வானிட்ட கீர்த்தி வளர்கூரத் தாழ்வான் மகிழவந்த
தேனிட்ட தார்நம் பெருமாள் குமாரர் சிவனையயன்
றானிட்ட சாபந் துடைத்தா ளரங்கர்சங் காழிபுய
னானிட்ட னென்றருள் பட்டர்பொற் றாள்கதி நந்தமக்கே. (௪)

## மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா

### இவை - எட்டடித் தரவுகள். (௨)

சீர்பூத்த செழுங்கமலத் திருத்தவிசின் வீற்றிருக்கு
நீர்பூத்த திருமகளு நிலமகளு மடிவருடச்

சிறைப்பறவை புறங்காப்பச் சேனையர்கோன் பணிகேட்ப
நறைப்படலைத் துழாய்மார்பி ஞாயிறுபோன் மணிவிளங்க

வரியதா னவர்க்கடிந்த வைம்படையும் புடைதயங்கக்
கரியமால் வரைமுளரிக் காடீன்று கிடந்தாங்குப்

பாயிரநான் மறைபரவப் பாற்கடலுட் பருமணிச்சுட்
டாயிரவாய்ப் பாம்பணைமே லறிதுயிலி னினிதமர்ந்தோய்!

மண்ணகந் துயர்நீங்க வானகந் தொழுதேத்தக்
கண்ணகன்சோ ணாட்டுக் காவிரிவாய்ப் புளினத்துப்

பம்புகதிர் விசும்பிரவி பசும்புரவி வழிவிலங்கு
செம்பொன்மதி லேழுடுத்த திருவரங்கப் பெருங்கோயி
லாணிப்பொற் றகடேரிஞ்சு மணிக்கதவ நீள்வாயின்
மாணிக்க வெயில்பரப்பும் வயிரமணி விமானத்துண்
மின்னிலங்கு தொடிவலய வியன்வலக்கை கீழ்க்கொடுத்துத்
தென்னிலங்கைத் திசைநோக்கித் திருநயனந் துயில்வோய்கேள்!

இவை - ஈரடித்தாழிசைகள். (கூ)

தேவாய்த் தேவர்க்குந் தெரியாத வொளியுருவாய்
மூவராய் மூவர்க்கு முதல்வனாய் நின்றோய் நீ.

போற்றுவார் போற்றுவதுன் புகழ்ப்பொருளே யாதலினால்
வேற்றுவா சகமடியேன் விளம்புமா றறியேனால்.

பணித்தடங்கா திமையவர்க்கும் பங்கயத்தோன் முதலோர்க்கும்
பணித்தடங்காப் புகழடியேன் பணித்தடங்கற் பாலதோ.

யாங்கடவு ளென்றிருக்கு மெவ்வுலகிற் கடவுளர்க்கு
மாங்கடவு ணீயென்றா லஃதுனக்கு வியப்பாமோ.

அனைத்துலகு மனைத்துயிரு மமைத்தளித்துத் துடைப்பதுநீ
நினைத்தவினை யாட்டென்றா னின்பெருமைக் களவாமோ.

கருதரிய வுயிர்க்குயிராய்க் கரந்தெங்கும் பரந்துறையு
மொருதனிநா யகமென்றா லுன்புகழ்க்கு வரம்பாமோ.

இவை - ஈரடி அராகங்கள். (ச)

உருவென வருவென வுளனென விலனென
வருமறை யிறுதியு மறிவரு நிலைமையை.

இவரிவ ரிறையவ ரெனமன வுறுதியொ
டவரவர் தொழவரு சமயமு மருளினை.

கடுவெளி கனல்புனல் ககனமொ டகலிட
முடுபதி கதிரவ னுருவமு மருளினை.
கடிமல ரடியிணை கருதினர் பெறுகென
வடிநடு முடிவற வருள்பர கதியினை.

இவை பெயர்த்தும் - ஓரடித்தாழிசைகள். (சு)

ஒருநாலு முகத்தவனே டுலகீன்று மென்பரதுன்
றிருநாபி மலர்ந்ததல்லாற் றிருவுளத்தி லுணராயால்.
மேருகிரி யுடலவுணன் மிடல்கெடுத்தா யென்பரதுன்
கூருகிரே யறிந்ததல்லாற் சோவேநீ யறியாயால்.
பன்றியாய்ப் படியெடுத்த பாழியா யென்பரது
வென்றியா ருனதெயிற்றின் மென்றுகள்போன் றிருந்ததால்.
அண்டமெலா முண்டையென்பா ரறியாதா ரங்கவைநீ
யுண்டருளுங் காலத்தி லொருதுற்றுக் காற்றுவால்.

இவை - நாற்சீர் ஓரடி அம்போதரங்கம். (உ)

நஞ்சமு மமுதமு நரகும் வீடுமாய்
வஞ்சமு ஞானமு மறப்பு மாயினை.
இருவினைப் பகுதியு மின்ப துன்பமுங்
கருணையும் வெகுளியுங் கருத்து மாயினை.

இவை - முச்சீர் ஓரடி அம்போதரங்கம். (சு)

அலைகடல் வயிறுக லக்கினை.
அவுணரை மதுகைய டக்கினை.
மலைகட களிறுவ தைத்தனை.
மலைதலை கவிழவெ டுத்தனை.

இவை - இருசீர் ஓரடி அம்போதரங்கம். (அ)

மண்ணை விண்டனை.
வெண்ணெ யுண்டனை.
மருதி டந்தனை.
எருத டர்ந்தனை.
உண்ணி றைந்தனை.
எண்ணி றந்தனை.
ஒருமை யாயினை.
பெருமை மேயினை.

தனிச்சொல்

எனவாங்கு.

பதினுன்கடி நிலமண்டில ஆசிரியச்சுரிதகம்

மலர்தலை யுலகத்துப் புலமை சான்ற
பதின்மரும் பணித்த பாடலோ தையொடு
முதுமறை கறங்க முரச மார்ப்ப
வலம்புரி பிளிறும் பொலம்புரி கோயி
லாழியஞ் செல்வ வாதியம் பரம
வாழி வாழி மாயோய் வாழி
நெடியோய் வாழி நின்மாட் டொன்றே
யடியேன் வேண்டுவ தஃதுநீ மறுக்கேல்
பூவரு மயன்முதல் யாவரு மறியா
மூவுல களந்தநின் சேவடி வாழ்த்தித்
தொழுதகைத் தொண்டர்தந் தொண்டருட் சேர்க்கா
தெழுவகைத் தோற்றத் தின்னுப் பிறப்பி
னென்பொழி யாக்கையுட் சேர்ப்பினு மவர்பா
லன்பொழி யாமை யருண்மதி யெனக்கே. (க)

நேரிசைவெண்பா

எனக்கே திருவரங்க னேபிரா னெம்மான்
றனக்கே யடிமை தமியேன்—புனக்கேழ்

மருத்துளவோன் மேலன்றி மற்றொருவர் மேலென்
கருத்துளவோ வாராயுங் கால். (உ)

### கட்டளைக்கலித்துறை

காலா யிரமுடி யாயிர மாயிரங் கைபரப்பி
மேலா யிரந்தலை நாகங் கவிப்பவிண் பூத்தகஞ்சம்
போலா யிரங்கண் வளரும்பி ரான்பொன் னரங்கனென்றே
மாலா யிரங்கவல் லார்க்கெய்த லாந்திரு வைகுந்தமே. (ங)

### அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

வைகலந்த மூவிலைவே லீசற்கும் வாசவற்கும்
வாசப் பூமேன்
மெய்கலந்த நால்வேத விரிஞ்சனுக்கு மேலாய்வீற்
றிருப்பர் மாதோ
பைகலந்த பாம்பணைமேற் றிருவரங்கப் பெருநகருட்
பள்ளி கொள்ளுங்
கைகலந்த நேமியான் றிருநாமத் தொருநாமங்
கற்றோர் தாமே. (ச)

### எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

கற்றா ரெனினும் பதினா லுலகுங்
கண்டா ரெனினுந் தண்டா மிகுபற்
றற்றா ரெனினுந் திருமா லடியா
ரல்லா தவர்வீ டில்லா தவரே
பொற்றா மரையாள் கணவன் றுயிலும்
பொற்கோ யிலையே புகழ்வார் பணிவார்
மற்றா ரெனினும் பெற்றா ரவரே
வானோர் திருமா மணிமண் டபமே. (ரு)

### அறுசீர்க்கழிநெடில் ஆசிரியச் சந்தவிருத்தம்

மண்டலமும் விண்டலமு நின்றவட குன்றமும்
வளைந்தமலை யுங்கடலுமு
தண்டமும கண்டமும யின்றவர் துயின்றருள
ரும்பதிவி ரும்பிவினவிற்
கொண்டல்குழு றுங்குடகி ழிந்துமத குந்தியகில்
கொண்டுநுரை மண்டிவருநீர்
தெண்டிரை தொறுந்தாள முங்கனக முஞ்சிதறு
தென்திருவ ரங்கநகரே. (௬)

## புயவகுப்பு

### ஆசிரியவண்ண விருத்தம்

நருகதிர்வழங்கு தகடுபடுசெம்பொ
னவமணிகுயின்ற தொடியணியணிந்து
ககனவிலிடுநீல வெற்பொத்திருந்தன;
நறியபுதுமன்ற றிசைமுழுதுமண்ட
நறவுகுதிகொண்ட துளவணியலங்கன்
மதுகரமொருகோடி சுற்றப்புனைந்தன;
களினமடமங்கை குவலயமடந்தை
சனகனதணங்கு பொதுவர்மகளென்றிவ்
வனிதையர்தனபார மொத்தக்குழைந்தன;
கதிபதிசுழன்று கதறிநுரைசிந்த
வரவகடுரிஞ்சி யலறவலமந்து
வடவரையுடதேய கட்டுக்கடைந்தன;
இகலியிருகுன்றி விருசுடரொழுந்து
பொருவதெனவிம்ப மதிமுகமிலங்கு
மிருகுழையிருபாட லைப்பச்சிறந்தன;

இணையறநிமிர்ந்து வலியொடுதிரண்டு
புகழொடுபரந்து புழுகொடுமணைந்து
கலவையினணிசேறு துற்றுக்கமழ்ந்தன;

எதிரொருவரின்றி யகிலவுலகுந்த
னடிதொழவிருந்த விரணியன்மடங்க
முரணியவரைமார்ப மெற்றிப்பிளந்தன;

எறிகடல்கலங்கி முறையிடவெகுண்ட
நிசிசரரிலங்கை யரசொடுமலங்க
வொருசிலை[illegible]குகால்வ ளைத்துச்சிவந்தன;

மிகுகளவினின்ற விளவுகனிசிந்தி
மடியவிடுகன்று குணிலெனவெறிந்து
பறவையினகல்வாய்கி ழித்துப்பகிர்ந்தன;

வெறிபடுகுருந்தை முறிபடவடர்ந்து
கூடமகிழ்ந்து குரவைகள்பிணைந்து
பொருதொழிலெருதேழு செற்றுத்தணிந்தன;

வெடிபடமுழங்கி யெழுமுகிலுமண்ட
ரொடுநிரைதியங்க வெறிதிவலைகண்டு
தனடவரைகுடையாவெ டுத்துச்சுமந்தன;

விழிவடவைபொங்க வெதிர்பொரநடந்த
களிறுளம்வெருண்டு பிளிறிடமுனிந்த
புகர்முகவிருகோடு பற்றிப்பிடுங்கின;

அகலிடமுமும்ப ருலகமுநடுங்கி
யபயமடியெங்க ளபயமெனவந்து
விழுதொறுமிடையூற கற்றிப்புரந்தன;

அருகுறவிளங்கு மெரிதிகிரிசங்கம்
வெயிலொருமருங்கு நிலவொருமருங்கு
மெதிரெதிர்கதிர்வீச விட்டுப்பொலிந்தன;

அருமறைதணிந்த பொருண்முடிவையின்சொ
வழுதொழுகுகின்ற தமிழினில்விளம்பி
யருளியசடகோபர் சொற்பெற்றுயர்ந்தன;
அரவணைவிரும்பி யறிதுயிலமர்ந்த
வணிதிருவரங்கர் மணிதிகழ்முகுந்த
ரழகியமணவாளர் கொற்றப்புயங்களே. (எ)

## நேரிசை வெண்பா

பூமான் குடையானைப் பொன்னரங்கத் தானை
அயனுந் திருவுந்தி யானை—வியனும்
பரகதிக்குக் காதலாய்ப் பாடினேன் கண்டீர்
நரகதிக்குக் காணும ணுன். (அ)

## கட்டளைக்கலித்துறை

நானந்த வைகுந்த நாடெய்தி வாழிலென் ஞாலத்தன்றி
ஈனந்த வாத நிரயத்து வீழிலென் யானடைந்தேன்
கோனந்தன் மைந்தனை நான்முகன் றந்தையைக் கோயிலச்சு
தானந் தனையெனக் காரா வமுதை யரங்கனையே. (கூ)

## எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

அரவின டித்தானு முரவிலொ டித்தானு
மடவிக டந்தானும் புடவியி டந்தானும்
குரவைபி ணைத்தானும் பரவைய ணைத்தானுங்
கோசலை பெற்றானும் வீசலை யுற்றானும்
முரனைய றுத்தானுங் கரனையொ றுத்தானு
முத்திய ளித்தானு மத்திவி ளித்தானும்
பரமப தத்தானுஞ் சரமவி தத்தானும்
பாயல்வ டத்தானுங் கோயிலி டத்தானே. (கய)

## கட்டளைக்கலித்துறை

தானே தனக்கொத்த தாட்டா மரைக்குச் சரண்புகுந்தா
ளானே னினியுன் னருளறி யேனென தாருயிரே
தேனேயென் றீவினைக் கோர்மருந் தேபெருந் தேவர்க்கெல்லாங்
கோனே யரங்கத் தரவணை மேற்பள்ளி கொண்டவனே. (கக)

## மேகவிடுதூது

### நேரிசைவெண்பா

கொண்டல்கா[illegible]ம்மைக்குறித்தேதொழுகின்றேன்
அண்டர்காணுவரங்கத்தம்மானைக்—கண்டு
மனத்துளவத்தைப்படுமென்மையெல்லாஞ்சொல்லிப்
புனத்துளவத்தைக்கொணரீர்போய். (கஉ)

## கலிவிருத்தம்

போயவனி யிற்சிலபு றச்சமய நாடும்
பேயறிவை விட்டெழுபி றப்பையும றுப்பீ
ராயனைய னந்தனைய னந்தசய னத்தெம்
மாயனைய ரங்கனைவ ணங்கிமரு வீரே. (கங)

## எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

மருவு தந்தையுங் குருவு மெந்தையு
மருள்கெ டுப்பது மருள்கொ டுப்பது
முருகு நெஞ்சமும் பெருகு தஞ்சமு
முரிய ஞானமும் பெரிய வானமுந்
திருவ ரங்கனா ரிருவ ரங்கனார்
செங்கண் மாயனா ரெங்க ளாயனா
ரருண்மு குந்தனார் திருவை குந்தனா
ரமல நாதனார் கமல பாதமே. (கச)

### எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

பாதியா யழுகியகால் கைய ரேனும்
　　பழிதொழிலு மிழிகுலமும் படைத்தா ரேனும்
ஆதியா யரவணையா யென்ப ராகி
　　லவரன்றோ யாம்வணங்கு மடிக ளாவார்
சாதியா லொழுக்கத்தான் மிக்கோ ரேனுஞ்
　　சதுர்மறையால் வேள்வியாற் றக்கோ ரேனும்
போதினான் முகன்பணியப் பள்ளி கொள்வான்
　　பொன்னரங்கம் போற்றாதார் புலையர் தாமே. (௧௫)

### கட்டளைக்கலித்துறை

புலையாம் பிறவி பிறந்தென்செய் தோம்பொன்னி பொன்கொழிக்கு
மலையார் திருவரங் கத்தெம்பி ரானம தன்னையொடுந்
தொலையாத கானங் கடந்தவந் நாட்டடந் தோறம்புல்லாய்ச்
சிலையாய்க் கிடந்தில மேநெஞ்ச மேகழ நீண்டுகைக்கே. (௧௬)

### அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

தீண்டா வழும்புஞ் செந்நீருஞ்
　　சீயு நரம்புஞ் செறிதசையும்
வேண்டா நாற்ற மிகுமுடலை
　　வீணே சுமந்து மெலிவேனோ
நீண்டாய் தூண்டா விளக்கொளியாய்
　　நின்றா யொன்றா யடியாரை
யாண்டாய் காண்டா வனமெரித்த
　　வரங்கா வடியேற் கிரங்காயே. (௧௭)

## தவம்

### கலிநிலைத்துறை

காயிலை தின்றுங் கானிலு றைந்துங் கதிதேடித்
தீயிடை நின்றும் பூவலம் வந்துந் திரிவீர்கா

டாயிலு மன்பன் பூமக ணன்பன் றடநாகப்
பாயன்மு குந்தன் கோயில ரங்கம் பணிவீரே. (௧அ)

[இதுவுமது]

கட்டளைக்கலித்துறை

வீரங் காகிய வைவரை மாற்றி விடவாவின்
போரரங் காக நடித்தபொற் றாள்பற்றிப் பொன்னிநன்னீர்ச்
சீரரங் காநின் றெழும்பனென் றேசிந்தை செய்யிலது
கூரரங் காநெஞ்ச மேவஞ்ச மாயக் கொடுவினைக்கே. (௧௯)

நேரிசை வெண்பா

கேசவனை யேசெவிகள் கேட்க திருவரங்கத்
தீசனையே சென்னி யிறைஞ்சிடுக—நேசமுடன்
கண்ணனையே காண்கவிரு கண்ணிணர்கொள் காயாம்பூ
வண்ணனையே வாழ்த்துகவென் வாய். (௨௦)

இரங்கல்

எழுசீர்க்கழி நெடில் ஆசிரியச்சந்தவிருத்தம்

வாயினி ரங்கினை யாரமெ றிந்தனை வால்வளை சிந்தினை தண்
பாயலை யுந்தினை மாலைய டைந்தனை பாரி லுறங்கிலை யாற்
கோயில ரங்கனை மாகன கந்திகழ் கோகன கம்பொலியு
மாயிழை நண்பனை நீயும் விரும்பினை யாகுமெ டுங்கட லே. (௨௧)

[இதுவுமது]

கலிநிலை வண்ணத்துறை

கடல்வழி விடநிசி சார்பொடி படவிரு கண்சீறி
வடகயி லையிலெழு விடைதழு வியதும றந்தாரோ
வடலர வயளியி லறிதுயி லமருமு ரங்கேச
ரிடர்கெட வருகிலர் முருகலர் துளவுமி ரங்காரே, (௨௨)

## நேரிசை வெண்பா

இரங்கத் தனித்தனியே யெய்துகின்ற துன்பத்
தரங்கத்தை யேதாற் றடைப்பீ—ரரங்கர்க்குக்
கஞ்சந் திருப்பாதங் கார்மேனி யென்றவர்பா
னெஞ்சந் திருப்பாத நீர். (உ௩)

## இ ர ங் க ல்

### தாழிசை

நீரிருக்கமட மங்கைமீர்கினிக
டாமிருக்கமது காமெலா
நிறைந்திருக்கமட வன்னமுன்னனிலை
யாயிருக்கவுரை யாமல்யா
ஞரிருக்கிலுமெ னெஞ்சமல்லதொரு
வஞ்சமற்றதுணை யில்லையென்
ருதாத்தினொடு தூதுவிட்டபிழை
யாரிடத்துரைசெய் தாறுவேன்
சீரிருக்குமறை முடிவுதே டரிய
திருவரங்கரை வணங்கியே
திருத்துழாய்தரில் விரும்பியேகொடு
திரும்பியேவருத லின்றியே
வாரிருக்குமுலை மலர்மடந்தையுறை
மார்பிலேபெரிய தோளிலே
மயங்கியின்புற முயங்கியென்னையு
மறந்துதன்னையு மறந்ததே. (உ௪)

[இதுவுமது]

### நேரிசை வெண்பா

மறக்குமோ காவின் மதுவருந்தி யப்பாற்
பறக்குமோ சங்கிமுன் பாமோ—சிறக்கத்

தருவரங்கள் கேட்குமோ தாழ்க்குமோ நெஞ்சே!
திருவரங்கர் பாற்போன தேன். (௨௫)

### அம்மானை

#### மடக்குக்கலித்தாழிசை

தேனமருஞ் சோலைத் திருவரங்க ரெப்பொருளு
மானவர்தா மாணபெண் ணலியலர்கா ணம்மானை
யானவர்தா மாண்பெண் ணலியலரே யாமாகிற்
சானகியைக் கொள்வரோ தாரமா யம்மானை
தாரமாய்க் கொண்டதுமோர் சாபத்தா லம்மானை. (௨௬)

### இரங்கல்

#### மடக்குத்தாழிசை

மானையெய்தவ ரின்னமென்மட மானையெய்திலர் நேமியான்
மாலை தந்தவர் பைந்துழாய்மது மாலைதந்தில ரிந்திரன்
சோனைமாரிவி லக்கிவிட்டவர் சொரிகண்மாரிவி லக்கிலார்
சுரர்களுக்கமு தங்கொடுத்தவர் சோதிவாயமு தங்கொடார்
தானையவர்கொ டிக்களித்தவர் தானைகொண்டத ளிக்கிலார்
[illegible]ற்கிர வைத்தடுத்தவர் தையலுக்கிர வைத்தடா
ரானைமுன்வரு மன்புளார்முலை யானைமுன்வரு மன்பிலா
ரணியரங்கர்ந டத்துநீதிய நீதியாக விருந்ததே. (௨௭)

#### எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

இருளினும் வெளியினு மருளினுந் தெருளினு
மின்பமே யடையினுந் துன்பமே மிடையினு
மொருவர்முன் புகழினு மிருவர்பின் பிகழினு
மூனிறந் தழியினும் யான்மறந் தொழிவனோ

சுருதிசின் றேவிடுங் காதலர் நாலொடுந்
　　துவளுநூன் மார்பமும் பவளவாய் மூரலுந்
திருவரங் கேசர்தஞ் சுருள்கருங் கேசமுஞ்
　　செய்யநீண் முடியுமத் துய்யசே வடியுமே. (உஅ)

## நேரிசை வெண்பா

சேவடியான் மூவடிமண் டென்னரங்கத் தம்மானீ
மாவலிபால் வாங்கியநாண் மண்ணுலகோ—மூவுலகும்
வீசுங்கா லோவலிய வெவ்வினையே னெஞ்சமோ
பேசுங்கா லேதோர் பெரிது. (உகூ)

## நாரைவிடுதூது

### கட்டளைக்கலித்துறை

பெருவரங் கேசவ னல்லா தருள்செய்யும் பேரிலையே
ளொருவரங் கேசற்று மோதாரென் காதலை யோடியெங்குங்
கருவரங் கேசலிக் சத்திரி வோர்க்குக் கருணைசெய்யுந்
திருவரங் கேசற்கு நீசொல்லல் வேண்டுஞ் செழுங்குருகே. (ஙo)

## இரங்கல்

### தாழிசை

குருகுறங்கு கானலே கருநிறங்கொள் பானலே
　　கொடியிருண்ட ஞாழலே நெடியகண்ட னீழலே
பொருதரங்க வேலையே நிருதரங்க மாலையே
　　போதயின்ற கம்புளே யேதையின்றி யம்புகேன்
திருவரங்க ரிணையிலா வொருபுயங்க வணையிலே
　　திகழ்வலக்கை கீழதா முகிழ்மலர்க்கண் வளர்வதோர்
கருணைநம்பு வதனமு மருணவிம்ப வதரமுங்
　　காவிகொண்ட மேனியு மாவிகொண்டு போனவே. (ஙக)

பன்னிருசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

போனகம் பதினாலு புவனந் திருப்பள்ளி
பொறியரவ ணைப்பாற்கடல்
பூமடந் தையுநில மடந்தையுந் தேவியர்பு
ராதனம றைக்குமெட்டா
வானகம் பேரின்ப முடன்வீற்றி ருக்குமிடம்
வாகனம் வினதேயன்
மலர்வந்த நான்முகன் றிருமைந்த னவன்மைந்தன்
மதிசூடி வாசவன்முதற்
றேனகுந் தொடைமௌலி முப்பத்து முக்கோடி
தேவருன தேவல் செய்வோர்
திங்களும் பரிதியுஞ் சங்கமுந் திகிரியுந்
திரிவனவு திற்பனவுமா
மேனமன் னுயிர்முழுதும் விளையாட னீவகுத்
திட்டபல மாயையதனு
லெழிலரங் கந்துயிலு மெம்பிரா னின்பெருமை
யாவரே வாழ்த்துவாரே. (கஉ)

[பிரிவாற்றுது வருந்துந் தலைவி இரங்கல்]

இதுவும் அது

வாழு மவுலித் துழாய்மணமு
மகரக் குழைதோய் விழியருளு
மலர்ந்த பவளத் திருநகையு
மார்பி லணிந்த மணிச்சுடருந்
தாழு முளரித் திருநாபித்
தடத்து ளடங்கு மனைத்துயிருஞ்
சரண கமலத் துமைகேள்வன்
சடையிற் புனலுங் காணேனு

லாழ முடைய கருங்கடலி
னகடு கிழியச் சுழித்தோடி
யலைக்குங் குடகா விரிநாப்ப
ணவா யரவிற் றுயின்முதை
யேழு பிறப்பி லடியவரை
யெழுதாப் பெரிய பெருமானை
யெழுத வரிய பெருமானென்
றெண்ணு தெழுதி யிருந்தேனே. (௧௧)

[இதுவும் அது]

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

இருங்குங் குமத்தோ ளரங்கேசர் முன்னா
ளிலங்கா புரங்கா வலன்காலி னால்வீழ்
கருங்குன்று போன்மண் முகங்குத்தி வீழக்
கண்டா ரெனக்கின்று தண்டா ரளித்தான்
மருங்கெங்கும் வம்போது வார்வா யடங்கும்
வாடைக்கு நிலமங்கை யாடைக்கு நோகேன்
நெருங்குந் தனஞ்சந் தனம்பூச லாகு
நீளாதி ராமையன் மீளாதிராதே. (௧௨)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

தேடு கின்றனை யைம்பொறி களுக்கிரை
தேடியுங் கிடையாமல்
வாடு கின்றனை வீடுசென் றென்றினி
மருவுவை மடநெஞ்சே!
ஆடு கின்றிலை யழுகிலை தொழுகிலை
யரங்கனைக் கரங்கூப்பிப்

யாடு கின்றிலை நினைகிலை பதின்மர்தம்
பாடலின் படியாயே. (௩௫)

## எழுசீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்

ஆயினை மனையைச் சேயினைப் பிதாவை
யனத்தினைத் தனத்தினை விரும்பும்
பேயினை மறந்து நோயினை மூப்பைப்
பிறப்பினை யிறப்பினைத் துடைப்பீர்
ஆயனை முளரி வாயனை யெங்க
ளமலனைக் கமலனைப் பயந்த
தாயனை நெடிய மாயனை வடபாற்
றரங்கனை யரங்கனைத் தொழுமே. (௩௬)

## மடக்குக் கட்டளைக்கலிப்பா

தோழப்பெ றாதந்த வாரணத் தந்தமே
தொட்டி றுத்ததும் வாரணத் தந்தமே
வழுத்து தாண்முன்பு வனங்க டந்ததே
மலர்ந்த வுந்தி புவனங்க டந்ததே
ஒழித்த துங்குழைச் சங்கரன் சாபமே
யொசித்த துங்குழைச் சங்கரன் சாபமே
அழித்த தும்பொரு தானவ ரங்கமே
யரித னூரினி தானவ ரங்கமே. (௩௭)

## நேரிசை ஆசிரியப்பா

[உயிர்வருக்கமோனை]

அரங்க மாளிகைக் கருங்கடல் வண்ணனை
ஆலிமா முகிலை வாலி காலனை
இந்த ளூருறை யெந்தைபெம் மானை

ஈச னான்முகன் வாசவன் றலைவனை
உள்ளுவா ருள்ளத் துள்ளுறை சோதியை
ஊரக நின்றரு ணீரகத் தடிகளை
எவ்வுண் மாயனைத் தெய்வநா யகனை
ஏர்மலி சிகரத் தேர்மலை யாதியை
ஐவா யரவி லறிதுயி லமலனை
ஒருகான் மொழியினு மொழிகுவை நெஞ்சே!
ஓதநீர் ஞாலத் துழலும்
ஔவியப் பிறப்பி லழுந்திவா டேலே. (கூஅ)

[இரங்கல்]

பதினான்குசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்

வாடி யோட வனச மன்ன
விருகண் வெள்ள மருவிபோன்
மருவி யோட மதனன் வாளி
யுருவியோட வாடையூ
டாடி யோட வன்றி லோசை
செவியி லோட வண்டுழா
யாசை யோடு மெங்கள் பேதை
யாவி யோட னீதியோ
மோடி யோட வங்கி வெப்பு
மங்கி யோட வைங்கரன்
முடுகி யோட முருக னோட
முக்க ணீசன் மக்களைத்
தேடி யோட வாண னாயி
ரம்பு யங்கள் குருதிநீர்
சிந்தி யோட நேமி தொட்ட
திருவ ரங்க ராசரே. (கூக)

### எண்சீராசிரியச் சந்தவிருத்தம்

ஈருக ருந்தியைம் பொறிவ ருந்தரும்
தவர்க ளண்டர்குஞ் சாமு கன்குகன்
பரிதி சந்திரன் சிவன யன்புரந்
தானி ரந்தாம் பரவு மெந்தையூர்
குருகை தஞ்சைதென் கணபு ரங்குறுங்
குடிகு டந்தைவண் வேளை யிந்தளூர்
இருவை குந்தமஞ் சனசி லம்பயிந்
திரபு ரஞ்செழுந் திருவ ரங்கமே. (௪௦)

### மடக்குக் கொச்சகக்கலிப்பா

திருவரங்கந் திருக்கோயில் சேர்ந்துமதி திருக்கோயில்
தருவமென்றும் வைகுந்தந் தயங்கொளிசேர் வைகுந்தம்
ஒருமருங்கி னந்துடையா ரொழிந்தொர்சன னந்துடையார்
மருவமறந் திருப்பீரே வணங்கமறந் திருப்பீரே. (௪௧)

### [சித்து]

### கட்டளைக்கலிப்பா

திருப்பொற்பாவைக்குக் கஞ்சம்பொன்னுக்கிய
சித்தரேஞ்சுத்தக் காயாமலரென
உருப்பொற்பான திருவரங்கேசனு
ரூரகத்துநின்றூர் சென்றிறைஞ்சினோம்
இருப்புப்பாடகங் காட்டினர்யாமவர்க்
கிரும்பையாடக மாக்கினெமீயத்தை
கருக்கிவெள்ளிய தாகவுருக்குவோ
ரமதுவித்தைக் கழுதேயருமையே. (௪௨)

[இதுவும் அது]

கட்டளைக்கலித்துறை

அரும்பித் தளையவிழ் நாண்மாலை மார்ப னரங்கனெங்கள்
பெரும்பித் தளையும் பிறப்பறுத் தாண்டபி ரான்சித்தரேம்
தரும்பித் தளையுந் தராவும்பொன் னாக்கித் தருவெமப்பா
திரும்பித் தளையினு நெய்பா லமுதினுஞ் சிந்தனையே. (சங)

இருவிகற்ப நேரிசை வெண்பா

சிந்திக்கத் தித்திக்குஞ் செவ்வாய் துவர்த்துப்பாம்
புந்திக்கு ளேயின் புளிமேவு—நந்தங்
கருவரங்கங் கைத்தழலுங் காவிரியி னூடே
திருவரங்கத் தேவளருந் தேன். (சச)

கட்டளைக்கலித்துறை

தேனந்து சோலை யரங்கேசர் சேவடி மேல்விசயன்
தானந்த நாளையிற் சாத்திய மாலையுந் தாள்விளக்கும்
வானந்த ருங்கங்கை நன்னீருஞ் சென்னியில் வைக்கப்பெற்ற
வானந்தந் தானல்ல வோமுக்க ணுன்மன்று ளாடவதே. (சரு)

[தலைமகளது உருவெளிப்பாடு கண்ட தலைமகன் இரங்கல்]

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

ஆடும் படநா கணைமே லணையு
மமலன் கமலத் தவனுஞ் சிவனு
நாடுக் திருமா றுயில்கோ யிலின்வாய்
நறைவார் பொழிலூ டுறைவா ரளகக்
காடுங் குழையைச் சாடுங் குவளைக்
கண்ணுங் குதலைப் பண்ணுங் கரியின்

கோடுந் தாளத் தோடும் புருவக்
கோதண் டமுமே மூதண் டமுமே. (சசு)

[கைக்கிளை]

### எழுசீர்க்கழிநெடில் ஆசிரியச் சந்தவிருத்தம்

அண்டமுழு துண்டவ ருமிழ்ந்தவ ரிடந்தவ
ரளந்தவர் வளர்ந்தரு ளுமா
சண்டபண வைந்தலை யனந்தசய னந்திகழ்
தருந்திருவ ரங்கர்வரை மேற்
கண்டதொரு கொம்பதி லிரண்டுமக ரங்களொரு
கஞ்சமிரு வெஞ்சிலை மணங் [டையிரு
கொண்டதொரு கொண்டலிரு கெண்டையொரு தொண்
கும்பமொரு செம்ப ணிலமே. (சஎ)

[இரங்கல்]

### அறுசீராசிரிய விருத்தம்

செம்பொன் னரங்கத் தரங்கநீர்ச்
சீதள சந்திர வாவிசூழ்
கம்புள் ளுடன்பயி லுறைகாள்!
காதலை யென்சொலி யாறுவேன்
வெம்பனி வந்தது வந்தபின்
வேனிலும் வந்தது வேனில்போய்ப்
பைம்புயல் வந்தது சென்றநம்
பாதகர் வந்திலர் காணுமே. (சஅ)

[சம்பிரதம்]

பன்னிருசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

காணாத புதுமைபல காட்டுவன் கட்செவிக
ளெட்டையு மெடுத்தாட்டுவன்
கடல்பருகு வன்பெரிய கனகவரை யைச்சிறிய
கடுகினி லடைத்துவைப்பன்
வீணார வாரமூ தண்டமுற விளைவிப்ப
னிரவுபகன் மாறுடுவன்
விண்ணையு மறைப்பனெழு மண்ணையு மெடுப்பனிவை
விளையாடும் வித்தையன்றால்
நீணாக ணைப்பள்ளி யிற்றிருவ ரங்கத்து
நெடிதூழி துயிலும்பிரான்
நெற்றிக்க ணனவனை நான்முகனை வாசவனை
நிமிருமிரு சுடர்முதலாச்
சேணாடர் யாவரையு மடிமைகொண் டவரவர்
சிரத்திற் பொறித்துவிட்ட
திருச்சக் கரப்பொறி யிலாதவொரு கடவுளைத்
தேடியினி முன்விடுவனே. (௬௧)

[இடமணித்தேன்னுதல்]

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

முன்னமேழ் புரவியா ரிரவிகாய் வெயிலினான்
முத்தரும் பியகலா முழுமதித் திருமுகத்
தன்னமே யின்னமோர் காவதம் போதுமே
லகலுமிப் பாலையப் பாலரைக் காவதம்
என்னையா ளுடையவன் றுயிலரா வமளியு
மிலகுபொற் கோயிலு மிந்துவின் பொய்கையும்

புன்னைவாய் நீழலும் புரிசையும் மதுகரம்
பூவிரித் துறையுமக் காவிரித் துறையுமே. (௫௦)

[தோழி தலைமகனது இரவுக்குறி விலக்கல்]

கட்டளைக்கலித்துறை

துறைமதி யாமலிக் கான்யாறு நீந்திச் சுரங்கடத்தல்
நிறைமதி யாளர்க் கொழுக்கமன் றானெம் மாலரங்கத்
திறைமதி யாவரு மாரா வமிர்தன்ன விந்துநுதற்
குறைமதி யாள்பொருட் டாற்கங்குல் வாரலெங் கொற்றவனே. ()

[மறம்]

எண்சீர் ஆசிரியவிருத்தம்

கொற்றவன்றன் றிருமுகத்தைக் கொணர்ந்த தூதா!
குறையுடலுக் கோமறவர் கொம்பைக் கேட்டாய்
அற்றவர்சேர் திருவரங்கப் பெருமா டோழ
னவதரித்த திருக்குலமென் றறியாய் போலு
மற்றதுதான் றிருமுகமே யானா லந்த
வாய்செவிகண் மூக்கெங்கே மன்னர் மன்னன்
பெற்றவிள வரசானா லாலின் கொம்பைப்
பிறந்தகுலத் துக்கேற்கப் பேசு வாயே. (௫௨)

[இதுவும் அது]

பதினான்குசீர் ஆசிரியவிருத்தம்

பேச வந்த தூத! செல்ல
ரித்த வோலை செல்லுமோ
பெருவ ரங்க ளருள ரங்கர்
பின்னை கேள்வர் தாளிலே

பாசம் வைத்த மறவர் பெண்ணை
நேசம் வைத்து முன்னமே
பட்ட மன்னர் பட்ட தெங்கள்
பதிபு குந்து பாரடா
வாச லுக்கி டும்ப டல்க
வித்து வந்த கவிகைமா
மகுட கோடி திணைய ளக்க
வைத்த காலு நாழியும்
வீசு சாம ரங்கு டிற்றொ
டுத்த கற்றை சுற்றிலும்
வேலி யிட்ட தவர்க ளிட்ட
வில்லும் வாளும் வேலுமே. (௩௬)

[மடக்கு]

இருவிகற்ப நேரிசை வெண்பா

வேலையுல கிற்பிறக்கும் வேலையொழிந் தோமில்லை
மாலையரங் கேசனைநா மாலையினுங்—காலையினும்
உன்னினைந் தோமில்லை யுடலெடுத்த வன்றுமுதல்
என்னினைந் தோநெஞ்சே யிருந்து. (௩௭)

[இயலிடங் கூறல்]

அறுசீராசிரிய விருத்தம்

இரும்புவனம் விரும்புவன மணியரங்கர் பணியரங்க
ரிமய நண்ப [னைக்கு
வருங்கொடியின் மருங்கொடியின் மனங்குழைக்குங் கனங்கு
மனங்கன் சாபக்
கரும்புருவம் பொரும்புருவ முத்தநகை யொத்தனகை
காந்தள் பூந்தேன்

மருங்குழலுங் கருங்குழலு முருகுவளை யிருகுவளை
மழைக்கண் டாமே. (௬௭)

[இதுவும் அது]

பதினான்குசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

[இதனுள் கேசாதிபாதவரை ௩௨ - அவயவங்களும் அவற்றின் உவமானங்களோடு காண்க.]

மழைபிறை சிலைவேல் வள்ளையெள் ளிலவின்
மலர்முல்லை மதிவளை கழையாழ்
வாரிசங் களிறு தந்தைவாய் கலச
மணிவட பத்திர மெறும்பூர்
அழகுநீர்த் தரங்கந் துடிசுழி யரவ
மரம்பைவெண் டிளவரா லாமை
யணிதரா சிணைகந் தூகந்துகிர் தாள
மம்புய மரங்கநா டனையார்
குழனுதல் புருவம் விலோசனங் காது
நாசிவாய் நகைமுகங் கண்டங்
குலவுதோண் முன்கை யங்கைமெல் விரல்கள்
கூருகிர் கொங்கைகண் வயிறு
விழைதரு முரோமம் வரையிடை யுந்தி
விரும்புமல் குற்றொடை முழந்தாண்
மிளிர்கணைக் கால்கள் புறவடி பரடு
மென்குதி விரனகர் தாளே. (௬௮)

[கைக்கிளை]

மருட்பா

தாளிரண்டும் பாரொன்றுந் தார்வாடும் வேர்வாடும்
வாளிரண்டுங் காதிரண்டில் வந்திமைக்கும்—கோளிரண்டும்

ஐவகைப் பூத மமைத்தருள ரங்கர்
மைவளர் சோலை மலையில்
தெய்வ மல்லளித் திருவுரு வினளே. (௫௭)

[ஊசல்]

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

உருமாறிப் பலபிறப்பும் பிறந்துஞ் செத்து
மூசலா டுவதடியே னொழியும் வண்ணம்
கருமாயத் தென்னெஞ்சைப் பலகை யாக்கிக்
கருணையெனும் பாசத்தைக் கயிறுப் பூட்டி
மருமாலைத் துளவசைய வாடி ரூசல்
மணிமகரக் குழையசைய வாடி ரூசல்
திருமாது புவிமாதோ டாடி ரூசல்
திருவரங்க ராசரோ யாடி ரூசல். (௫௮)

கலிநிலைத்துறை

ஊசலவ டம்போ லூசக டம்போ லொழியாமே
நாசவு டம்போ டாவிசு ழன்றே நலிவேனோ
வாசவ னும்போ தாசன னுங்கூர் மழுவோனும்
நேசமு டன்சூழ் கோயில ரங்கா நெடியோனே. (௫[illegible])

[தழை]

கட்டளைக்கலித்துறை

நேசத் தழைக்கு மதயானை முன்புநின் றோனரங்கம்
பேசத் தழைக்குமென் னன்பனை யாய்பெருங் கற்பகத்தின்
வாசத் தழைக்கு நறுந்தழை காணிது மந்தத்தென்றல்
வீசத் தழைக்குந் தழைபோற் கெடாது விலையில்லையே. (௬0)

[முத்தம்]

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

விலையான திலையென்று நீதந்த முத்தம்
வேய்தந்த முத்தாகில் வெற்பா! வி யப்பா
விலையார்பு னற்பள்ளி நாராய ணன்பா
வெந்தாய ரங்காவி ரங்காயெ னப்போய்த்
தலையாலி ரக்கும்ப ணிப்பாய்சு மக்குந்
தன்றாதை யவர்தாம ரைத்தாள்வி ளக்கும்
அலையாறு சூடும்பு ராணங்கள் பாடு
மாடும்பொ டிப்பூசி யானந்த மாயே. (சுக)

[தவம்]

கட்டளைக்கலித்துறை

ஆனந்த மாயரங் கத்தே யுயிர்க ளடிமையென்று
ஞானந்த ஞலம் பொறிவாசல் சாத்திகற் றூளைப்பற்றி
ஈனந்த ருப்பற்று மற்றென் றும் யானென தென்னுமபி
மானந்த விர்ந்திருப் பார்க்கிது போலில்லை மாதவமே. (சுஉ)

[இதுவும் அது]

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

மாத வங்களென் றேத வங்களின்
மருவு சீவனென் றுருவ நீபெரும்
பூத மல்லையிந் திரிய மல்லையம்
புலனு மல்லைநற் புந்தி யல்லைகாண்
சீத ரன்பரந் தாமன் வாமனன்
றிருவ ரங்கனுக் கடிமை நீயுனக்
கேது மில்லையென் றறிய றிந்தபின்
னீதின் மாதவ மில்லை யெங்குமே. (சுங)

[தலைவி இரங்கல்]

கட்டளைக்கலித்துறை

எங்காந்த ளங்கைநல் லீரென்செய் கேணிரண் டேந்திழையார்
தங்காந்த னென்றறிந் தாலுநில் லாது தரைக்குநெய்க்கும்
அங்காந்த செம்பவ ளத்தெம்பி ரானரங் கன்புயங்கள்
செங்காந்த மால்வரை யோவிரும் போவென்றன் சிந்தனையே. ()

[களி]

பதினான்குசீராசிரிய விருத்தம்

சிந்தை யிற்குடி கொண்டி ருந்துதி
ருக்க றுத்தடி மைக்கொளுந்
திருவ ரங்கர்பொ ருப்பு யர்ந்ததி
ருப்பு யம்புகழ் களியரேம்
புந்தி மிக்கது வந்து புக்கது
போத மாதர்க ளெழுவர்தம்
பூசை யேமக பூசை யென்றது
புதுமை யன்றிது புத்தர்காள்!
அந்த ரத்திமை யோர ருந்தும
ருந்தும் வெள்ளைய தன்றியே
யரிய சாதிகொ ளாத மானிட
ரகலி டத்தினி லில்லையே
மந்தி ரத்தினி லாத தேவதை
வான கத்தினி லில்லையே
வடிவி லாதவை யுண்ட கோளம்வ
ளைந்த வைப்பதி லில்லையே. (௬௫)

குறளடிவஞ்சிப்பா

[இவை பத்தொன்பதும் வஞ்சி அடிகள்.]

இல்லறமெனத் துறவறமெனச்
சொல்லறம்பிற துணையன்றெனப்

பவக்கடலுட் டுவக்கறுப்பான்
காவிரியிடைப் பூவிரிபொழிற்
சிலமந்திகள் சினைதாவப்
பலதெங்கின் பழக்குலையுதிர
அடர்கமுகின் மிடறொடிதரத்
தேமாங்கனி சிதறுபுவிழ
முடப்பலவின் குடக்கனியுக
வரம்பைக்கனி வரம்பிற்புக
வயன்மருங்கின் மலர்ப்பொய்கையுட்
டுயில்வலம்புரி துண்ணனவுறத்
தாஅட்டாமரைத் தவிசுறைதரு
சூஉட்டோதிமம் பேஎட்டெனெழ
மயிற்சேவன் மணங்களிப்பக்
குயிற்பேடைக் குலமொளிப்ப
மழைமுகிலென முழவதிர்தரு
திருவரங்கப் பெருநகருள்
அரவணைமிசை யறிதுயிலமர்ந்
தருள்புரி

இது - ஈரடிநேரிசை ஆசிரியச்சுரிதகம்

திருநா ரணனைச் சேர்ந்தனஞ்
சரணா ரவிந்தந் தஞ்சமென் றிரந்தே. (௬௬)

[மடக்கு]

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

இரவியை யிரவின் மதியினை மதியு
ளிறையினை யிறையுமெண் ணரிய

காவனைக் காவின் முனிவனை முனிவர்
கருத்தனைக் கருத்தனைத் துடைத்தாள்
பரமனைப் பரம பதத்தனைப் பதத்துட்
பாரனைப் பாரநத் தூதும்
அரவனை யரவி னரங்கனை யரங்கத்
தடிகளை யடிகள்சே வியுமே. (௬௭)

[தலைவி யிரங்கல்]

கலிநிலைத்துறை

சேவிக்க வாழ்விக்கு மெங்கோ னரங்கன் திருக்கோயில்சூழ்
காவிற் கலந்தாசை தந்தேகி னார்நெஞ்சு கன்னெஞ்சமோ
வாவிப் புறத்தன்ன மேயின்ன மேதோ வரக்கண்டிலேன்
பாவிக்க னேகந் தனிக்கால மிந்தப் பனிக்காலமே. (௬௮)

[குறம்]

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

கால முணர்ந்த குறத்தினன் கருதினை யொன்றது சொல்லுவேன்
பாலக னுச்சியி லெண்ணெய்வார் பழகிய தோர்சலை கொண்டுவா
கோல மலர்க்கையின் மங்கை! நின் கொங்கைமு கக்குறி நன்றுகாண்
ஞாலமு வந்திட நாளையே நண்ணுவை நம்பெரு மாளையே. (௬௯)

[மேகவிடுதூது]

கட்டளைக்கலித்துறை

பெருமாலை யார்க்குரைப் பேனுமக் கேவிண்டு பேசினல்லாற்
கருமாலை யாயெழுங் கார்க்குலங் காடொண்டர் காற்பொடிதன்
திருமாலை கொண்ட திருமால ரங்கர்தந் தெய்வத்துழாய்
மருமாலை வாங்கிவம் மின்னந்தி மாலை வருமுன்னமே. (௭௦)

### நேரிசை வெண்பா

முன்னம் பிறந்த பிறப்போ முடிவில்லை
இன்னம் பிறப்பிக்க வெண்ணுதே—தென்னரங்க
மேவிக் கிடந்தானே! வீற்றிருக்கு நின்பதத்தென்
ஞவிக் கிடந்தா னருள். (எக)

### [இரங்கல்: மடக்கு]

### பன்னிருசீர்க் கழிநெடில் ஆசிரியவிருத்தம்

அரும்புன் ஞகத் தடங்காவே!
வாயவென் ஞகத் தடங்காவே;
அம்போ ருகக்கண் பொருந்தேனே!
அழுநீ ருகக்கண் பொருந்தேனே;
பரம்புங் கடலூர் நாவாயே!
பாவிக் கடலூர் நாவாயே;
பார்மீ துயா மறியலையே!
படுமென் றுயா மறியலையே;
கருங்கட் கயலே! மாசுறவே!
கரைவேற் கயலே மாசுறவே;
கண்டற் போதுகு வாலுகமே!
கங்குற் போதுகு வாலுகமே;
குரும்பை தழைக்குங் கரும்பனையே!
குயில்வந் தழைக்குங் கரும்பனையே;
குருகீர்! நந்த மரங்கரையே!
கொணரீர் நந்த மரங்கரையே. (எஉ)

### நேரிசை ஆசிரியப்பா

[இதனுள் பத்துத் தாமரைகளும், ஒன்பது அதிசயங்களுங் காண்க.]

கரைபொரு தொழுகுங் காவிரி யாறே
ஆற்றிடைக் கிடப்பதோ ரைந்தலை யரவே

அரவஞ் சுமப்பதோ ரஞ்சன மலையே
அம்மலை பூத்ததோ ராவிந்த வனமே
அரவிந்த மலர்தொறு மதிசய முளவே
கடல்விளிம் புடுத்த கண்ணகன் ஞாலம்
உடன்முழு தளந்த தொருதா மரையே
வகிரிளம் பிறையான் வார்சடை தேங்கப்
பகிரதி கான்றதோர் பங்கே ருகமே
யாவையும் யாரையும் படைக்க நான்முகக்
கோவை யீன்றதோர் கோக னகமே
திருமகட் கினிய திருமனை யாகிப்
பருமணி யிமைப்பதோர் பதும மலரே
சடைத்தலை தாழ்த்துச் சங்கர னிரப்ப
முடைத்தலை தவிர்த்ததோர் முளரிமா மலரே
ஆங்குமண் டோதரி யணிந்தமங் கலநாண்
வாங்கவில் வாங்கிய வனசமு மொன்றே
விரிந்தபுக ழிலங்கை வேந்தற்குத் தென்றிசை
புரிந்தருண் மலர்ந்ததோர் புண்ட ரீகமே
மண்டிணி ஞாலமும் வானமு முட்பட
அண்டமுண் டுமிழ்ந்ததோ ரம்போ ருகமே
கடைசிவந் தகன்று கருமணி விளங்கி
யிடைசில வரிபரந் தினியவாய் நெடியவாய்
இன்பந் தழீஇய விருபெருங் கமலந்
துன்பந் தழீஇய தொண்ட னேனையும்
உவப்புட னொருகா னோக்கிப்
பவக்கடல் கடக்கும் பரிசுபண் ணினவே. (எரு)

[தலைவியிரங்கல்]

கலிநிலைத்துறை

பண்கொண்ட வேயூது செவ்வா யரங்கேசர் பைம்பொன்னிநாட்
டெண்கொண்ட பேராசை தந்தார் மறந்தார்கொ லிசைவண்டுகோள்
விண்கொண்ட மலைமீது விண்மாரி பொழிகின்ற விசைபோலவென்
கண்கொண்ட முலைமீது கண்மாரி பொழிகின்ற கார்காலமே. (எச)

[கைக்கிளை]

கட்டளைக்கலித்துறை

காரக மோநம் வடதிரு வேங்கடக் கார்வரையோ
நீரக மோநெடு வானக மோதுயி னீடுபணிப்
பேரக மோதென் றிருவரங் கப்பெருங் கோயிலென்னும்
ஊரக மோவிடந் தண்காவி னின்ற வொருவருக்கே. (எரு)

வஞ்சித்துறை

ஒருநயம் பேசுவன், றிருவரங் கேசர்தாள்
மருவுமின் னுசமாங், கருமவன் பாசமே. (எசா)

[தலைவியிரங்கல்]

எண்சீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்

பாசமா மடியர்பா னேசமா மடிகளும்
பைம்பொனு ராடையுஞ் செம்பொன்மா மேனியும்
ஆசையா மலருளாள் வாசமா ரகலமு
மஞ்சலென் றருள்செயுங் சஞ்சமுங் கருணையின்
தேசுலா வதனமும் மாசிலா முறுவலுஞ்
சீரிதா யெழுதகத் தூரிநா மமுமெனக்
கீசனர் திருவரங் கேசனர் திகிரியு
மிலகுவெண் சங்குமே யுலகமெங் கெங்குமே. (எஎ)

[தலைவன் இடமணித்து என்றல்]

வஞ்சிவிருத்தம்

எங்கணு நிறைந்துறையு மெம்பிரான்
கொங்கணுகி வண்டுமுரல் கோயில்சூழ்
உங்கள்வரை யெங்கள்வரை யொன்றியே
மங்கையுன கொங்கைகளை மானுமே. (எஅ)

[இரங்கல்]

கலிநிலைத்துறை

மானூர் கேசன் மேலார் மாலாய் வாழ்கோயில்
தேனூர் காவிற் பூவா ராயுந் தேனேபோல்
நானு போகத் தின்பங் கண்டார் நான்வாடப்
போனூர் வாரா தேதோ வோதாய் போதாவே! (எகூ)

[மதங்கு: மடக்கு]

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

போதவெ னக்கெளி தானூர் போதவ னுக்கரி தானூர்
நாதா ரங்கர்தி ருத்தா ளுடைய ரங்கினு டக்கின்
ஓதும தங்கிந டித்தா லுள்ளம தங்கிய ரக்காம்
வேதம றைந்திட வல்லீர்! விரையம றைந்துவி டீரே. (அ0)

[பாண்]

தாழிசை

விடாதுபூ மடக்தைமார் விரும்பவாயர் மாதர்தோள்
வியந்துமுன் னயந்தவர்க்கு விற்குமெங்கை கொங்கைதான்
அடாததன்று பாணவின்ன மங்கனன்றி யிங்ஙன
மரங்கரன்பு கூர்வின்ப மாகவல்ல வல்லவே

ஊடாதிருக்கின் வாய்திறக்கு மெங்களைய னுச்சிதோ
யெண்ணெய்பட்ட மெய்யிலிட்ட முத்துமுத்த ரீயமும்
படாமுகந் திறந்தசைந்து மழலைவாயின் மணமறுப்
பசுமரம்பு புடைபரந்து பால்சுரந்த முலையுமே. (அக)

[தலைமகளிளமைக்குச் செவிலி இரங்கல்]

கட்டளைக்கலித்துறை

முலைகொண்ட பான்மணம் வாய்மாறிற் றில்லையம்
மொய்குழலோ
அலைகொண்ட தின்னமென் கையணை யேயலை
யாழிவற்றச்
சிலைகொண்ட செங்கை யரங்கேசர் தாள்கொண்ட
தேசமெல்லாம்
விலைகொண்ட வாள்விழி யாள்சென்ற வாறெங்ஙன்?
வெஞ்சுரமே. (அஉ)

[தலைமகன் தலைமகளது இயல் கூறல்]

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

வெஞ்சமங் கருதுங் கஞ்சனு மெருதும்
வேழமும் பரியும் வீழமுன் பொருதார்
தஞ்சமென் றவருக் கஞ்சலென் றருளுந்
தாயிலன் புடையார் கோயிலின் புடையார்
மஞ்சுவண் டினமுந் துஞ்சுதண் டலைவாய்
வல்லியொன் றதிலே யெல்லியுந் திகழுங்
கஞ்சமுண் டதிலே நஞ்சமுண் டதிலே
கள்ளமுண் டதுவென் னுள்ளமுண் டதுவே. (அங)

[தலைவியிரங்கல்]

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

உண்டமிழ் வாசமுடன் றண்டலை மாருதம்வந்
 துலவிய சாளரமுங் குலவிய வாணிலவும்
விண்டலர் பூவணையும் மென்பனி நீர்புழுகும்
 வேனிலி லும்முதிரா வேனிலு மாகியவால்
அண்டர்தொ ழும்பெருமா ளம்புய மின்பெருமா
 ளருமறை யின்பெருமா ளழகிய நம்பெருமாள்
புண்டரீ கங்கமழுந் தண்டுறை யோதிமமே!
 புன்னைகள் சிந்தலரே! இன்னமும் வந்திலரே. (அச)

[தலைவனைப்பிரிந்த தலைவி தென்றற்கு வருந்தியிரங்கல்]

வேற்றொலி வெண்டுறை

இன்னிசை வேயினர் மன்னிய கோயிலை யெய்தார்போல்
பொன்னினை வாலவர் போனவி டத்தினிற் போகாதோ
மின்னிய முகிற்றுளி யென்றென் மேலெலாம்
வன்னியின் பொறிகளை வழங்கும் வாடையே. (அரு)

[காலமயக்கு]

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

வாடை யாயிரு பனியுமாய் வேனிலாய் வந்தது காரென்றே
பேடை மாமயிற் சாயலா யன்பர்மேற் பிழைகருதிடல்செம்பொன்
ஆடை நாயகன் றிருமக ளுயக னரங்கநா யகனேறும்
ஓடை மாவிது மதமிது பிளிறிய வொலியிது மழையன்றே (அசு)

[த ழை]

கட்டளைக்கலித்துறை

மழைபோன் மரகதம் போலெம்பி ரான்வளர் கோயிலன்னீர்!
பிழைபோ மிவர்க்கிதை யாருரைப் பாரிவர் பின்வந்தெய்த

தழைபோ யுறைத்த வருத்தம் பொருமைகொல் சங்கரன்பால்
உழைபோ யொதுங்க முயல்போய் மதிபுக்கொ ளித்ததுவே. (அஎ)

[தலைவியிரங்கல்]

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

ஒளிக்குமிரு சுடர்க்கவளம் விழுங்கும் பேழ்வா
யுருமுழக்கத் திந்திரவி லோடை நெற்றித்
துளிக்குமழை மதக்கொண்மூக் களிற்றை மின்னற்
றோட்டிமா ருதப்பாகர் தூக்குங் காலம்
அளிக்குலமுங் களிக்குமயிற் குலமும் பாடி
யாடுபொழிற் றிருவரங்க ரணையாக் காலம்
விளிக்குமலைக் கருங்கடலு மொறுக்குங் காலம்
வினையேற்கு விழிகடயின் மேவாக் காலம். (அஅ)

[இளவேனிற்காலம்]

கலிநிலைத்துறை

மேவலர்வாழ் தென்னிலங்கை மலங்கவொரு காலிருகால்
விற்குனித்தெய்
யேவலர்வாழ் திருவரங்கத் தெமையிருத்திப் போனவர்நாட்
டில்லைபோலும்
கோவலர்வாய்க் குழலோசைக் காவிரைகள் செவியேற்குங்
குறும்புன்மாலைப்
பூவலரின் மணம்பரப்பி யிளவேனில் வரவந்த
பொதியத்தென்றல். (அக)

[தோழி இரங்கல்]

கட்டளைக்கலித்துறை

தென்றலைக் குங்குமச் சேற்றைப்பொ ருள்சிறி யாள்பெரிய
துன்றலைக் குந்துடிக் கும்மென்செய் வாடிய ராலழைத்த

வன்றலைக் குஞ்சரங் காத்தா யிலங்கை மலங்கவளைத்
தன்றலைக் குஞ்சரத் தாயரங் கா! அண்ட ராதிபனே! (௩௦)

## [தலைவி கூற்று]

### கட்டளைக்கலிப்பா

அண்டர் போற்றுந் திருவரங் கேசனு
ரணிய ரங்கத் திருமுற்ற மெய்தினுற்
பண்டு போன வளையாழி வாங்குவேன்
பாலி யாது பராமுகம் பண்ணினுல்
தண்டும் வாளுஞ் சிலையு மிருக்கவே
சங்கு மாழியுந் தாருமென் பேனவை
தொண்ட ருக்தொற்றி வைத்தோமென் றேதினுற்
றுளவ மாலையைத் தொட்டுப் பறிப்பனே. (௩௧)

### கலிநிலைத்துறை

தோட்டுண்ட தயிர்வெண்ணெய்க் கன்றுய்ச்சி யுரலோடு
சூழ்ந்துகட்டக்
கட்டுண்டு கழலவிர கறியாம லிருந்தழுத
கள்வன்யாரே
கட்டுண்டா னரங்கனெனக் கட்டுரைப்பா ராலுங்
கங்கைசூடி
மட்டுண்ட கொன்றையான் மலர்மேலா னறிவரிய
வடிவனன்றே. (௩௨)

### எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

வடியாத பவக்கடலும் வடிந்து மூல
மாயைகடந் தப்பாற்போய் வைகுந் தஞ்சேர்ந்
தடியார்கள் குழாங்கூடி யுனத டிக்கீ
ழடிமைசெயு மக்கால மெக்கா லந்தான்
கொடியாடு மணிமாட வயோத்தி மூதூர்
குடிதுறந்து திருவரங்கங் கோயில் கொண்ட

நெடியோனே! அடியேனுன் முயற்சி யின்றி
நின்னருளே பார்த்திருப்ப னீசனேனே. (௬௩)

### கட்டளைக்கலித்துறை

நீசச் சமணர்க்குஞ் சூனிய வாதர்க்கு நீதியற்ற
பூசற் பவுத்தர்க்குஞ் சைவர்க்கும் யார்க்கும் புகலுகின்றேன்
நாசப் படாவுயி ரெல்லா முதற்றந்த நாதன்கண்டீர்
ஆசற்ற சீரங் கத்தாதி மூலத் தரும்பொருளே. (௬௪)

### இருவிகற்ப நேரிசை வெண்பா

அரும்புண்ட ரீகத் தடியிணைக்கென் னெஞ்சம்
இரும்புண்ட நீராவ தென்றோ?—விரும்பி
அறந்திருந்துங் கோயி லரங்கா! உனைநான்
மறந்திருந்து மேற்பிறவா மல். (௬௫)

### கோச்சகக்கலிப்பா

பிறவியெனுங் கடலமுந்திப் பிணிபசியோ டிந்திரியச்
சுறவநுங்கக் கொடுவினையின் சுழலகப்பட் டுழல்வேனை
அறமுடையாய்! என்னப்பா! அரங்கா! என்னுருயிருக்கு
உறவுடையாய்! அடியேனை யுயக்கொள்வ தொருநாளே. (௬௬)

### எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

ஒருபொரு ளல்லே னிருவினை யுடையே
னுனதுதொண் டெனுந்துறை குளித்துன்
பெருகுதண் ணளியின் பாசந்தொட் டிழிந்து
பெரியதோர் முத்தியான் பெற்றேன்
திருவுமா மணியுஞ் சங்கமு மேந்திச்
செய்யதா மரைபல பூத்துக்
கரு[illegible] முடைத்தாய் நதிபொரு தரங்கங்
கலந்ததோர் கருணைவா ரிதியே. (௬௭)

### கட்டளைக்கலித்துறை

வாரி யரங்கம் வருதிருப் பாவைக்கு மண்மகட்கும்
சீரி யரங்கண் வளர்திருக் கோலமுந் றென்றிருக்கா

*

வேரி யரங்க விமானமுங் கோயிலு மேவித்தொழார்
பூரி யரங்கவர் கண்ணிரண் டாவன புண்ணிரண்டே. (கூஅ)

### இருவிகற்ப நேரிசை வெண்பா

புண்ணு ருடற்பிறவி போதுமெனக் கும்முனக்கும்
எண்ணு திருந்த தினிப்போதும்—கண்ணு!
குழற்காளாய்! தென்னரங்கக் கோயிலாய்! நின்பொற்
கழற்காளாய் நின்றேனைக் கா. (கூகூ)

### கலிநிலைத்துறை

காவிரிவாய்ப் பாம்பணைமேற் கருமுகில்போற் சண்வளருங்
கருணைவள்ளல்
பூவிரியுந் துழாயரங்கர் பொன்னடியே தஞ்சமெனப்
பொருந்தி வாழ்வார்
யர்வரினு மிழிகுலத்தோ ராகுனு மவர்கண்டீ
ரிமையாநாட்டத்
தேவரினு முனிவரினுஞ் சிவனயனென் றிருவரினுஞ்
சீரியோரே. (க௦௦)

---

### எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவண்ண விருத்தம்

மழைமுகி லெனவே பணு முகந்திகழ்
வரியர வணையே றிவா ழரங்கர்தம்
எழில்பெறு மிருதா ளிலே கலம்பக
மெனுமொரு தமிழ்மா லைதா னணிந்தனன்
குழலிசை யளிமேவு கூரம் வந்தருள்
குருபர னிருபா தபோ தடைந்தவன்
அழகிய மணவா ளதா சனென்பவ
னடியவ ரடிசூ டிவா ழுமன்பனே. (க௦க)

## திருவரங்கக்கலம்பகம்

முற்றிற்று.

---

# திருவரங்கத்துமாலை

ஸ்ரீ:

ஸ்ரீராமஜயம்.

# திருவரங்கத்துமாலை

## சிறப்புப்பாயிரம்

மறைப்பொரு ளோவச்சி ரப்பொரு ளோமனு வேமுதலா
முறைப்பொரு ளோவிதி காச புராண முதுப்பொருளோ
இறைப்பொரு ளோநம் பெருமா ளுடைத்திரு வெட்டெழுத்துள்
உறைப்பொரு ளோமண வாளர்தம் மாலையி னுட்பொருளே.

## காப்பு

[திருவரங்கநாதனது திருமேனியவயவங்களும் திவ்விய பஞ்சாயுதங்களும்]

நாளும் பெரிய பெருமா ளரங்கர் நகைமுகமும்
தோளுந் தொடர்ந்தென்னை யாளும் விழியுந் துழாய்மணக்கும்
தாளுங் கரமுங் கரத்திற்சங் காழியுந் தண்டும்வில்லும்
வாளுந் துணைவரு மேதமி யேனை வளைந்துகொண்டே.

---

## நூல்

### கலித்துறை

திருவாழி சங்கு திருவாழி வாழி சிறந்துகொண்டல்
உருவாழி யோகத் திருத்துயில் வாழி யுலகளந்த
மருவார் மதுமலர்த் தாள்வாழி வாழி வணங்குமன்பர்
பெருவாழ் வனைய பெருமா ளரங்கப் பெருஞ்செல்வமே. (க)

படிப்பவ ரைப்பணி மெல்லணை யாகப் பருவரையால்
தடுப்பவ ரைப்பண்டு மண்டுகன் மாரி தரணியிடந்
தெடுப்பவ ரைத்தம் மடியா ரிடும்பச் சிலைக்குழுத்தி
கொடுப்பவ ரைச்செம்பொற் கோயிலுள் ளேகண்டு கொண்டனனே.

ஆளான வர்கண் களிகூ ரரங்கத் தரவணைமேல்
காளா சலமெனக் கண்டுகொண் டேன்மறை காணவொண்ணாத்
தாளா யிரஞ்செம்பொன் மாமுடி யாயிரந் தாமநெடுந்
தோளா யிரந்திருக் கண்ணா யிரங்கொண்ட சோதியையே. (௩)

பூங்கா விரிப்புனற் கோயிலுள் ளேமிக்க போகமெல்லாம்
யாங்காண யோகத் துயில்கொண்ட வாறெள்ளு மெண்ணெயும்போல்
நீங்கா துலகத் துயிர்க்குயி ராகி நியாமகனாப்
ஓங்கார மாயத னுட்பொரு ளாய்நின்ற வொண்சுடரே. (௪)

கறங்காழி நாலெட்டி லக்கமி யோசனை கட்செவியின்
பிறங்காக மும்மையி லக்கமி யோசனை பேருலகில்
இறங்காழி மேக மெனவே யரங்கத்தி லெந்தையதில்
உறங்காக நீளமைந் தைம்பதி னாயிர மோசனையே. (௫)

பாற்கட னாலெட் டிலக்கமி யோசனை பாற்கடலுள்
மாறகவி கோயி லகலமு மீரைந்து வானளவும்
நீற்கமொ ரேழு திகழ்பணி மூன்று சிறந்தகலம்
ஏற்கவி னொன்றரை யுத்தமர் நீள மிரண்டரையே. (௬)

அடித்தல மந்த வதலம் பொருதிரை யாழிவையம்
கடித்தல நேமிக் கிரியுடை யாடை கபாலிமுன்னாள்
பிடித்தல மந்த தொழித்தா னரங்கன் விழியிருகோள்
முடித்தல மண்ட முகடினி யாமென் மொழிவதுவே. (௭)

திண்சுட ராழி யரங்கேசர் திக்குத் திருச்செவியில்
மண்கழ லிற்சத்ய லோகஞ் சிரத்தின் மருத்துயிரில்
தண்கதி ருள்ளத்தில் வானுந்தி யிற்செந் தரணிகண்ணில்
ஒண்கன லிந்திரன் வாழ்முகப் போதி லுதித்தனரே. (௮)

புரமா யிரந்திருக் கண்மல ராயிரம் புண்டரிகக்
கரமா யிரங்கழற் கான்மல ராயிரங் கண்ணிமுடிச்
சிரமா யிரந்திரு நாமமு மாயிரஞ் செய்யகையில்
அரமா யிரங்கொண்ட திண்டிற லாழி யரங்கருக்கே. (௯)

முன்னாள் விசும்பும் புவியுந் திசையு முறைவகுத்த
அந்நான் முகன்றன தாவியெல் லாமல ராசனையா
மின்னார் மழைமுகி னன்னாக மீதில் விழிதுயில்கூர்
என்னாத னுக்கொரு மூச்சென்று வேத மிசைக்கின்றதே. (௧௦)

எண்ணிற் றிகிரிப் பிறப்பிட மானது மெண்ணுமவர்
நண்ணிச் சிறக்க விருப்பிட மானது நாசமில்லா
விண்ணிற் பதிக்குக் கடைத்தலை யானதும் விண்ணவர்தங்
கண்ணிற் சிறந்தது மாநீ ரரங்கர்தங் கண்ணிலொன்றே. (௧௧)

புறக்குன்று புல்லிதழ் முந்நீர் பிரசம் பொருவில்செம்பொன்
நிறக்குன்று கன்னிகை யெண்கிரி தாது நிலமதனுள்
பிறக்குந் துகண்முது மாசுண நாளம் பிரமன்வண்டு
இறக்குந் திகிரி யரங்கேச ருந்திச் செழுமலர்க்கே. (௧௨)

இருகூல மும்பொரு மாநீ ரரங்கத்தி லெந்தையந்தண்
முருகூர் கமல முனியாய் வகுக்கு முறைமையினால்
புருகூத னுக்குத் திருத்தம்பி யாகிப் புரக்குமுமை
ஒருகூறு கொண்ட வனா யழிக்கு முகாந்தத்திலே. (௧௩)

வாரித் தலமுங் குலபூ தரங்களும் வானுமுள்ளே
பாரித் துவைத்தவிவ் வண்டங்கள் யாவும் படைக்கமுன்னாள்
வேரிப் பசுந்தண் டுழாயரங் கேசர் விபூதியிலே
மூரிப் புனலிற் குமிழிகள் போல முளைத்தனவே. (௧௪)

நெடுங்கட னிற்பது ஞாயிறு காய்வது நிற்றலுங்கால்
ஒடுங்கி நடப்பதுந் தண்கார் பொழிவது மூழிதனிற்
சுடுங்கனல் பற்றிச் சுடாதே யிருப்பதுந் தும்பைபுனைந்
தடுங்கன லாழி யரங்கேசர் தந்திரு வாணையினே. (௧௫)

ஓலப் புனற்பொன்னி நன்னீ ரரங்க ருகந்திரியுங்
காலத் தினிற்கொள்ளை யண்டமெல் லாமுண்டு காமர்பசுங்
கோலக் குழவி யுருவா யகண்டமுங் கோத்தவெள்ளத்
தாலத் திலையின் புடைக்கே துயில்வ ரகமகிழ்ந்தே. (௧௬)

தாற்றுக் கமுக வனஞ்சூ ழரங்கர் சயனமுகக்
காற்றுப் புலரும் படிமுதல் வீசுங் கறைக்களத்தன்
நீற்றுச் சிவந்தெழுங் காராழித் தீச்சுடு நீள்கழலின்
ஆற்றுப் பெரும்பெருக் கண்டமெல் லாங்கொள்ளு மந்தத்திலே. ()

சின்னூல் பலபல வாயா விழைத்துச் சிலம்பிபின்னும்
அந்நூ லருந்தி விடுவது போல வரங்கரண்டம்
பன்னூறு கோடி படைத்தவை யாவும் பழம்படியே
மன்னூழி தன்னில் விழுங்குவர் போத மனமகிழ்ந்தே (௧௮)

பந்திக் கமலத் தடஞ்சூ ழரங்கர் படைப்பழிப்புச்
சிந்தித் திடுவது மில்லைகண் டாத் திசைமுகனே
டுந்திக் கமலம் விரிந்தால் விரியு முகக்கடையில்
மூந்திக் குவியி லுடனே குவியுமிம் மூதண்டமே. (௧௯)

அடர்ந்தை நடந்தை வனஞ்சூ ழரங்கத் தரவணைமேற்
கிடந்தனர் துங்கக் கிரிமிசை நின்றனர் கேழலொன்றாய்
இடந்தனர் மீள விழுங்கினர் கான்றன ரீரடியாற்
கடந்தனர் கைவழி மண்ணுன திந்தமண் காரணர்க்கே. (உ0)

[ஹம்ஸாவதார வைபவம்]

பின்னைக் கினிய பெருமா ளரங்கர் பெருதுபெற்ற
முன்னைப் பிரமனை வாழ்விக்க வேண்டிமுன் னுள்கவர்ந்த
அன்னத் திருவுரு வுள்ளே வளர்ந்ததற் கோரண்டமாம்
என்னச் சிறந்தது மூதண்டம் யாமெ னியம்புவதே. (உக)

[ஸ்ரீமத்ஸ்யாவதார வைபவம்]

சூழிக் களிறுய்ய வெவ்வாய் முதலை துணித்தவக்ர
பாழித் திகிரிப் படையரங் கேசர் படைப்பவன்றன்
ஊழிப் பொழுதொரு சேலா யொருசெலு வுட்கரந்த
ஆழிப் பெரும்புனல் காணுது தேடுவ ரவ்விடத்தே. (உஉ)

[இதுமுதல் மூன்று கவிகள் - ஸ்ரீ கூர்மாவதார வைபவம்]

பாட்டுக்கு முத்தமிழ் வில்லிபுத் தூர்வரும் பாவைசூழற்
சூட்டுக்கு நல்லவர் தென்னரங் கேசர் தொடுகடல்வாய்
மோட்டுக் கமடத் திருவுரு வாகி முதுமுதுகிற்
கோட்டுச் சயில முழுவதென் னுத்தியில் கொண்டனரே. (உங)

திரிக்கின்ற பொற்குன் றழுந்தாம லாமைத் திருவுருவாய்ப்
பரிக்கின்ற திற்பெரும் பாரமுண் டேபண்டு நான்மறைநூல்
விரிக்கின்ற வுந்தி யரங்கேசர் தந்திரு மேனியின்மேல்
தரிக்கின் றதுமக ரக்கட லாடைத் தராதலமே. (உச)

ஒருரு வெற்பைத் தரித்தது தானவ ரும்பருள்ளாய்
ஈருரு நின்று கடைந்தது வேலை யிதனிடையோர்
பேருரு வின்னமு தோடே பிறந்தது பெண்மைகொண்டோர்
நாருரு நின்ற தரங்கா! இதுவென்ன நற்றவமே. (உரு)

[இதுமுதல் மூன்று பாசுரங்கள்-ஸ்ரீ வராகாவதார வைபவம்.]

ஆருக் கிவரை யளவிட லாந்தென் னரங்கரிந்தப்
பாருக் கரந்தை தவிர்ப்பதற் காகப் பழிப்பில்பெருஞ்
சீருற்ற செங்கட் கரும்பன்றி யாகித் திருக்குளம்பில்
மேருக் கணகண மாத்தலை நாளில் விநோதிப்பரே. (உசு)

மருமலர்க் கோயின் மடமான் விரும்பு மதிலரங்கர்
பெருமையைப் பேசுவ தெப்படி நாம்பிறை வாளெயிற்றுக்
கருமுகிற் கோலப் பெரும்பன்றி யாயக ளேபரத்தின்
ஒருமயிர்க் காலடி யூடே கடல்புக் கொளித்தனவே. (உஎ)

நிறக்குஞ் செழுஞ்சுடர்க் கோடுமிப் பாரு நிசாமுகத்துச்
சிறக்கும் பிறையுங் களங்கமும் போலு மெனிற்சிறுகண்
மறக்குஞ் சரஞ்செற்ற மாயோ னரங்கன் வராகமதாய்ப்
பிறக்கும் பிறப்பின் பெருமையெவ் வாறினிப் பேசுவதே. (உஅ)

[இதுமுதல் நான்கு பாசுரங்கள்-
ஸ்ரீ நாஸிம்ஹாவதார வைபவம்]

ஆடு மாவிற் றயிலரங் கேச னருமகற்கா
நீடுந் தறியி லுதித்தில னேனிகி லப்பொருள்கள்
ஊடும் புறத்தினு முண்மையெவ் வாறிவ் வுலகறியும்
ஈடு மெடுப்புமில் லாவொரு தெய்வ மிவனெனவே. (உசு)

மறந்த மறையு மழுங்கிய மந்திர மும்மகமும்
இறந்ததெய் வங்களு மெல்லாமு னெங்குறைந் தெங்கியன்ற
அறந்தருங் கோயி லரங்கனவ் வாளரிக் காளரியாய்ப்
பிறந்தபி னன்றோ பிறந்து பெருகிப் பிறங்கியதே. (௩0)

அடிகண் டிலரத லத்தவ ரைம்முக னேடமரர்
கடிகண் டிலர்மலை வானிவர்க் துங்கம லத்தயனுர்
முடிகண் டிலரண்ட மாமுக டேறியு மூதுணர்ந்தோர்
படிகண் டிலரரங் கேசர்கொள் சிங்கப் படிதனக்கே. (௩௧)

அறியி னரங்கர்முன் னாளரி யாகிய வப்பொழுது
கொறியி னவுணர்தம் வெள்ளங்கள் கோடியுங் கொன்றதிலோ
தறியின் வயிறிற் றகுவனெஞ் சுஞ்சர பத்துடலும்
நெறியின் வகிர்ந்தபி னன்றோ தணிந்தது நீள்சினமே. (௧௨)

[இதுமுதல் ஐந்து கவிகள் - ஸ்ரீ வாமனாவதார வைபவம்;
திரிவிக்கிரமாவதாரம் இதில் அடங்கியதே]

தாரேற்ற வெண்குடை மாவலி வார்க்கவுந் தாமரைமேல்
சீரேற்ற தொன்னான் முகத்தோன் விளக்கவுஞ் செம்பொன்முடிக்
காரேற்ற மேனி யரங்கேசர் கையுங் கழலுமொக்க
நீரேற் றனவண் டிருக்குற ளாகி நிமிர்ந்தவன்றே. (௧௩)

தேமிக்க பச்சைத் துழாயரங் கேசர் திருக்குறளாய்த்
தாமிப் புவனங் கடந்தவந் நாண்மணற் சாகரஞ்சூழ்
பூமிப் புடையள விட்டபொற் றாமரைப் பூங்கழற்கு
நேமிச் சிலம்பு திருச்சிலம் பாகி நிலைபெற்றதே. (௧௪)

பூமரு பொங்கர் புடைசூ ழரங்கர் பொலன்கழலாற்
பாமரு மூவுல குங்கொண்ட போது பழிப்பில்பெருங்
காமரு மோலிச் சிகாமணி யாகிக் கவுத்துவமாய்த்
தேமரு நாபியக் தாமரை யானது செஞ்சுடரே. (௧௫)

ஓதப் புனற்பொன்னி நன்னீ ரரங்க ருலகளந்த
பாதத்து நீர்விண் படிபில மூன்றிலும் பால்புரைவெண்
சீதத் தரங்கமந் தாகினி யாகிச் செழுங்கங்கையாய்
மேதக்க போக வதியாகி நாளும் விழுகின்றதே. (௧௬)

ஓலப் புனலரங் கேசர்பொற் றாள்பட் டுடைந்தவண்ட
மேலக் கடாகத் தொளைவழி யாக விழும்புனல்போய்க்
கோலத் திருவுருக் கொண்டவந் நாள்குரம் பட்டுடைந்த
மூலக் கடாகத் தொளையால் விழுந்தது முற்புனற்கே. (௧௭)

[ஸ்ரீ பரசுராமாவதார வைபவம்]

மறிக்குங் கயற்கண்ணி பங்காளன் வாழ்வெள்ளி மால்வரையைப்
பறிக்குங் கபடன் பணைப்புய மேவவன் பைங்கடகம்
செறிக்கும் புயஞ்செற்ற வாயிரந் திண்புய மோவவற்றைத்
தறிக்குந் திறமழு வோவரங் காசயத் தாருடைத்தே. (௩௮)

[இதுமுதல் எட்டுப்பாசுரங்கள்-ஸ்ரீ தசரத
ராமாவதார வைபவம்]

மாதண்ட மேவுங் கரத்தா ரரங்கர் வடமிதிலைக்
கோதண்ட வேகம் பிறப்பித்த போது குவட்டுவெள்ளி
வேதண்ட மேய மழுவாளி நாணினன் வென்றிகண்டு
மூதண்ட மஞ்சு மழுவாளி கோப முதிர்ந்ததுவே. (௩௯)

மாகம் பிலந்திக் கிமையோ ருலக மழுவுடையோன்
நாகநன் னுடள வாகப்பன் னுக நடுங்கவம்பு
வேகங் கொடுதொட ரப்பறந் தோடியு மீண்டுவந்து
காகஞ் சரணென்ன நம்பெரு மாளுயிர் காத்தனரே. (௪௦)

மாதவ ரும்பர் பெருமா ளரங்கர் வலியுணரா
தாதவன் மைந்த னயிர்த்தவந் நாளிலக் காயநெடும்
பாதவ மேழு முடனே நெடுங்கணை பட்டுருவப்
பூதல மேழு மெழுபா தலங்களும் புண்பட்டவே. (௪௧)

ஒற்றைச் சரஞ்சுட்ட வுட்கடல் போற்புறத் தோலமிட
மற்றைக் கடல்வெந்த தெவ்வண்ண மோமத மாவழைக்க
அற்றைக் குதவு மரங்கர்வெங் கோபத்தை யஞ்சியரன்
கற்றைச் சடையி னிடையே வெதும்பினள் கங்கையுமே. (௪௨)

கோங்குண்டு வண்டமர் தண்டா ரரங்கர்வெங் கோபமுடன்
பொங்குஞ் சரஞ்செய்த மாயமென் னேதன் புகழுடைய
மங்கும் படிக்கு மறஞ்செ யிராவணன் வாகினிகண்
டெங்குங் குரங்கெங்கும் ராமனென் றேங்கி யிரிந்திடவே. (௪௩)

பேரொத்த வாயிரம் பேர்மடிந் தாற்பிறக் குங்கவந்த
நேரொத்த வாடும தாயிர மாடி னெடுஞ்சிலையில்
ஏரொத்த கிண்கிணி சற்றோ லிடுமதொர் யாமநின்று
காரொத்த மேனி யரங்கர்தம் போரிற் கறங்கியதே. (௪௪)

சற்பத் துறங்கு மரங்கா! உன்பாதந் தனையடைந்த
நற்பத் தருக்கொரு நாசமுண் டோநல மாமருத்தின்
வெற்பைக் கொணர்ந்த விறலனு மானுமவ் வீடணனும்
சற்பத் தளவு மழியா திருக்கவுங் கற்பித்தையே. (௪௫)

ஆவும் பயமு மமுதமொப் பான வரங்கருக்கு
மேவும் புகழின்னு மேவுங்கோ லோவவர் மெய்யருளால்
தாவுந் தரங்கத் தடஞ்சூ ழயோத்திச் சராசரங்கள்
ஆவுங் கிளையுடன் வைகுந்த லோகத்தி லார்ந்திடவே. (௪௬)

[இதுவும், அடுத்த பாசுரமும் - ஸ்ரீ பலராமாவதார வைபவம்]

ஒருதா யிருந்து வருந்தவை தேகி யுடன்சுரத்தில்
ஒருதாய் சொலச்சென்ற தென்னரங் கா!வைய முய்யும்வண்ணம்
ஒருதா யுதரத்தி லோரறு திங்க ளுறைந்தபின்னை
ஒருதாய் வயிற்றில்வந் துற்றதெம் மாய முரைத்தருளே. (௪௭)

கதிபட்ட பொன்னி யரங்கேச ராடு கருந்திரைநீர்
நதிபட்ட பாடு நவின்றிட லாகு நலங்கெழுகூர்
துதிபட்ட நெட்டலத் தாலே யிழுத்திட நூற்றுவர்தம்
பதிபட்ட கண்கலக் கந்தெரி யாது பகருதற்கே. (௪௮)

[இதுமுதல் இருபத்தைந்து கவிகள்-
ஸ்ரீ கிருஷ்ணாவதார வைபவம்]

பண்டு விழுங்கிய பாருந் திசையும் பனிக்கடலும்
சண்ட நெடுங்கிரித் தானமெல் லாஞ்சண்ப காடவிமேல்
மண்டு பெரும்புனல் சூழரங் கேசர்தம் வாய்மலருள்
கண்டு மருவினள் சீர்நந்த கோபர்தங் காதலியே. (௪௯)

உன்னைக் களவி லுரலோடு கட்டிவைத் துன்னுடைய
அன்னைக் கொருத்தி யறிவித்த போதலை யாழிமங்கை
தன்னைப் புணர்ந்தரு டாரரங் கா! அ வடன்மருங்கில்
பின்னைக் கொடுசென்ற பிள்ளைமற் றாரென்று பேசுகவே? (௫0)

கடிக்குங் கரளப் பிறைவா ளெயிற்றுவெங் காளியன்மேல்
நடிக்கும் பெரிய பெருமா ளரங்கர் நறைகமழ்பால்
குடிக்குங் களவுக்கு மாறுகொண் டேயொரு கோபிபற்றி
அடிக்கும் பொழுதிற் பதினா லுலகு மடிபட்டவே. (௫௧)

ஆரந் தரும்பொன்னி சூழரங் காவுன்ற னாய்ச்சிவெகு
தூர நெடுங்கயி றெல்லா மிசைசொத்து வைத்துமவை
ஈர மருங்கிற் குறைந்திடக் கண்பிசைந் தேங்குமவள்
வேரம் புயமுகங் கண்டள வானவி னோதமென்னே! (௫௨)

சிந்திக்க நெஞ்சில்லை நாவில்லை நாமங்கள் சொல்லநின்னை
வந்திக்க மெய்யில்லை வந்திரு போதுமொய்ம் மாமலர்ப்பூம்
பந்தித் தடம்புடை சூழரங் காததி பாண்டனுன்னைச்
சந்தித்த நாண்முத்தி பெற்றதென் னோதயிர்த் தாழியுமே. (௫௩)

குன்றா விளைவுடன் வண்மை பருவங் குணங்களிவை
பொன்றா திருந்தகண் மாயமென் னோ? பொன்னி சூழரங்கா!
என்றாயர் தங்குல ஊமந்தர்க ளாயு மலகிலிளங்
கன்றாயு நாடொறுஞ் சென்றுவந் தாடிய காலத்திலே. (௫௪)

நெடுங்கா னிலத்துடன் கோவலர் தாமிக நின்றுநெஞ்ச
நடுங்கா திமைத்திடுங் கண்களெல் லாமென்று நண்ணலர்மேல்
விடுங்கால நேமியங் கையரங் கா! கண் விழிக்குமுன்னே
சுடுங்கான நல்லன றாற்றவும் மாயமென் சொல்லுகவே? (௫௫)

வானுட ரிற்சிலர் சென்றுகண் டாரில்லை மற்றதனிற்
போனரின் மீளப் புவியில்வந் தாரில்லை பூவின்மங்கை
ஆனுத செல்வத் திருவரங் கா!கொச்சை யாயரெல்லா
மேனுட் பரம பதத்தினிற் போயெங்ஙன் மீண்டதுவே! (ருசு)

கூனந்து லாவயற் கோயிலுள் ளேபள்ளி கொள்ளுமெங்கள்
ஆனந்த வாரி திருக்குழ லூத வறத்தடிந்த
கானந் தழைத்தன கால்வரை நெக்கன கார்முகிலேய்
வான மயர்த்தன வையமெல் லாமெய் மறந்தனவே. (ருஎ)

ஊரும் திரைப்பொன்னி நன்னீ ரரங்க! உருப்பலவாய்க்
காருந் தடித்துங் கலந்ததுபோ லிடைக் கன்னியர்கள்
யாருங் களிக்க விடையிடை யேகலந் தின்பநலங்
கூருந் திருநட மாடிய மாயமென் கூறுகவே! (ருஅ)

மின்போ லிடையிடை மாதரெல் லாமுன்றன் மெய்தழுவி
நன்போக சாகரத் துள்ளே முழுகவு நாண்மலராள்
தன்போக மேமகிழ் தாரரங் கா!அண்டர் தாமவரை
அன்போ டணைத்துத் துயின்றதெம் மாயம்? அறிந்திலமே. (ருகூ)

நீரிற் புகுங்கண்டு தேரினைப் பார்க்கு நிறுத்தியபொற்
றேரிற் றெழும்பின்னை நீரினிற் காணுஞ் சிறந்தபச்சைக்
காரிற் றிறமெய் யரங்கனுஞ் சேடனுங் கஞ்சவஞ்சன்
ஊரிற் செலவுடன் போமக்கு ரூரன்ற னுண்மகிழ்ந்தே. (சுo)

நாம மிகும்புகழ் யாதவர் வாழு நகரிலும்பர்
தாமரு வுஞ்சவை தத்தம வாய தளையவிழும்
தேமரு பொங்கா ரங்கேச ருக்கிர சேனனுக்கு
மாமுடி வைக்கும் படிபடி மேற்கொடு வாவெனவே. (சுக)

மறியா வெழுந்திரை மாநீர் மதுரையின் மன்னவரைக்
குறியா தவன்படை வந்தவந் நாட்செழுங் கோகனகப்
பொறியா டரவணைத் தென்னரங் கா! ஒரு பூதருமங்
கறியா வகைத்துவ ராபதிக்கே யெங்ங னாக்கினையே? (௬௨)

நறைத்துள வம்புனை நம்பெரு மாள்விற னஞ்சொல்வதோ?
மறைப்பரி பூட்டிய மாநிலத் தேரில்லை வாளெயிற்றின்
கறைப்பணி நா ணுடை மேருவில் வில்லை கடும்பவனச்
சிறைத்தழ லம்பில்லை யொன்னா ரறுபுரஞ் செற்றதற்கே. (௬௩)

அருட்கொண்ட லன்ன வரங்கர்சங் கோசையி லண்டமெல்லாம்
வெருட்கொண் டிடர்பட மோகித்து வீழ்ந்தனர் வேகமுடன்
தருக்கொண்டு போகப் பொறாதே தொடருஞ் சதுர்முகனும்
செருக்கொண்ட முப்பத்து முக்கோடி தேவருஞ் சேனையுமே. (௬௪)

நீணைக்கோல நேமித் திருவரங் கேச! நி னக்கினிய
குணைக்கோ கனகையுங் கண்டன ளோ? மணிக் குன்றில்வைகும்
கணைக்கோ தையர்பதி னாறா யிரவரைக் கைப்பிடிக்க
மணைக்கோல மும்பதி னாறா யிரங்கொண்டு வாழ்ந்தவன்றே. (௬௫)

விடந்தோ யரவிற் றுயிலரங் கேச! விசும்புமுட்ட
நடந்தோகை தன்னுட னாரதன் காண நகைக்குமுத்து
வடந்தோய் வனமுலை யெண்ணிரண் டாயிர மாதர்தங்கள்
இடந்தோறு நின்றெழில் வேறா யிருந்ததங் கெவ்வண்ணமே? (௬௬)

பாவிக் கொணாத பெருமாள் விநோதம் பகருமதோ?
வாவிக் குணாத னாதி யாயொரு மன்னவன்றன்
ஆவிக் குலக்கொடி யாய்நெடுங் காலத் தழிவிலின்ப
மேவிக் குடும்பத் திடும்பையெல் லாமெய்தி விட்டனனே. (௬௭)

தண்டுளை வம்புனை தாரரங் கா! ஐவர் தையலுக்கு
வண்டுகி லொன்றவைக் கண்ணுற்ற போதுதன் மன்னர்முன்னே
கண்டுளி சோரத் தொழுதுநின் பேர்கட் டுரைத்தபின்னை
ஒண்டுகில் கோடி குவிந்ததெம் மாய முரிந்துரிந்தே? (௬௮)

இசையள விட்ட வரங்கேச ரைவர்தம் மேவலிற்போய்
வசையள விட்ட மகிபன்முன் னேவள ருந்திரடோள்
திசையள விட்டன பாரள விட்டன சேவடிவான்
மிசையள விட்டன பொன்முடி மேலென் விளம்புவதே. (௬௯)

மாயிரு ஞாயிறு பாரதப் போரின் மறையவங்ஙன்
பாயிரு ணீதந்த தென்னகண் மாயம்? பவளநெற்றிச்
சேயுயர் மாமதில் சூழரங் கேச! திரண்டுதித்த
ஆயிர கோடி திவாகரர் போலொளி ராழிகொண்டே? (௭௦)

நெட்டர வின்பெரு மூச்செழ வீசு நெருப்பில்வெந்து
பட்ட கடம்புந் தழைத்தது மீளப் பசுந்துளவின்
மட்டவிழ் தொங்க லரங்கர்பொற் றாள்பட வாளிவெந்தீச்
சுட்ட கருங்கட்டை யும்பெற்ற தாருயிர் சொல்வதென்னே. (௭௧)

தாளாற் சகங்கொண்ட தாரரங் கா! பண்டு சாந்திபன்சொல்
கேளாக் கடல்புக்க சேயினை மீட்டதுங் கேதமுடன்
மாளாப் பதம்புக்க மைந்தரை மீட்டது மாறலவே
மீளாப் பதம்புக்க பாலரை நீயன்று மீட்டதற்கே. (௭௨)

பொருங்கே தனப்படை மன்னரை மாய்த்துப் புவிமடந்தை
பெருங்கேத நீக்கி நடந்தது மீளப் பிறங்குபுள்ளின்
வருங்கேச வன்சக்ர மாயோ னரங்கன் வரவிடுத்த
கருங்கேச மொன்றுதன் னிச்சையி லேசெய்த காரியமே. (௭௩)

[ஸ்ரீ வேதவ்யாஸாவதாரம்]

அராவணை யிற்றுயி றென்னரங் கா!மறை யாயும்வண்ணம்
பராசரன் மாமக னாகிய நீபண்டு பாரதப்போர்
பொராவிழு நூற்றுவர் சேனையெல் லாம்புனற் கங்கைவெள்ளத்
தராதல மேல்வரக் காட்டிய வா!தந்தை சந்திக்கவே. (௭௪)

[கல்கியவதாரவைபவம்]

தருமந் தவிர்ந்து பொறைகெட்டுச் சத்தியஞ் சாய்ந்துதயை
தெருமந் துதன்பூ சனைமுழு துஞ்சிதை யக்கலியே
பொருமந்த காலக் கடையினி லெம்பொன் னரங்கனல்லால்
அருமந்த கற்கியென் றுரேயவைநிலை யாக்குவரே. (௭௫)

[அந்தர்யாமிவைபவம்]

தெள்ளும் புனற்பொன்னி நன்னீ ரரங்கர் சிலாகிக்குமா
றெள்ளுங் கரந்துறை யெண்ணெயும் போலெண்ணில் கோடியண்டத்
துள்ளும் புறம்பு மொழியாது நின்று முகங்கடோறும்
கொள்ளுந் திருவுரு வெல்லா மவரறி கோலங்களே. (௭௬)

[தத்துவவுண்மை]

உம்பர்க் கரிய பெருமா ளரங்கர்தம் முண்மையெல்லாம்
இம்பர்க் குலகில் வெளியிட்ட வேசர ணில்லையென்றோர்
கும்பக் கடகயங் கூப்பிடச் சென்றதுங் கோளரியாய்த்
தம்பத் துதித்ததுந் தாழிக்கு வீட்டினைத் தந்ததுமே. (௭௭)

[எம்பெருமானது பரிக்கரங்கள்]

போங்கர வென்பது மெல்லணை யூர்திவெம் புள்ளரசு
பங்கய மின்னொடு பார்மக டேவி படைப்பவன்சேய்
கிங்கரர் விண்ணவர் சாதக நாடிறை கேழலொன்றாய்
அங்க ணெடும்புவி யெல்லா மிடந்தவ ரங்கருக்கே. (௭௮)

[இதுவும் அது]

சிங்கா தனம்பொற் கிரிதிரு மஞ்சனந் தெய்வவிண்ணீர்
கொங்கார் தொடையுடுத் தாமஞ் சுடருடைக் கோள்விளக்கம்
பொங்காழி மண்டிருப் போனக மாக்கினர் புண்டரிகை
தங்கா தலர்நம் பெருமா ளரங்கர் தமக்குமுன்னே. (எசு)

[தேவிமார்களின் சிறப்பு]

தேமா மலர்க்கயஞ் சூழ்கோயின் மேவுந் திருவரங்கர்
தாமா தரித்த திருத்தேவி மாரிற் றரங்கவுடைப்
பூமாது நாளும் புரத்தே சுமந்து புரக்குமலர்
மாமாது செல்வங் கொடுத்தே யுயிர்களை வாழ்விக்குமே. (அ௦)

[திருவெட்டெழுத்து:-பெரிய திருமந்திரம்]

நம்பெரு மாளெழுத் தெட்டின் பெருமை நவிலுமதோ
சம்பரன் மாயம் புரோகிதர் சூழ்வினை தாரணிவாள்
வெம்படை மாசுண மாமத வேழம் விடந்தழல்கால்
அம்பர மேமுத லானவை பாலனுக் கஞ்சினவே. (அக)

[துவாதசாக்ஷா மகாமந்திரம்]

அத்தா! அரங்கத் தமர்ந்தவ னே!எழுத் தாறிரண்டின்
வித்தாய நின்னருள் கொண்டல்ல வோ?வினை வொன்றறியா
உத்தான பாதன் மகன்சலி யாதுல குள்ளளவும்
எத்தார கைக்கு முனிவர்க்கு மேற்சென் றிருக்கின்றதே. (அஉ)

[திருவாயுதங்கள்]

புடைக்குங் குடமுலைப் பூமக ளார்தம் பொருட்டுமுந்நீர்
அடைக்கும் பெரிய பெருமா ளரங்க ரவர்கரத்துப்
படைக்குங் கமல மளிக்குமின் னாழிப் படைபடைக்கும்
துடைக்குங் கதைமுத்தி மாற்றுது நல்குஞ் சுரிசங்கமே. (அங)

[திருச்சக்கரப்படை]

ஞாலத் திகிரி முதுநீர்த் திகிரி நடாத்துமிந்தக்
காலத் திகிரி முதலான யாவுங் கடல்கடைந்த
நீலத் திகிரி யனையா ரரங்கர் நிறைந்தசெங்கைக்
கோலத் திகிரி தலைநாளி னிற்கொண்ட கோலங்களே. (௮௪)

[இதுவும் அது]

மோதித் திரைதவழ் நன்னீ ரரங்கர் முடிமுதலாம்
சாதிக் கதிர்மணிப் பேரணி யாகித் தனஞ்சயன்போர்
பேதித் திரவு பகலாக விண்ணிற் பிறழ்ந்துசெங்கேழ்
சோதித் திகிரி திருமேனி யெங்குஞ் சுடர்விடுமே. (௮௫)

[திருவனந்தாழ்வான்]

ஓலாழி சூழ்புவி யுச்சியி லேந்து முகக்கடையிற்
காலான நற்குண மூர்த்தியைக் காலுமக் காலமெல்லா
மேலா விளங்கும் புவிமீதி லென்றன் விழுத்துணையாம்
மாலா மரங்க மணவாளர் கண்டுயின் மாசுணமே. (௮௬)

[இதுவும் அது]

சென்றாற் குடையாங் கடற்புணை யாந்திருத் தீவிகையா
நின்றா லிருதிருப் பாதுகை யாமித் திரைக்கணையாம்
குன்றா மணியொளி யாசன மாம்புனை கோசிகையாம்
அன்று லீலையிற் றுயிலரங் கேசர்க் கரவரசே. (௮௭)

[பெரிய திருவடி]

சிரஞ்சே தனன்விழி தேகஞ் சிறைபின் சினைபதங்கம்
தரந்தோள்க ளூரு வடிவம் பெயரெசுர் சாமமுமாம்
பரந்தே தமதடி யார்க்குள்ள பாவங்கள் பாற்றியருள்
சுரந்தே யளிக்கு மரங்கர்தம் மூர்த்திச் சுவணனுக்கே. (௮௮)

[சேனை முதலியார்]

ஆளி லமர ரரங்கேசர் சேவைக் கணுகுந்தொறும்
கோளில் திரளை விலக்கும் பிரம்பின் கொனைபடலால்
தோளி லடித்தழும் புண்டச் சுரர்க்கச் சுரர்தொழலால்
தாளின் முடித்தழும் புண்டுநெஞ் சேனைத் தலைவருக்கே. (௮௯)

[சிறிய திருவடி]

ஆதித் திருவெழுத் தைந்துடைத் தாயு மராவணிந்தும்
சோதித் திருக்கண்கண் மூன்றுடன் றோன்றுஞ் சுருதிசொன்ன
நீதிக் கிசைய நடவா மனிதரை நேமிகொண்டு
வாதித் தருளும் பெருமா ளரங்கர்தம் வாகனமே. (௯௦)

[இதுவும் அது]

வல்லா முலைத்திரு வின்பெரு மான்விட்ட வாகனம்போய்த்
தொல்லாழி நீரைக் கடந்தது தாளின் சுடரிரண்டும்
செல்லாத வூரைத் திரிபுரங் கண்டது சேனைவெள்ளம்
எல்லா முயக்கொண் டதுமருந் தார்கிரி யேந்திவந்தே. (௯௧)

[ஸ்ரீ வைகுண்டம்]

தொல்லைக் கமடத் தலநவ கண்டந் தொடுகடனீர்
எல்லைக் கிரிதனக் கிப்புறத் தெண்கிரி யப்புறத்தின்
மல்லைப் பரிதியின் மண்டல நாகமவ் வான்முகட்டோர்
அல்லப் புறத்து வைகுந்தம் பொற்கோயி லரிக்கிடமே. (௯௨)

[இதுவும் அது]

எந்த வுலகத்து மேலது நித்திய வின்பத்தது
பந்த நசிப்பது நித்தரு முத்தரும் பாரிப்பது
முந்தை மறையினின் றல்லாதெத் தேவர்க்கு முன்னவரி
தந்த மிலதரங் கன்மேவு வைகுந்த மானதுவே. (௯௩)

[திருப்பாற்கடல்]

காவுஞ் சுரபியுஞ் சிந்தா மணியுங் கடிக்கமலப்
பூவும் பணிலமும் பொங்கிள மாவும் புகர்த்தடக்கைம்
மாவும் பிறையு மமுதமு மெங்கள் மதிலரங்கர்
மேவுந் தரங்கக் கடலில்லை யாகிலிவ் விண்ணவர்க்கே. (கச)

[ஏழு மதில்களும், திருவரங்க விமானமும்]

அருமறை யோதிய வோரெட் டெழுத்து மயன்படைத்த
இருநில மீதினில் யாவருங் காண விலங்குதத்திக்
குருமணி நாகத்தி லெங்கோன் விழிதுயில் கொண்டருளத்
திருமதி லேழும் விமானமு மாகிச் சிறக்கின்றவே. (கரு)

[இதுவும் அது]

நாழா திபஞ்சொல்ல வந்தா ரரங்கர் தயங்குசெம்பொற்
கேழா விமானங் கிளர்செம்பொன் மேரு கிரிநிகர்த்த
ஏழா வரணந் திடையிடைத் தீவுக ளிவ்வனைத்தும்
சூழாறு மாகட லெவ்வாறு நாமினிச் சொல்லுவதே. (கசா)

[சயனத் திருக்கோலம்]

ஞாலத் திகிரி பகலிர வாக நடத்துமிந்தக்
காலத் திகிரி நடக்கவற் றேவெங் கனலுமிழ்வாய்
ஆலப் பணியணை மீதே யரங்கத் தமர்ந்துறையும்
நீலக் கடல்கண் விழித்துறங் காவிடி னிச்சமுமே. (கஎ)

[இதுவும் அது]

தாமக் கடையுகத் துள்ளே விழுங்கித் தரித்தபழஞ்
சேமப் புவனஞ் செரிக்குமென் றேசிவன் மாமுடிக்கு
நாமப் புனறந்த பொற்று ளரங்கர் நலஞ்சிறந்த
வாமத் திருக்கர மேலாக வேகண் வளர்வதுவே. (கஅ)

[திருக்கைகள்]

கதிராரு நீண்முடி சேர்ந்தகைப் போதெக் கடவுளர்க்கும்
அதிராச ஞனமை காண்மினென் றேசொல்லு மாயபொன்மா
மதிலா ரரங்கர்பொற் ருளார் திருக்கர மற்றிதுவே
சதுரா னனன்முத லெல்லா வுயிர்க்குஞ் சரணென்னுமே. (கக)

[வியூகமூர்த்தியே ஸ்ரீரங்கநாதன்]

மோகத் துயில்புரி மெய்போலக் கண்ட முறையினுக்கிங்
கேகத் திருவுரு வென்றறிந் தேனிந் திரையயன்போ
டாகத் துவைத்தரு டென்னரங் காவங்கு மிங்குமொக்கப்
போகத்துக் கொண்ட பணநாக மொன்று பொறுத்தபின்னே. (க00)

[எம்பெருமானது திருமேனியின் நீலநிறம்]

சோதித் திருவுரு வாகாய மாகச் சுருதிசொன் னூல்
சாதித்து நின்று தெளிந்துவிட் டேன்மிக்க தானவரைச்
சேதித்த நேமித் திருவரங் காசங்கை தீரவுன்றன்
ஆதித் திருவுரு வின்பே ரணிநிற மானபின்னே. (க0க)

[இதுமுதல் ஐந்து கவிகள்-ஆனந்த அனுபவம்]

ஓங்கார வட்டத்து மாசுணப் பாயி லுலோகமுண்ட
பூங்கார் விழிக்குப் புலப்பட்ட தாலெப் பொழுதுமென்னை
நீங்கா திடர்செய்யுந் தீவினை காளினி நின்றுநின்று
தேங்காது நீருமக் கானிடத் தேசென்று சேர்மின்களே. (க0உ)

விண்ணிட்ட சோலை யரங்கத்து மேவிய மெய்ப்பொருளைக்
கண்ணிட்ட பார்வையிற் கட்டியென் கண்வரக் கண்டுடலாம்
புண்ணிட்ட வண்ணக் கிழியுட் பொதிந்து புறத்துவெள்ளை
மண்ணிட்டி லச்சினை யிட்டுவிள் ளாதுள்ளம் வைத்தனனே. (க0ந)

கைத்துப் பழவினை தித்திக்க வென்றன் கருத்தினுள்ளே
பைத்துத்தி மெத்தையின் மீதே துயிலும்பைங் கேழெறிந்து
மைத்துக் குளிர்ந்து மதுரித்து மெத்தென்று மாமணத்து
நெய்த்துப் புகர்த்து நிகர்க்கும்பொன் மேனி நெடுங்கடலே. (௧0௪)

[கருடஸேவை]

தேள்ளா வரும்பொன்னி சூழரங் காவொரு தேவரையும்
உள்ளா தெனதுள்ளம் யானென்செய் வேன்விண்ணி லோருவணப்
புள்ளாகி வேதப் பொருளாகி யுன்னைத்தன் பொற்கழுத்தில்
கொள்ளா வருகின்ற கோலமுள் ளேகண்டு கொண்டபின்னே. ()

மூன்பா லிலைமக வாகிய போதிந்த மூதண்டங்கள்
உன்பா லொடுங்கி யிருந்தது போலு முததிமங்கைக்
கன்பா வரங்கத்தென் ஞாமு தேயனு வாயிருந்தும்
என்பா லகண்டமு மாகிய நீவந் திருக்கின்றதே. (௧0௬)

[பகவானைப் பிரார்த்தித்தல்]

வலைப்பால் விடம்பிணைக் கண்ணியர் போகத்தின் மாலுறுமென்
தலைப்பாற் கழலரு டாரரங் காபல தாயர்தந்த
முலைப்பாற் கடலுன் றிருக்கழ லாணிவெண் முத்தெறியும்
அலைப்பாற் கடவி னளவா மெனின்மற் றதுவுமன்றே. (௧0௭)

[இதுவும் அது]

தோடைமாற னுந்தமிழ் சொன்மாற னுந்தொழத் துத்திவெள்ளைக்
குடைமா சுணத்திற் றுயிலரங் கேச! குலவுவைவேற்
படைமாறு கொண்டமைக் கண்ணியர் பால்வைத்த பாகநெஞ்சை
மடைமாறி யுன்றன் றிருவடிக் கேவா வைத்தருளே. (௧0௮)

[அநந்ய கதித்வமும், பிரார்த்தனையும்]

காணங் தவிர்ந்து விழிபோய்ச் சுழன்று கலங்குமென்றன்
மரணந் தனில்வந் துதவுகண் டாய்கொற்ற வாளியொன்றால்
அரணங் கடந்தவன் காணு வரங்க!என் னுருயிர்க்குன்
சரணஞ் சரண மொழிந்தில்லை வேறித் தராதலத்தே. (கoக)

[நைர பேக்ஷ்யம்]

நீடுங் திகிரிப் படையா யுனைக்கற்று நின்னையென்றும்
பாடும் படித்தமிழ்ப் பாடறந் தாய்பழ நான்மறைநூல்
தேடுந் திருவரங் கா!அடி யேனுயிர் செல்லுமந்நாள்
வீடுந் தரவிருந் தாயெனக் கேதினி வேண்டுவதே. (கக0)

[அந்ய சேஷத்வ நிவ்ருத்தி]

ஆவைக்கல் லானவை யெதிரென்று சொல்லி யழுக்கடைந்த
நாவைப் பரிசுத்தம் பண்ணிய வேகஞ்ச நஞ்சன்விட்ட
கோவைச் சகட்டைப் பொருதிய கோயிலில்வாழ்
தேவைப் பகர்ந்தசெஞ் சொற்றிரு நாமங்கள் சிற்சிலவே. (கக௧)

---

மனிதக் கவிமொழி யாமங்கை வாழ்மண வாளவள்ளல்
புனிதக் கவிகொண்டு மாலைசெய் தான்யுயல் போன்முழங்கும்
தொனிதக்க சங்கந் திருச்சக் கரஞ்சுடர் வாண்முசலம்
குனிதக்க சார்ங்கந் தரித்தா ரரங்கர்பொற் கோயிலுக்கே. (கக௨)

## திருவரங்கத்துமாலை

முற்றிற்று.

# திருவரங்கத்தந்தாதி.

ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்

# திருவரங்கத்தந்தாதி

## சிறப்புப்பாயிரம்

கட்டளைக்கலித்துறை

மணவா ளரவிந்தை மார்நோக்க விம்மை மறுமையின்மா
மணவாளர் தம்பதம் வாய்த்திடுங் கோயிலில் வந்தவுந்த
மணவாளர் பொற்றிருப் பாதாம் புயங்கட்கு மாலையென
மணவாளர் சூடும் யமகவந் தாதியை வாசிமினே.

---

## காப்பு

[விஷ்வக்ஸேநநும், பஞ்சாயுதமும்]

ஓராழி வெய்யவன் சூழுல கேழுவந் தேத்தரங்கர்
காராழி வண்ணப் பெருமாளந் தாதிக்குக் காப்புரைக்கிற்
சீராழி யங்கையிற் பொற்பிரம் பேந்திய சேனையர்கோன்
கூராழி சங்கந் திருக்கதை நாந்தகங் கோதண்டமே. (க)

[பன்னிரண்டு ஆழ்வார்களின் அருளிச்செயல்]

வையம் புகழ்பொய்கை பேய்பூதன் மாறன் மதுரகவி
யையன் மழிசைமன் கோழியர் கோனருட் பாண்பெருமாண்
மெய்யன்பர் காற்பொடி விண்டுசித் தன்வியன் கோதைவெற்றி
செய்யங்கை வேற்கலி யன்றமிழ் வேத நிலைநிற்கவே. (உ)

[குருபரம்பரை]

சீதரன் பூமகள் சேனையர் கோன்றென் குருகைப்பிரான்
நாத முனியுய்யக் கொண்டா ரிராமர்நல் லாளவந்தார்
ஏதமில் வண்மைப் பராங்குச தாச ரெதித்தலைவர்
யாதமடைந் துய்ந்த வாழ்வானெம் பார்பட்டர் பற்றெமக்கே. (க)

[எழுபத்துநான்கு சிங்காசநாதிபதிகள்]

திருமாலை யாண்டான் றிருக்கோட்டி நம்பி திருவரங்கப்
பெருமா ளரையர் திருமலை நம்பி பெரியநம்பி
யருமால் கழல்சே ரெதிராசர் தாளிற்சிங் காதனராய்
வருமா ரியர்க ளெழுபத்து நால்வரென் வான்றுணையே.

[நம்மாழ்வார்]

மாறன் பராங்கதி தந்தடி யேனை மருட்பிறவி
மாறன் பரான குழாத்துள்வைப் பான்றொல்லை வல்வினைக்கோர்
மாறன் பராமுகஞ் செய்யாம லென்கண் மலர்க்கண்வைத்த
மாறன் பராங்குசன் வாழ்கவென் னெஞ்சினும் வாக்கினுமே (ங)

---

நூல்

திருவரங் காவுறை மார்பா! திசைமுகன் சேவிப்பச்சந்
திருவரங் காதரித் தின்னிசை பாடத் திருக்கண்வளர்
திருவரங் கா!உன் பழவடி யேற்கருள் செய்யவெழுந்
திருவரங் காத்லித் தேனுனக் கேதொண்டு செய்வதற்கே. (க)

செய்ய வளைக்குரு வின்னரு ளாற்றிருத் தாள்வணங்கிச்
செய்ய வளைக்குலஞ் சூழரங் கேசன் சிறிதமுது
செய்ய வளைக்கும் புவிக்குமங் காந்தசெவ் வாய்முகுந்தன்
செய்ய வளைக்குஞ் சிலம்பணி பாதங்கள் சேர்ந்தனமே. (உ)

தனமா தாஞ்சொற் குதலைப் புதல்வர் தாரணியில்லந்
தனமா தாஞ்செயும் வாழ்வஞ்சி யேதஞ்ச மீயெனப்போந்
தனமா தரங்கிக்க வெற்பெடுத் தாய்!தண் ணனந்தசிங்கா
தன!மா தரங்கமுள் ளாய்!அரங் கா!முத்தி தந்தருளே.

தந்தம லக்குமுன் னின்றபிரா னெதிர் தாக்கிவெம்போர்
தந்தம லக்குமைத் தானரங் கேசன்றன் பூவினடைத்
தந்தம லக்குத் தலைவன்பொற் பாதஞ் சரணென்றுய்யார்
தந்தம லக்கும் வினையானை வார்பலர் தாரணிக்கே. (௪)

தாரணி தானவன் பாலிரந் தான்சங்கம் வாய்வைத்தொன்னார்
தாரணி தானவஞ் செய்தா னரங்கன் றமர்கள்பொருந்
தாரணி தான வமரா வதியுந் தருநிழலுந்
தாரணி தான வயிரா வதமுந் தருகினுமே. (௫)

தருக்காவ லா!என்று புல்லரைப் பாடித் தனவிலைமா
தருக்காவ லாய்மயி லே!குயி லே!என்று தாமதராய்த்
தருக்காவ லாநெறிக் கேதிரி வீர்!கவி சாற்றுமின்பத்
தருக்காவ லாயுதன் பின்றோன் றரங்கர்பொற் றாளிணைக்கே. (௬)

தாளத் தனத்தத்தைச் சொல்லிய நால்வருந் தாழ்மலபா
தாளத் தனத்தத்தைத் தப்பநிற் பீர்!புடை தங்கியவே
தாளத் தனத்தத்தைத் தீர்த்தா னரங்கன் சகடுதைத்த
தாளத் தனத்தத்தை யாயுதன் பாதந் தலைக்கொண்மினே. (௭)

தலையிலங் காபுரஞ் செற்றா னரங்கனென் றூழ்சொற்புன்கு
தலையிலங் காதரஞ் செய்தபி ரான்சர ணன்றிமற்றோர்
தலையிலங் காநின்ற கண்ணிலங் காண்கைக்குத் தாழுகைக்குத்
தலையிலங் காதிலங் கேட்கைக்கு வாயிலஞ் சாற்றுகைக்கே. (௮)

கைக்குஞ் சரமன் றளித்தாய்! அரங்க!மண் காக்கைக்கு மாய்க்
கைக்குஞ் சரம சரம்படைத் தாய்!கட னீறெழத்து
கைக்குஞ் சரமக ரக்குழை யாய்!எனைக் கைக்கொளுடல்
கைக்குஞ் சரம தசையிலஞ் சேலென்றென் கண்முன்வந்தே. (௯)

வந்தனை யேற்றனை யென்புன்சொற் கொண்டனை வன்மனத்தே
வந்தனை யேற்றனை யாவையு மாயினை வான்றரவு
வந்தனை யேற்றனைத் தாளொத்த தாளில்வைப் பாய்பலித்து
வந்தனை யேற்றனைத் தீர்த்தாய்! அரங்கத்து மாதவனே! (௧௦)

மாதங்கத் தானை யரங்கனை வஞ்ச னிலங்கையிலே
மாதங்கத் தானை யிருதிங்க டாழ்த்துப்பின் வாம்பரிதேர்
மாதங்கத் தானை வலத்தானை முன்வதைத் தானைத்தன்பான்
மாதங்கத் தானைவைத் தானைவைத் தேனென் மதியகத்தே. (௧௧)

மதிக்கவ லைப்புண்ட வெண்டயிர் போல மறுகுறுமென்
மதிக்கவ லைப்புண் டணிகின்றி லேன்மண்ணும் வானகமு
மதிக்கவ லைப்புனல் சூழரங் கா!நின் மனத்தருடா
மதிக்கவ லைப்புன் பிறப்பினி மேலும் வருங்கொலென்றே. (௧௨)

வருந்துவ ளைப்பட்ட மங்கைய ரெண்மர் மணங்களைக்க
வருந்துவ ளைப்பட்ட வாயரங் கேசனை வஞ்சப்பகை
வருந்துவ ளைப்பட்ட வேழமட் டானை மறந்துலகோர்
வருந்துவ ளைப்பட்ட வீப்போன் மடந்தையர் மால்வலைக்கே. (௧௩)

மாலைக்கல் லார மடவார்புண் ணுக்கையில் வாஞ்சைவைத்து
மாலைக்கல் லாரம் புலிக்குகை யாகிற்பர் மாய்விப்பதோர்
மாலைக்கல் லாரம் புயத்தாளில் வைக்கு மதிலரங்க
மாலைக்கல் லாரஞ் சலியாரென் னே?சில மானிடரே. (௧௪)

மானிட ராக வரலரி தோர்மண் டலத்திநெறி
மானிட ராகமி லாதவ னுதன் மலரயனுர்
மானிட ராகமத் தாலன்ப ராய வரங்கத்துளெம்
மானிட ராக மலரடிக் காட்படும் வாழ்வரிதே. (கரு)

அரிதா மரைக்கணந் தோலுடுத் தாரய னுர்க்கரியான்
அரிதா மரைக்கணம் மான்றிருப் பாத மடைமின்! சன்மம்
அரிதா மரைக்கணந் தங்கா துயிரவ னூர்வினவில்
அரிதா மரைக்கண மீர்த்தோடும் பொன்னி யரங்கமன்றே? (கசு)

அரங்காத் வார்கணை கண்வள்ளை கோங்கி னரும்புமங்கை
அரங்காது வார்முலை யென்றைவர் வீழ்ந்தன ராடரவின்
அரங்கா! து வாரமி லாமணி யே! அணி யார்மதில்சூழ்
அரங்கா! து வாரகை யாய்! அடி யேனுன் னடைக்கலமே. (கஎ)

அடைக்கலந் தாயத் தவர்போ லுடலுறை யைவரையும்
அடைக்கலந் தாயுல கங்கொண்ட தாள்களுக் கண்டமுண்டால்
அடைக்கலந் தாய்! அரங் கா! ஆயர் பாடியி லன்றுநெய்பால்
அடைக்கலந் தாய்வைத்து வாய்நெரித் தூட்ட வழுமையனே! (கஅ)

ஐய மருந்திவை யுண்! என்று மாதராட் டேடுஞ்செல்வம்
ஐய மருந்தினைப் போதே யவரின்ப மாதலினுல்
ஐய மருந்தியக் கங்குறு காமுன் னரங்கர்க்கன்பாய்
ஐய மருந்தியும் வாழ்மின்கள்! மேலுமக் காநந்தமே. (கக)

நந்த மரங்களை மாசட லேழு நடுங்கவெய்த
நந்த மரங்களைப் பற்றுநெஞ் சே! வினை நையுமுன்கை
நந்த மரங்களை யார்மயல் போம்வரு நற்கதிவா
நந்த மரங்களை வர்க்குமெஞ் ஞான்று நரகில்லையே. (உ0)

நரகந் தரம்புவி யிம்மூன் றிடத்து நனிமருவு
நரகந் தரங்கித்து வெங்காலற் கஞ்சுவர் நாயகவா
நரகந் தரம்புட் பிடரே றரங்கர்நல் லாய்க்குலத்தி
நரகந் தரங்கமுற் றாடி யார்க்கு நமனஞ்சுமே. (உக)

அஞ்சக் கரத்தலைக் கங்கைய னேற்றலு மஞ்சிறைய
அஞ்சக் கரத்தலைக் குண்டிகை யான்மண்டை யங்கைவிட்டே
அஞ்சக் கரத்தலைச் செய்துபித் தேக வருளரங்கன்
அஞ்சக் கரத்தலை வன்று ளலான்மற் றரணிலையே. (உஉ)

இலங்கையி லாதர னைங்கரன் மோடி யெரிசுரத்தோன்
இலங்கையி லாத மலையான் வீச னிரியவெம்போர்
இலங்கையி லாத படிவாண னைச்செற்ற வென்னரங்கன்
இலங்கையி லாதவன் போகக்கண் டானென் னிதயத்தனே. (உங)

[தலைவி இரங்கல்]

அத்தனை வேதனை யீன்ற வரங்கனை யைம்படைசேர்
அத்தனை வேதனை வாய்வைத்த மாயனை யாரணங்கோர்
அத்தனை வேதனைத் தீர்த்தானைச் சேர்க்கில ளாயிரஞ்சால்
அத்தனை வேதனை யப்புவள் சாந்தென் றனலரைத்தே. (உச)

அரைக்கலை வேலை யுடுத்தமண் பல்பக லாண்டுபெற்றல்
அரைக்கலை வேலை யுடைவேந்தர் வாழ்வெண் ணலைவரையும்
அரைக்கலை வேலை யவர்க்கே புரிவையென் றுலுநெஞ்சே!
அரைக்கலை வேலை யரங்கனுக் காட்பட வாதரியே. (உரு)

ஆதவ னந்தரந் தோன்றுமற் கன்மழை யார்த்தெழுநாள்
ஆதவ னந்தர வெற்பெடுத் தானடி யார்பிழைபார்
ஆதவ னந்தரங் கத்தா னரங்க னடியனென்றன்
ஆதவ னந்தரங் கண்டீர் வினைவந் தடைவதுவே. (உசு)

அடையப்பன் னாகங் கடிவா யமுதுக வங்கிகுளிர்
அடையப்பன் னாக மருப்பா யுதமிற வன்றுகுன்றால்
அடையப்பன் னாக மிசைதாங்கப் பாலற் கருள்செய்ததால்
அடையப்பன் னாகங் கரியா னரங்கனெட் டக்கரமே. (௨௭)

அக்கர வம்புனைந் தாரய னாரிடை யாயிருநால்
அக்கர வம்பு மலராள் கொழுந னரங்கன்செங்கோல்
அக்கர வம்புயன் றான்மூல மென்ப தறிவித்திடான்
அக்கர வம்புவி மேல்வேழ மேவெளி யாக்கியதே. (௨௮)

ஆக்குவித் தார்குழ லாலரங் கேசரன் பால்விதுரன்
ஆக்குவித் தார வடிசிலுண் டார்கட லாடையகல்
ஆக்குவித் தாரறி வற்றேனைத் தம்மடி யார்க்கடிமை
ஆக்குவித் தாரடி யேயடி யேனுய்க்கு மாரமுதே. (௨௯)

ஆரா தனஞ்செய்து கண்டனின் கீர்த்தி யறைவன்றிரு
ஆரா தனஞ்செய்வன் வேதாவென் றாலடி யேன்புகழ்கைக்கு
ஆரா தனஞ்செய்ய போதாந் திருமக ளாக!பல்பூண்
ஆரா! தனஞ்செயன் பாசா! அரங்கத் தமர்ந்தவனே! (௩௦)

அமர வரம்பையி னல்லார் பலரந்திக் காப்பெடுப்ப
அமர வரம்பையில் வேல்வேந்தர் சூழமண் ணாண்டிருந்தோர்
அமர வரம்பையில் கான்போ யிறந்தன ராதலில்வீடு
அமர வரம்பையின் மஞ்சா ரரங்கருக் காட்படுமே! (௩௧)

ஆளாக வந்த வடியேற் கருள்பரி யானைதிண்டேர்
ஆளாக வந்தனிற் செற்றிலங் கேசனை யட்டவல்வில்
ஆளா!க வந்தன் புயந்துணித் தாய்!அரங் கா!முளரி
ஆளாக! அந்தமி லுன்னடி யார்க்கன்ப னாவதற்கே. (௩௨)

ஆவா கனத்த ரடியார் மனத்துட்புள் ளானவொப்பில்
ஆவா கனத்த ரரங்கர்பொற் றாளுக் கடிமைப்படார்
ஆவா! கனத்த வழுக்குடல் பேணி யறிவிழந்தவ்
ஆவா கனத்த ரிருந்தென்? இராமலென்? அம்புவிக்கே. (கங)

அம்பு விலங்கை நகர்பாழ் படச்சங்கு மாழியும்விட்டு
அம்பு விலங்கைகொண் டாய்! அரங் கா! அன் றிடங்கர்பற்றம்
அம்பு விலங்கை யளித்தாய்! இனியென்னை யாசையென்றிய்
அம்பு விலங்கையிட் டேசுஞ் சிறையி லடைத்திடலே. (கச)

இடவ மலைக்கும் புயங்க மலைக்கு மிலங்குமகல்
இடவ மலைக்கு மிருங்கம லைச்கு மிறைவ! சங்க
இடவ! மலைக்கும் புனலரங் கா!எய்த்த மார்க்கண்டன்கண்டு
இடவ மலைக்கு முலகழி யாதுள் ளிருந்ததென்னே! (கரு)

இருந்தை யிலங்க வெளிறுப டாதென்செய் தாலுநிம்பத்து
இருந்தை யிலந்தித்தி யாதவை போற்புல்லர் யாவுங்கற்றுய்ந்து
இருந்தை யிலம்பன்ன கண்ணார்க்கல் லால்வெண்ணெ யில்லிலொளி
இருந்தை யிலங்கை யரங்கர்க் கன்பாகி யிருக்கிலரே. [த்து

இருக்குமுந் தத்தி லறியா வரங்கன்மண் ணேழுண்டுந்தய்
இருக்குமந் தத்திரு வாய்மலர்ந் தானெட் டெழுத்தைக்குறி
இருக்குமந் தப்புத்தி யீர்த்தால் வீடெய்த லாகுங்கைபோய்
இருக்குமந் தச்செவிட் டேமன்முந் நீர்கடந் தேறிடிலே. (கஎ)

ஏறுங் கரியும் பரியுஞ்செற் றான்பர னென்றுமன்றுள்
ஏறுங் கரிமறை யாதலி னாலையம் யாதுமக்கீடு
ஏறுங் கரியவ ரங்கர்க்கன் பாய்வினை யென்னுமிடி
ஏறுங் கரியு மினிமேற் பிறவி யிடரில்லையே. (கஅ)

இடராக வந்தென்னைப் புன்சிறு தெய்வங்க ளென்செயு(ம்?)மான்
இடராக வன்பிணி மாநாக மென்செயும்? யான்வெருவி
இடராக வன்னி புனலிடி கோண்மற்று மென்செயும்? வில்
இடராக வன்னரங் கன்றிருத் தாளென் னிதயத்ததே. (௩௯)

அத்திரங் காய மெனவுண ரேனென தாசையுன்கை
அத்திரங் காயத் தியிற்பெரி தானரை யாகிப்பல்வீழ்
அத்திரங் காயந் திரம்போற் பொறியைந் தழியுமக்கால்
அத்திரங் காயரங் கா! அடி யேனுன் னடைக்கலமே. (௪௦)

கலக்கூழைக் கைக்குங் கருத்துடை யீரரங் கத்துளிலைக்
கலக்கூழைக் கைக்குங் கறியிட்டுந் துய்த்திருங் காதுபடைக்
கலக்கூழைக் கைக்குள் வருவா ணனைக்கண் ணுதலும்விட்ட
கலக்கூழைக் கைக்குப்பை கண்டானை வீதியிற் கண்டுவந்தே. (௪௧)

கண்ட கனவின் பொருள்போல யாவும்பொய் காலனென்னுங்
கண்ட கனவி கவர்வது வேமெய் கதிநல்[illegible]னைக்
கண்ட கனவிப் பொழுதேசெல் லென்றருள் காரரங்கற்
கண்ட கனவின் புறக்கண்டு வாழ்த்திக் கடிதுய்ம்மினே! (௪௨)

கடிக்கும் பணிநஞ் சமுதாகுந் தீங்குநன் காகும்பராக்
கடிக்கும் பணியலர் தாழ்வார்கல் லாமையுங் கற்றமையாங்
கடிக்கும் பணியற மெல்லா மரங்கர்பைங் கன்னித்துழாய்க்
கடிக்கும் பணியொளிக் குங்கல்ல பாதங் கருதினர்க்கே. (௪௩)

தினகர னார்கலி தீகாற் றொடுங்குஞ் செயலும்விண்மீ
தினகர னார்கொண்ட லேழ்செருக் காமையுஞ் சென்றெதிர்மோ
தினகர னாருயிர் செற்றா ரரங்கர் திகிரிசங்கேந்
தினகர னார்நம் பெருமா ளமைத்த திருக்கைகண்டே. (௪௪)

திருக்கா விரிக்கும் யமுனைக்குங் கங்கைக்குந் தெள்ளமுதாந்
திருக்கா விரிக்குங் கடற்கும் பிரான்றென் னரங்கமென்னத்
திருக்கா விரிக்கு மொழியார்க்குத் தீமெழு காவிரன்புய்த்
திருக்கா விரிக்கும தெவ்வா றவனுங்கள் சென்மத்தையே. (சரு)

சென்மந் தரங்கங் கருமஞ் சுழிபிணி சேலினங்கு
சென்மந் தரங்கதிர் பொன்கோள்கண் மாரிதிண் கூற்றசனி
சென்மந் தரங்கவற் றுள்விழு வோர்களை சேர்க்கும்வங்கஞ்
சென்மந் தரங்கவின் றோளா ரரங்கர் திருப்பதமே. (சசு)

பதக்கம லங்க லணிமார்ப! பொன்னி படிந்திமையோர்
பதக்கம லங்க ளறுசீ ரரங்க பகட்டயிரா
பதக்கம லங்கரித் தூர்வோன் சிவனயன் பார்க்கவந்துன்
பதக்கம லங்க ளடியேன் றலைக்கென்று பாலிப்பதே! (சஎ)

பாலனஞ் செய்யமர் நாடாண்டு பூணெடு பட்டணிந்து
பாலனஞ் செய்யக லத்துண்டு மாதர்பல் போகத்தையும்
பாலனஞ் செய்ய விருப்பதி லையம் பருகிநந்தன்
பாலனஞ் செய்யவள் கோமா னரங்கம் பையில்கைநன்றே. (சஅ)

பையிலத்தி மூளை நரம்பூ னுதிரம் பரந்தகுரம்
பையிலத்தி யுள்விளை பாண்டமென் னுமற்புன் பாவையர்தோற்
பையிலத்தி செய்து நரகெய்து வீர்!உய்யப் பற்றுமினே!
பையிலத்தி மேவித் துயில்கூ ரரங்கர்பொற் பாதத்தையே. (சகூ)

பாதகங் கைக்கு மரங்கர்பல் பேய்பண்டி ராவணனுற்
பாதகங் கைக்குமென் றெள்ளக்கொய் தார்படிக் கேற்றதிருப்
பாதகங் கைக்குள் விழுமுன்ன மேபங்க யன்விளக்கும்
பாதகங் கைக்குளிர் நீர்வீழ்ந்த தீசன் படர்சடைக்கே. (ருo)

படநாகத் தந்தர மீதிருப் பானெம் பரனரங்கன்
படநாகத் தந்தம் பறித்தோன் புகழைப் பரவுமின்!க
படநாகத் தந்தக் காணம்பொல் லான்சிசு பாலன்முற்பல்
படநாகத் தந்த வசைக்குந்தந் தான்றெல் பரகதியே. (௫௧)

பரவையி லன்னகட் பாஞ்சாலி நின்பர மென்னவிரு
பரவையில் மேகலை யீந்தா னரங்கன் பணிந்திமையோர்
பரவையி லாழிப் பிரானடிக் கீழுற் பவித்தழியும்
பரவையில் மொக்குளைப் போற்பல கோடி பகிரண்டமே. (௫௨)

அண்ட மடங்கலை யுந்தந்து காத்தவை யந்தன்பால்
அண்ட மடங்கலைச் செய்கா ரணமப்பொன் முத்தலைவான்
அண்ட மடங்கலை யீர்த்தோடும் பொன்னி யரங்கன்புட்கார்
அண்ட மடங்கலை முந்நீர் மகளுகப் பாகவென்றே. (௫௩)

ஆக மதிக்கு முகமேன் முகமுடை யானயன்வாழ்
ஆக மதிக்கு நவநீதக் கள்வ! அவனிகொள்வார்
ஆக! மதிக்குளஞ் சோரங் கா!உன்னை யன்றித்தெய்வம்
ஆக மதிக்குளெண் ணேனடி யேன்பிற ராரையுமே. (௫௪)

ஆரத் தநந்தருந் தாய்தந்தை யாநந்த மாவரிகழ்
ஆரத் தநந்தனன் நீமைகண் டாலங் கவுத்துவ!பூண்
ஆரத் தநந்த சயனு! அணியரங் கா! திகிரி
ஆரத் தநந்தன் மதலாய்! என் றீங்குனக் கத்தன்மைத்தே. (௫௫)

அத்தனு மன்புள வன்னையும் பேரு மனந்தமதாம்
அத்தனு மன்புல ஞதலி னுண்டரு ளம்புயைவீர்
அத்தனு மன்புய மீதே றரங்கனஞ் சார்ங்கவயிர்
அத்தனு மன்புகல் பேரிரு வீர்க்கு மடியனென்றே. (௫௬)

அடியவ ராகவு மாட்கொள் ளவுமெண்ணி யாருயிர்கட்கு
அடியவ ராகம் படைத்தமை யாலக மே!பெரிய
அடியவ ராக வரங்கருக் காட்செய ருட்கதையால்
அடியவ ராகஞ்செய் மாரனுக் காட்செயு மைவரையே. (௫௭)

[செவிலித்தாய் நற்றய்க்கு அறத்தொடுநிற்றல்]

வரையாழி வண்ண ரரங்கேச ரீசன்முன் வாணன்றிண்டோள்
வரையாழி யார்புள்ளின் வாகனத் தேவந்த நாடொட்டிற்றை
வரையா ழியதுய ராய்த்தூசு நாணு மதியுஞ்செங்கை
வரையா ழியும்வளை யும்மிழந் தாளென் மடமகளே. (௫௮)

[தலைவி, தனது வேட்கை மிகுதியைக் கூறல்]

மகரந்த காதலை வாழ்வென்ன வாரிசுட் டாய்!திதிதன்
மகரந்த கா!தலை வானினுள் ளோர்க்குமண் ணோர்க்குவட்டா
மகரந்த! காதலை வார்குழை யாய்!வளர் சீரங்கதா
ம!கரந்த காதலை வாக்கிற்சொல் லேன்மட வாரெதிரே. (௫௯)

[இதுவும் அது]

வாராக! வாமன னே!யரங் கா!வட்ட நேமிவல
வா!ராக வா!உன் வடிவுகண் டான்மன் மதனுமட
வாராக வாதரஞ் செய்வனென் றுலுய்யும் வண்ணமெங்கே!
வாராக வாச முலையேனைப் போலுள்ள மாதருக்கே. (௬௦)

மாதம்பத் துக்கொங்கை யும்மல்குற் றேரும் வயிறுமில்லை
மாதம்பத் துக்குறி யுங்கண்டி லேம்வந்து தோன்றினைபூ
மாதம்பத் துக்கெதிர் மார்பா! அரங்கத்து வாழ்பரந்தா
மா!தம்பத் துக்கருத் தில்லார் பிறப்பென்பர் வையகத்தே. (௬௧)

வைகுந்தர் தாமரை போற்பாதர் நாகத்து மாதர்புடை
வைகுந்த மேற்கொண் டிருந்தோர் வடிவைந்தின் வாழுமிடம்
வைகுந்தம் பாற்கடன் மாநீ ரயோத்திவண் பூந்துவரை
வைகுந்த மன்பர் மனஞ்சீ ரரங்கம் வடமலையே. (௩௨)

வடமலை தென்மலை கச்சி குறுங்குடி மாணிற்பது
வடமலை வேலை யரங்கங் குடந்தை வளருமிடம்
வடமலை கொங்கைத் திருவோ டிருப்புவை குந்தங்கா
வடமலை யன்ப ருளநடை யாட்ட மறையந்தமே. (௩௩)

அந்தக ரா!சலம் வந்தா லுனையழை யாதிருப்பார்
அந்தக! ராசலங் காபுரி யார்க்கரங் கா!மறையின்
அந்த!க ராசலக் கூக்குர லோயுமுன் னூழ்தடங்கல்
அந்தக ராசலத் தேதுஞ்ச நேமி யறுக்கக்கண்டே. (௩௪)

அறுகு தலைப்பெய் பனிபோன்ற தாதரு வாய்ப்பிறந்தல்
அறுகு தலைப்பிள்ளை யாய்க்காளை யாய்க்கிழ மாகி[illegible]ள்
அறுகு தலைச்செய்து வீழ்காய நானென்னு மாரிருளை
அறுகு தலைக்கொள் பணியரங் கா!நின்க ணாசைதந்தே. (௩௫)

ஆசுக விக்கு நிகரெனக் கில்லையென் றற்பரைப்பூ
ஆசுக விக்குவில் வேள்வடி வா!அறிவா லகத்திய்
ஆசுக! இக்கு வலயமன் னு!என் றாற்றியிரந்து
ஆசுக விக்கும் புலவீர்! புகழ்மி னரங்கனையே. (௩௬)

கனகவி மானமற் றீனர்க் குரைக்கிலென் கால்பெற்றவா
கனகவி மானற் கருடப்புள் ளூர்தியைக் கான்மலர்கோ
கனகவி மானம் புவிமான் றடவரக் கண்வளருங்
கனகவி மானத் தரங்கனை நாச்சொல்லச் சற்றபின்னே. (௩௭)

கற்றின மாயவை காளையர் வான்கண்டு மீணினைவ
கற்றின மாயமு நீகன்று காளைய ராகிப்பல்ப
கற்றின மாயர் பரிவுறச் சேரி கலந்தமையுங்
கற்றின மாயவொண் ணுவரங் கா!செங் கமலற்றுமே. (௬௮)

கமலங் குவளை மடவார் தனங்கண்க ளென்றுரைத்த
கமலங் குவளை முதுகா கியுங்கரை வீர்!புனற்கா
கமலங் குவளை விளையா டரங்கன் விண் காற்றுகனல்
கமலங் குவளையுண் டான்றொண்ட ராயும்மின் காமமற்றே. (௬௯)

காமனத் தால்விழ வூதியக் காலவக் கவராங்கன்
காமனத் தா!என்று நைவார்க் கமுதன்கன் னெஞ்சர்க்கிரங்
காமனத் தானளக் குங்கடற் பார்கலம் போன்றதுமீ
காமனத் தாமரை யோன்கங்கை பாய்மரங் கான்மலரே. (௭௦)

மலருந்தி மேல்விழ மெய்நெரித் தான்வைய மேழுந்துஞ்சா
மலருந்தி ஞானரங் கன்குற ளாய்மண் ணளந்தவந்நாண்
மலருந்தி வாக்கதிர் வண்குடை யாய்முடி மாமணியாய்!
மலருந்தி யாய்த்திருத் தாள்விர லாழி மணியொத்ததே. (௭௧)

மணிவாசற் றூங்க வொருகுடைக் கீழ்வையங் காத்துச்சிந்தா
மணிவா சவனென வாழ்ந்திருப் போர்பின்னை மாதிருக்கு
மணிவாச மார்பரங் கா!கேச வா!என்று வாழ்த்தித்திரு
மணிவாச கங்கொண் டணிவா ரடியை வணங்கினரே. (௭௨)

வணங்கரி யானரங் கன்னடி யார்தொழ வாளரவு
வணங்கரி யாடற் பரிதேர் நடத்தெந்தை வானவர்க்கும்
வணங்கரி யானன்றிக் காப்பாரில் லாமைவிண் மண்ணறியும்
வணங்கரி யான்வர் வாணன்கண் டாகனன் மார்க்கண்டனே. (௭௩)

கண்டலங் கார ளகங்கெண்டை மேகங் கவிரிதழ்சொல்
கண்டலங் கார முலையிள நீரொன்று கன்னியர்சீர்
கண்டலங் கார மருளேன் புனற்கயல் கொக்கென்றஞ்சக்
கண்டலங் கார மலராரங் கேசர்க்குக் காதலனே (எச)

காதலை வாரிமண் வெண்கோட்டில் வைத்துண்டு காட்டியரங்
கா!தலை வா!கழற் குள்ளாக்கி னுய்கரப் பெங்கெனவே
காதலை வார்குழை வைதேகி யைநின் கருத்துருக்குங்
காதலை வானரர்த் தேடவிட் டாயிது கைதவமே. (எரு)

தவராக வக்கணை யொன்றுற் கடற்றெய்வந் தானென்றிருங்
தவராகந் தீர்த்துத் தொழக்கண்ட நீதர்ப்பை மேற்கிடந்து
தவராகப் பாவித்தென் னோ?தொழு தாய்தண் ணரங்கத்துமா
தவ!ராக வா!கண்ண னே!எண் ணெணுவவ தாரத்தனே! (எசா)

தாரா கணமண் ணளந்தவ நாளன்பர் சாத்துந்துழாய்த்
தாரா! கணம்புயம் போலரங் கா!தல மேழுக்குமா
தாரா! கணமங்கை யாய்!உம்பர் தூவிய தண்மலர்வீழ்
தாரா கணமுகில் லாகாற்றிற் சூழ்வளந் தாஞெக்குமே. (எஎ)

தானந் தியாகந் தவங்கல்வி தீர்த்தந் தழலிலவி
தானந் தியாகந் தருமிழி பாயின தண்ணரங்கத்
தானந் தியாகப் பகன்மறைத் தான்பெயர் தந்திடும்வே
தானந் தியாகண் டலனறி யாப்பரந் தாமத்தையே. (எஅ)

தாமரை மாத்திரை மூப்பற்ற வானவர் தண்ணறுஞ்செந்
தாமரை மாத்திரை வந்தா டலைவரைத் தண்ணரங்க
தாமரை மாத்திரை போல்வளைந் தேற்றுத் தருப்பொருட்டால்
தாமரை மாத்திரைக் கேசங்கி னோசையிற் சாய்ந்தனரே. (எகூ)

சாகைக்குந் தத்துத் துகிறூக்கி மாதர் தமைநகைத்தாய்!
சாகைக்குந் தத்துவங் கட்குமெட் டாய்!தண் புனலரங்கே
சாகைக்குந் தத்துப் புடையாழி யேந்த றமர்கள் வெய்யோர்
சாகைக்குந் தத்து தவிர்கைக்கும் போலுமுன் சங்கற்பமே. (௮0)

சங்கத் தமரர் குழாத்தொடு மூழ்வினை தான்விலங்கச்
சங்கத் தமரன் பராயிருப் பீர்கட ருனவர்தே
சங்கத் தமரம் படவெய்த சார்ங்கத் தனுவரங்கன்
சங்கத் தமரன் சரணே சரணென்று தாழ்ந்திருமே. (௮௧)

இருந்தே னுகமுட வன்வரை நோக்கி யிருப்பதுபோல்
இருந்தே னுகந்துனை வைகுந்த நோக்கி யெதிர்பொருங்கேள்-
இருந்தே னுகனும் படவதைத் தாய்!வெண்ணெ யாமத்தொளித்து
இருந்தே னுகரரங் கா!காணு நாளினி யென்றருளே. (௮௨)

அரும்பா கவதரிக் கும்பெரு ராய்ப்புள் ளரசினுக்கோர்
அரும்பா கவதார்த் துப்பனை யாயரங் கா!எனவுண்-
அரும்பா கவதர் பததீர்த்தங் கொள்ளா தடிகள்கொப்புள்
அரும்பா கவதர் தொலைப்பார்கல் லார்கங்கை யாடுதற்கே. (௮௩)

ஆடுமுன் னீர்முதற் றீர்த்தத்தி னுலரு மாதவத்தால்
ஆடுமுன் னீர்மறை வேள்வியி னுலண்ட ராயுடன்மாறு
ஆடுமுன்னீரது மாயையி னுலென் றரங்கனைக்கொண்ட்-
ஆடுமுன் னீர்செய்த பாவமும் போய்முத்த ராம்வண்ணமே. (௮௪)

வண்ணங் கலிவஞ்சி வெண்பா வகவல் வகைதொடுத்தோர்
வண்ணங் கலிகெட வேண்டுமென் றேமக்கண் மாட்டுரையேன்;
வண்ணங் கலிகடல் போல்வா னரங்கன் வகுளச்செல்வன்
வண்ணங் கலியன் புகழ்தா ளெனக்கென்று மாநிதியே. (௮௫)

மாளு கவரு நிருதன்புன் மாயையின் மங்கையென்னு
மாளு கவரு மணியைமுன் னீங்கினன் மாயனென்பார்:
மாளு கவரும் பலர்சோலை சூழு மதிலரங்கா!
மாளு கவரு மமுதே! அதுவுநின் மாயமன்றே. (அசு)

மாயா தவர்தலை வா!அரங் கா!வட மாமதுரை
மாயா! தவரண்டர் வந்தடைந் தான்மழு வாளிபிர
மாயா தவர்செய்வர் முந்நூல்செந் நூல்கொண்ட வண்ணமொப்ப
மாயா தவரத் தனைக்குடல் கோத்ததுன் வாணகமே. (அஎ)

நகமுண் டகந்தரித் தாற்கருண் மாயற்கு ஞாலமுந்நீர்
நகமுண் டகமகிழ்ந் தாற்கடி யேமென் மினற்கதிவா
நகமுண் டகம்பர னென்னு தரங்கனை நாடிலயன்
நகமுண் டகமலர் தான்குவி யாது நடுக்குளத்தே. (அஅ)

குளப்படி செய்யடி சிற்கொத்த தோ!கொ[illegible]ப் பற்றியதோ!
குளப்படி யிற்றிங்கள் சேரரங் கா!கோல மாயவன்று[illegible]
குளப்படி காட்டும் பிறைமறுப் போலொரு கோட்டிருந்து
குளப்படி யின்னகத் துட்பகல் போன்ற குவலயமே. (அகூ)

குவலையஞ் சூழ்கடல் காயா மரகதங் கொண்டனெய்தல்
குவலையங் கண்டன்பர் நைவரென் றூற்கொற்ற வாணற்குவா
குவலைய நேமிதொட் டாய்!அரங் கா!கொடும் பல்பிறப்பா
குவலையங் கற்றுனைக் காணிலென் னுங்கொல்! குறிப்பவர்க்கே. (கூ0)

குறியானைச் செங்க ணெடியானை வானவர் கோவைச்சங்கக்
குறியானை வித்த திருவரங் கேசனைக் கூவிநின்று
குறியானை காத்தவ னைப்பாடி னேன்கொடி கூப்பிடினுங்
குறியானை யப்பவர் போற்கோடி யேன்சொலுங் கொள்வனென்றே.

வனத்திற் சிலம்பி விடுநூலுட் பட்டு மசகமெய்த்த
வனத்திற் சிலம்பின போதற்பிணி வாய்ப்பட்டென் வாய்புலம்பின்
வனத்திற் சிலம்பின் குரலன்னம் வாழு மரங்கனிப்பு
வனத்திற்சிலம்பினின் றுன்கேட்கு மோ? உம்பர் வாழ்த்தைவிட்டே.

விடத்தேரை மன்னும் வனப்பாழ்ங் கிணற்றுள்வெம் பாம்புபற்றும், விடத்தேரை வாய்வண்டு தேன்வேட்டல் போல்விசித் துக்கொடுபோய், விடத்தேரை யில்வெங்கட் கூற்றையெண் ணுதெண்ணும் வேட்கையெல்லாம், விடத்தேரை யூரரங் கன்றிருத் தாளில் விழுநெஞ்சமே. (௧௩)

விழுங்கூன் றசைச்சுவர் நீர்மலங் கோழைவெம் பித்தொடுங்க
விழுக்கூ னரம்புறி யென்பேணி தோற்சட்டை வீழ்ந்துகொந்த
விழுங்கூந்த லாரழப் பாடையிற் போய்ச்சுடும் வெய்யசெந்தீ
விழுங்கூன நோய்க்குடில் வேண்டே னரங்க விமானத்தனே! (௧௪)

மானத் துவண்ட லுழவோ ரெழுத்தின் வடிவுற்றசீர்
மானத் துவண்ட வினையாள ராயினு மால்வளர்வி
மானத் துவண்டல மாமரங் கம்வழி யாவரினு
மானத் துவண்டமர் தாரண்ட ராம்பதம் வாய்க்குமங்கே. (௧௫)

அங்காக்கைக் கேமங்கைக் கீந்தா னரங்க னவனிக்குவாய்
அங்காக்கைக் கேபசித் தானிற்க வேமுத்தி யாக்கித்துயர்-
அங்காக்கைக் கேசிலர் வேறே தொழுவ ருந்திரவிய்-
அங்காக்கைக் கேதனத் தாடரு மோ? திரு வன்றியிலே. (௧௬)

அன்றே யுடைய வுனக்கே யடிமையென் றுய்ந்துணர்ந்தார்
அன்றே யுடையப் படுவா ருளையரங் காவனத்திய-
அன்றே யடையை யயில்வோரு மீதறி யாரறிஞர்
அன்றே யடையைப் புலனுலு நன்கில்லை யாங்கவர்க்கே. (௧௭)

ஆங்கார மாமின்னைத் தோய்மார் பரங்க னளையினையுண்டு
ஆங்கார மானில முண்டாற்குத் தொண்டனிவ் வண்டத்தப்பால்
ஆங்கார மான்பகு திப்புறம் போயமு தாற்றிற்படிந்து
ஆங்கார மானடி காண்பே னவன்ற னருள்சிந்தித்தே. (கூஅ)

சிந்தா குலமுய்யக் குன்றெடுத் தாய்!தென் னரங்க!சுற்றுஞ்
சிந்தா குலகம் படைத்தளித் தாய்!நிலஞ் சென்றிரந்த
சிந்தா குலவுசெல் வந்தந்தை தாய்குரு தெய்வமுநீ
சிந்தா குலமடைந் தேனடி யேன்சென்மந் தீர்த்தருளே. (கூகூ)

தீரத் தரங்கப் பவநோய் துடைத்தென்னைத் தேவரொடுந்
தீரத் தரங்கப் பணிகாப்ப வைத்த செயலென்பதோர்
தீரத் தரங்க வபயமென் றூர்க்குந் திரைப்பொன்னிசூழ்
தீரத் தரங்கன் சிலம்பார்ந்த செய்ய திருவடியே. (க00)

---

பணவா ளரவி னரங்கேசர் தாளிற் பரிதிவளை
நிணவாளஞ் சார்ங்கங் கதைதோளிற் சாத்தின னீணிலமேற்
குணவாள ராம்பட்டர்க் கேழேழ் பிறப்புங் குடியடியான்
மணவாள தாசன் யமகவந் தாதி வனைந்தனனே. (க0க)

## திருவரங்கத்தந்தாதி

## முற்றிற்று.

அழகியமணவாளதாசர் திருவடிகளே சரணம்.

---

# ஸ்ரீரங்கநாயகர், ஸ்ரீரங்கநாயகியார்

## ஊசற்றிருநாமம்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்

திருவரங்கத்தூசற்றிருநாமம்

என்னும்

## பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

அருளிச்செய்த

# சீரங்கநாயகர் ஊசற்றிருநாமம்

## தனியன்

அண்டப்பங் தரிற்பற்றுக் கால்களாக
அறிவுவிட்டங் கரணஞ்சங் கிலிகளாகக்
கொண்டபிறப் பேபலகை வினையசைப்போர்
கொடுநரக சுவர்க்கப்பூ வெளிகடம்மிற்
நண்டலிலேற் றம்மிறக்கங் தங்கலாகத்
தடுமாறி யிடருழக்கு மூசன்மாறத்
தொண்டர்க்கா மணவாளர் பேரர்கூடித்
தொகுத்திட்டார் திருவரங்கத் தூசருனே.

---

## காப்பு

புதுவைநகர்ப் பட்டர்பிரான் சரண்கள்போற்றி
பொய்கைபூ தன்பேயார் பாதம்போற்றி
சதுமறைச்சொற் சடகோபன் சரணம்போற்றி
தமிழ்ப்பாணன் றொண்டரடிப் பொடிதாள்போற்றி
முதுபுகழ்சேர் மழிசையர்கோன் பதங்கள்போற்றி
முடிக்குலசே கரன்கலியன் கழல்கள்போற்றி
மதுரகவி யெதிராசன் கூரத்தாழ்வான்
வாழ்வான பட்டர்திரு வடிகள்போற்றி.

## நூல்

திருவாழத் திருவாழி சங்கம்வாழத்
    திருவனந்தன் கருடன்சேனையர்கோன்வாழ
அருண்மாறன் முதலாமாழ் வார்கள்வாழ
    அளவில்குணத் தெதிராச னடியார்வாழ
இருநாலு திருவெழுத்தி னேற்றம்வாழ
    எழுலகு நான்மறையு மினிதுவாழப்
பெருவாழ்வு தந்தருணம் பெருமான்!எங்கள்
    பெரியபெரு மாள்!அரங்கர்! ஆடிரூசல். (க)

உயரவிட்ட கற்பகப்பூம் பந்தர்நீழ
    லொண்பவளக் காணிறுவி யூடுபோட்ட
வயிரவிட்டத் தாடகச்சங் கிலிகளேற்றி
    மாகதத்தாற் பலகைதைத்த வூசன்மீதே
தயிரிவிட்ட மத்துழக்கும் வெண்ணெய்க்காடித்
    தடமறுகிற் குடமாடித் தழல்வாய்நாக
மயரவிட்டன் முடியனீ ராடிரூச
    லணியரங்க நம்பெருமாள்! ஆடிரூசல். (உ)

மீன்பூத்த விசும்பதுபோற் றாளங்கோத்து
        விரித்தநீ லப்பட்டு விதானந்தோன்ற
வான்பூத்த கலைமதிபோற் கவிகையோங்க
    மதிக்கதிர்போற் கவரியிரு மருங்கும்வீசக்
கான்பூத்த தனிச்செல்வன் சிலையுண்மின்னற்
    கருமுகில்போற் கணமணிவா சிகையிருப்பண்
டேன்பூத்த தாமரையாண் மார்பிலாடத்
    தென்னரங்க மணவாளர்! ஆடிரூசல். (ங)

பூசுரரும் புரவலரும் வானநாட்டுப்
    புத்தேளிர் குழுவுமவர் பூவைமாரும்

வாசவனு மலரயனு மழுவலானும்
    வணங்குவா னவசரம்பார்த் திணங்குகின்றார்
தூசுடைய கொடித்தடந்தேர் மானந்தோன்றச்
    சுடரிரண்டும் பகல்விளக்காத் தோன்றத்தோன்றுந்
தேசுடைய திருவரங்கர்! ஆடிரூசல்
    சீரங்க நாயகியோ டாடிரூசல். (௪)

மலைமகளு மானுமொரு வடந்தொட்டாட்ட
    வாசவனுஞ் சசியுமொரு வடந்தொட்டாட்டக்
கலைமகளு மயனுமொரு வடந்தொட்டாட்டக்
    கந்தனும்வள் ளியுங்கலந்தோர் வடந்தொட்டாட்ட
வலைமகளாப் பாற்கடலு ளவதரித்த
    அலர்மகளு நிலமகளு மாயர்காதற்
றலைமகளு மிருமருங்கி லாடவெங்க
    டண்ணரங்க மணவாளர்! ஆடிரூசல். (௫)

திருவழுதி வளநாடன் பொருநைச்சேர்ப்பன்
    சீபராங் குசமுனிவன் வகுளச்செல்வன்
றருவளருங் குருகையர்கோன் காரிமாறன்
    சடகோபன் றமிழ்வேதந் தநியர்படக்ா
கருணைபொழி முகமதியங் குறுவேர்வாடக்
    கரியகுழல் கத்தூரி நாமத்தாட
அருகிருக்குந் தேவியர்க ளதுகொண்டாட
    அணியரங்கத் தெம்பெருமான்! ஆடிரூசல். (௬)

வையமொரு பொற்றகட்டுத் தகளியாக
    வார்கடலே நெய்யாக வதனுட்டேக்கி
வெய்யகதிர் விளக்காகச் செஞ்சொன்மாலை
    மெல்லடிக்கே சூட்டினன் மேன்மைபாடத்

துய்யமதி மண்டலத்தின் மறுவேயொப்பச்
சோதிவிடு கத்தூரி துலங்குநாமச்
செய்யதிரு முகத்தரங்கர்! ஆடிரூசல்
சீரங்க நாயகியோ டாடிரூசல். (எ)

அன்பென்னு நன்பொருளோர் தகளியாக
ஆர்வமே நெய்யாக வதனுட்டேக்கி
யின்புருகு சிந்தையிடு திரியாஞானத்
திலகுவிளக் கேற்றினு னிசையைப்பாடப்
பொன்புரையும் புகழுறையூர் வல்லியாரும்
புதுவைநக ராண்டாளும் புடைசேர்ந்தாட
முன்பிலும்பின் பழகியநம் பெருமாடொல்லை
மூவுலகுக் கும்பெருமாள்! ஆடிரூசல். (அ)

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேனென்ற
திகழருக்க னணிநிறமுந் திகிரிசங்கு
மிருட்கொண்ட கருங்கங்கு லிடையேகோவ
லிடைகழியிற் கண்டபிரா னேற்றம்பாட
மருக்கொண்ட கொன்றையான் மலரின்மேலான்
வானவர்கோன் முதலானோர் மகுடகோடி
நெருக்குண்ட தாளரங்கர்! ஆடிரூசல்
நீளைக்கு மணவாள ராடிரூசல். (க)

நான்முகனை நாரணனே படைத்தானந்த
நான்முகனு நக்கபிரா னைப்படைத்தான்
யான்முகமா யந்தாதி யறிவித்தேனென்
றியார்க்கும்வெளி யிட்டபிரா னியல்பைப்பாடப்
பான்முகமார் வளைநேமி படைகள்காட்டப்
பாசடைக் டிருமேனிப் படிவங்காட்டத்

தேன்முகமா முளரியவ யவங்கள்காட்டச்
செழுந்தடம்போ லரங்கேசர்! ஆடிரூசல். (௧௦)

மருளிரிய மறமிரிய வனைத்துயிர்க்கு
மயலிரிய வினையிரிய மறையின்பாட
லிருளிரிய வென்றெடுத்துத் தொண்டர்தங்க
ளிடரிரிய வுரைத்தபிரா னிட்டம்பாட
அருளிரிய வறமிரிய வுலகையாண்ட
ஆடகத்தோ னகம்பரனென் றபிமானித்த
பொருளிரியச் சொல்லிரிய மார்வங்கீண்ட
பொன்னிசூழ் திருவரங்கர்! ஆடிரூசல். (௧௧)

அரனென்று மயனென்றும் புத்தனென்று
மலற்றுவார் முன்றிருநா ரணனேயாதி
பரனென்று மறையுரைத்துக் கிழியறுத்த
பட்டர்பிரான் பாடியபல் லாண்[illegible]ாடக்
கரனென்ற மாரீசன் கவந்தனென்ற
கண்டகரா ருயிர்மடியக் கண்டிலங்கா
புரம்வென்ற சிலையரங்கர்! ஆடிரூசல்
புகழுறையூர் வல்லியோ டாடிரூசல். (௧௨)

மருமாலைப் பசுந்துளவத் தொடைகளோடு
வைகறையில் வந்துதிருத் துயிலுணர்த்தித்
திருமாலை திருவடிக்கே சூட்டிநிற்குந்
திருமண்டங் குடிப்பெருமான் சீர்மைபாடப்
பெருமாலை யடைந்துலக மதிமயங்கப்
பேணாதார் படக்கதிரோன் காணாதேக
வொருமாலை பகலிலலைத் தொளித்தநேமி
யொளியுள்ளா ரரங்கேசர்! ஆடிரூசல். (௧௩)

காரங்கத் திருவுருவஞ் செய்யபாத
    கமலமுதன் முடியளவுங் கண்டுபோற்றச்
சாரங்க முனியையூர்ந் தமலனாதி
    தனையுரைத்த பாண்பெருமா டகைமைபாட
வாரங்கொள் பாற்கடல்விட் டயனாரேறி
    யயோத்திநக ரிழிந்துபொன்னி யாற்றிற்சேர்ந்த
சீரங்க மணவாளர்! ஆடிரூசல்
    சீரங்க நாயகியோ டாடிரூசல். (கச)

விழிபறித்து வெள்ளியைமா வலியைமண்ணும்
    விண்ணுலகும் பறித்தகுறள் வேடத்தும்மை
வழிபறித்து மந்திரங்கொண் டன்பர்தங்கள்
    வல்வினையைப் பறித்தபிரான் வண்மைபாடச்
சுழிபறித்த கங்கைமுடி யடியிற்றோயத்
    தொழுதிரக்த முக்கணனான் முகனைச்செய்த
பழிபறித்துப் பலியொழித்தார்! ஆடிரூசல்
    பள்ளிகொண்ட திருவரங்க ராடிரூசல். (கரு)

போதனார் நெட்டெழுத்து நமனாரிட்ட
    குற்றெழுத்தும் புனலெழுத்தாய்ப் போகமாறன்
வேதமா யிரந்தமிழு மெழுதியங்நாண்
    மேன்மைபெறு மதுரகவி வியப்பைப்பாட
வோதமார் மீன்வடிவா யாமையேனத்
    தருவாகி யரிகுறண்மூ விராமராகிக்
கோதிலாக் கண்ணனாய்க் கற்கியாகுங்
    கோயில்வா ழரங்கேசர்! ஆடிரூசல். (கசு)

ஆரமுதி னின்பமிகு சடகோபன்சொல்
    லாயிரமுந் தெரிந்தெடுத்தே யடியார்க்கோதி

நாரதனு மனமுருக விசைகள்பாடு
நாதமுனி திருநாம நலங்கள்பாடப்
பாரதனிற் பாரதப்போர் முடியமூட்டிப்
பகைவேந்தர் குலந்தொலையப் பார்த்தன்றெய்வத்
தேரதனில் வருமரங்கர்! ஆடிரூசல்
சீரங்க நாயகியோ டாடிரூசல். (கஎ)

வம்பமருஞ் சிகைமுந்நூ றரித்தஞானி
வாதியரை வெல்லாள வந்தார்க்கன்பா
மெம்பெருமா னார்க்கெட்டு மிரண்டும்பேசி
யிதமுரைத்த பெரியநம்பி யிரக்கம்பாடத்
தும்புருநா ரதர்நாத கீதம்பாடத்
தொண்டர்குழா மியல்பாடச் சுருதிபாட
நம்பெருமாள்! திருவரங்கர்! ஆடிரூசல்
நான்முகனார் தாதையா ராடிரூசல். (கஅ)

ஐங்கோலு மொருகோலு நீர்க்கோலம்போ
லழியமுனிந் தறுசமய மகற்றியெங்கள்
செங்கோலே யுலகனைத்துஞ் செல்லமுக்கோ
றிருக்கையிற்கொ ளெதிராசன் செயத்தைப்பாடச்
சங்கோல மிடும்பொன்னித் துறையினின்றே
தவழ்ந்தேறி மறுகுதொறுந் தாளமீனு
நங்கோயி னம்பெருமாள்! ஆடிரூசல்
நக்கன்மூ தாதையா ராடிரூசல். (ககூ)

அவத்தப்புன் சமயச்சொற் பொய்யைமெய்யென்
றணிமிடறு புழுத்தான்றன் னவையின்மேவிச்
சிவத்துக்கு மேற்பதக்குண் டென்றுதீட்டுந்
திருக்கூர வேதியர்கோன் செவ்விபாடப்

பவத்துக்கம் பிணிநீங்க நரகத்தூரப்
பரமபதங் குடிமலியப் பள்ளிகொள்ளு
நவத்துப்புச் செங்கனிவாய்க் கரியமேனி
நம்பெருமாள்! அரங்கேசர்! ஆடிரூசல். (௨௦)

சுந்தரம் பொழிற்பூதூர் முக்கோற்செல்வன்
றன்மருக னாகியிரு தாளுமான
கந்தாடைக் குலதீபன் முதலியாண்டான்
கடன்ஞாலந் திருத்தியருள் கருணைபாடக்
கொந்தாருந் துளவாடச் சிறைவண்டாடக்
குழலாட விழியாடக் குழைக்காதாட
நந்தாடக் கதையாடத் திகிரியாட
நன்மாடத் திருவரங்கர்! ஆடிரூசல். (௨௧)

திருக்கலிய னனுக்கர்திருப் பணிசெய்யன்பர்
சீரங்க நான்மறையோ ருள்ளூர்ச்செல்வர்
தருக்குமிசைப் பிரான்மார்பா ரளந்தார்பாதந்
தாங்குவோர் திருக்கரகந் தரித்துநிற்போ
ரிருக்குமுதல் விண்ணப்பஞ் செய்வோர்வீரர்க்
கிறையவர்கள் சீபுண்ட ரீகர்மற்றும்
பெருக்கமுள்ள பரிகரங்க டொழுதாட்செய்யப்
பிரமமாந் திருவரங்கர்! ஆடிரூசல். (௨௨)

உடுத்திரளோ? வானவர்கள் சொரிந்தபூவோ?
உதித்தெழுந்த கலைமதியோ? உம்பர்மாத
ரெடுத்திடுகர்ப் பூரவா ரார்த்திதானோ?
யாக்தெளியோ மின்றநீ டிருக்கண்சாத்திப்
படுத்ததிருப் பாற்கடலு ணின்றபோந்து
பாமாலை பூமாலை பாடிச்சூடிக்

கொடுத்ததிருக் கோதையுட னாடிரூசல்
கோயின்மண வாளரே! ஆடிரூசல். (௨௩)

வென்றிவேற் கருநெடுங்கண் ணசோதைமுன்னம்
வேர்வாட விளையாடும் வெண்ணெயாட்டும்
குன்றுபோ னாற்றடங்தோள் வீசியாடுங்
குரவைதனைப் பிணைந்தாடுங் கோளரூட்டு
மன்றினூ டெகந்தாடு மரக்காலாட்டும்
வலியரவிற் பாய்ந்தாடும் வடிவிலாட்டு
மன்றுகா னாவிழுந்த வடியோங்காண
அணியரங்க ராசரே! ஆடிரூசல். (௨௪)

ஆரணங்க ளொருநான்கு மன்பர்நெஞ்சு
மணிசிலம்பு மடிவிடா தூசலாட
வாரணங்கு முலைமடவார் கண்ணும்வண்டும்
வண்டுளவும் புயம்விடா தூசலாடக்
காரணங்க ளாயண்ட ரண்டமெல்லாங்
கமலநா பியிற்படைத்துக் காத்தழிக்குஞ்
சீரணங்கு மணவாளர்! ஆடிரூசல்
சீரங்க நாயகனார்! ஆடிரூசல். (௨௫)

அடித்தலத்திற் பரிபுரமுஞ் சிலம்புமாட
அணிமார்பிற் கௌத்துவமுந் திருவுமாடத்
தொடித்தலத்தின் மணிவடமுந் துளவுமாடத்
துணைக்கரத்திற் சக்கரமுஞ் சங்குமாட
முடித்தலத்திற் கருங்குழலுஞ் சுரும்புமாட
முகமதியிற் குறுவேர்வுங் குழையுமாடக்
கடித்தலத்தி லரைநாணுங் கலையுமாடக்
காவிரிசூ ழரங்கேசர்! ஆடிரூசல். (௨௬)

பார்த்தலைக்கும் பாற்கடலுட் பசுஞ்சூற்கொண்டல்
படிந்ததெனக் கிடந்தபடி படிமேற்காட்டி
வார்த்தழைக்க விரண்டாற்றி னடுவேதோன்றி
மண்ணுலகை வாழவைத்த வளத்தைப்பாடப்
புரந்தரற்கும் பெருமானே! ஆடிரூசல்
போதனுக்கும் பெருமானே! ஆடிரூசல்
அரன்றனக்கும் பெருமானே! ஆடிரூசல்
அணியரங்கப் பெருமானே! ஆடிரூசல். (உஎ)

உடுமோதக் கதிருதிரச் சண்டவாயு
வலகலைப்ப வடவைசுட வுததியேழுங்
கெடுமோது திரிதருகா லுயிர்களெல்லாங்
கெடாதுவயிற் றள்ளிருத்துஞ் சீர்த்திபாட
நெடுமாயப் பிறவியெல்லாம் பிறந்திறந்து
நிலத்தோடும் விசும்போடு நிரயத்தோடுந்
தடுமாறித் திரிவேனை யருள்செய் தாண்ட
தண்ணரங்க நாயகனார்! ஆடிரூசல். (உஅ)

முருகனுறை குறிஞ்சித்தேன் முல்லைபாய
முல்லைநிலத் தயிர்பாலெய் மருதத்தோட
மருதநிலக் கொழும்பாகு நெய்தற்றேங்க
வருபுனற்கா விரிசூழ்ந்த வளத்தைப்பாடக்
கருமணியே! மரகதமே! முத்தே! பொன்னே!
கண்மணியே! ஆருயிரே! கனியே! தேனே!
அருள்புரிவா யென்றவர்தம் மகத்துள்வைகு
மணியரங்க மாளிகையார்! ஆடிரூசல். (உகூ)

புண்டரிகத் தவன்றவஞ்செய் திறைஞ்சக்கோயில்
புரிசடையோன் புராணஞ்செய் தேத்துங்கோயில்
பண்டிரவி குலத்தரசர் பணிந்தகோயில்
பரிந்திலங்கைக் கோன்கொணர்ந்து பதித்தகோயில்
மண்டபமுங் கோபுரமு மதிலுஞ்செம்பொன்
மாளிகையுந் தண்டலையு மலிந்தகோயி

லண்டர்தொழுந் திருவரங்கம் பெரியகோயி
லமர்ந்துறையும் பெருமானார்! ஆடிரூசல். (௩௦)

அருவரங்க டருபராங் குசனேயாதி
யாழ்வார்க டம்பிரா னாடிரூசல்
இருவரங்க வொளிக்ககலா விருளகற்று
மெதிராசன் றம்பிரா னாடிரூசல்
தருவரங்க ணீள்பொழிற்கூ ரத்துவேதா
சாரியனார் தம்பிரா னாடிரூசல்
திருவரங்கத் தணியரங்கத் திருமுற்றத்துத்
தெய்வங்க டம்பிரான்! ஆடிரூசல். (௩௧)

உணராத மதலையிளங் குதலைச்சொல்லை
யுளமுருகித் தந்தைதா யுவக்குமாபோற்
றணவாமற் கற்பிப்பார் தஞ்சொற்கேட்டுத்
தத்தையுரைத் தத்தையா தரிக்குமாபோற்
பணவாள ராமுடிமேற் படியேழ்போற்றும்
பட்டர்திருத் தாட்கடிமைப் பட்டகாதன்
மணவாள தாசன்றன் புன்சொற்கொண்ட
மதிலரங்க மணவாளர்! ஆடிரூசல். (௩௨)

போதாரு நான்முகனே முதலாயுள்ள
புத்தேளிர் தொழுநாதன் புவனிக்கெல்லா
மாதார மாந்தெய்வ மானநாத
னனைத்துயிர்க்கு நாதனணி யரங்கநாதன்
சீதார விந்தமலர்த் திருவினாதன்
றிருவூசற் றிருநாம மொருநாலெட்டும்
வேதாசா ரியபட்டர்க் கடிமையான
வெண்மணிப்பிள் ளைப்பெருமாள் விளம்பினானே. (௩௩)

சீரங்கநாயகர் ஊசல் முற்றிற்று.

ஸ்ரீ

பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

திருப்பேரர் ஆகிய

கோனேரியப்பனையங்கார்

அருளிச்செய்த

# சீரங்கநாயகியார் ஊசற்றிருநாமம்

## காப்பு

பூருகூரு மகிழ்மாலை யணியுமார்பன்
மூத்தமிழன் கவித்தலைவன் முனிவர்வேந்தன்
திருகூரு மனத்திருணீக் குதயபானு
சீபராங் குசயோகி திருநாவீறன்
அருகூருந் தண்பொருனை வழுதிநாட
னஃகமலம் பாடினா னன்னமேறி
குருகூரன் சடகோபன் காரிமாறன்
கோகனக மலரடியின் குணங்கள்போற்றி.

---

## நூல்

நீராழி நிறத்தரங்க ரடிகள்வாழ
நெடுமகுடப் பணிவாழக் கருடன்வாழப்
பேராழி செலுத்தியசே னையர்கோன்வாழப்
பேய்பூதன் பொய்கைமுதற் பதின்மர்வாழ
ஓராழிக் கதிர்வாழத் திங்கள்வாழ
வும்மடியார் மிகவாழ வுலகம்வாழச்
சீராழி சங்குகதை சிலைவாள்வாழச்
சீரங்க நாயகியார்! ஆடிரூசல், (க)

துங்கமலர்ப் பந்தரின்கீழ்ப் பதுமராகத்
    தூணிறுத்தி வயிரவிட்டந் தொகுத்துமீதிற்
றங்கநெடுஞ் சங்கிலிவிட் டதின்மாணிக்கத்
    தவிசுபுனைந் தலங்கரித்த வூசன்மீதின்
மங்கலநாண் டிருவாவார்! ஆடிரூசல்
    மதிலரங்கர் தமக்கினியார்! ஆடிரூசல்
செங்கமல மாளிகையார்! ஆடிரூசல்
    சீரங்க நாயகியார்! ஆடிரூசல். (௨)

கடிமலரு மதுகரமுங் குழலிலாடக்
    கத்தூரி யுடன்வேர்வு முகத்திலாட
நெடுவிழியு மணித்தோடுங் * செவியிலாட
    நேர்வளையுஞ் சூடகமுங் கரத்திலாட
வடமணியுங் கண்டிகையுந் தனத்திலாட
    மாகலையு மேகலையு மருங்கிலாடத்
திடமறையும் பரிபுரமும் பதத்திலாடச்
    சீரங்க நாயகியார்! ஆடிரூசல். (௩)

கலைமடந்தை வணங்கியொரு வடந்தொட்டாட்டக்
    கற்புடைய வள்ளியொரு வடந்தொட்டாட்ட
மலைமடந்தை பரிவிலொரு வடந்தொட்டாட்ட
    வானவர்கோன் மடந்தையொரு வடந்தொட்டாட்ட
அலர்மடந்தை நிலமடந்தை யுலகம்வாழ
    அருண்மடந்தை பொருண்மடந்தை யழகார்வெற்றிச்
சிலைமடந்தை திருமடந்தை யாடிரூசல்
    சீரங்க நாயகியார்! ஆடிரூசல். (௪)

* 'குழையிலாட' என்னும் பாடம்.

காரணைய திருவரங்க மணவாளர்க்குக்
கண்களிப்ப மனமுருக வறிவுசோர
மூரலெழப் புளகமுறப் புயம்பூரிப்ப
முகமலர மெய்குழைய மோகமேற
ஆரமுதே! பசுங்கிளியே! முத்தே! பொன்னே!
அன்னமே! என்னம்மே! அழகின்பேறே!
சீரியசிற் றிடையணங்கே! ஆடிரூசல்
சீரங்க நாயகியார்! ஆடிரூசல். (௫)

வீறுபொய்கை பூதத்தா ரிருபான்ஞான
விளக்கேந்த மயிலையர்கோன் வியந்துகாண
மாறன்மறைத் தமிழ்மதுர கவிநின்றேத்த
வாழ்குலசே கரன்பாணன் கலியன்போற்ற
ஆறுசம யத்திருந்தோ னருகில்வாழ்த்த
அணிபுதுவை வேதியன்பல் லாண்டுபாடத்
தேறுதொண்ட ர[illegible]ப்பொடிதா ரடியிற்சூட்டச்
சீரங்க நாயகியார்! ஆடிரூசல். (௬)

நாதமுனி தவமாக மாறன்பாட
னயந்தெழுத வேதனெழுத் தழிந்தவாறும்
போதனெதி ராசன்வளை யாழிமண்ணோர்
புயத்தெழுதக் கூற்றினெழுத் தழிந்தவாறும்
ஏதமில்கூ ரத்தாழ்வான் பதக்குன்றென்றே
யெழுதிடவா தியர்களெழுத் தழிந்தவாறும்
தீதில்குணத் தடியார்க டிரண்டுவாழ்த்தச்
சீரங்க நாயகியார்! ஆடிரூசல். (௭)

திருக்குடனே யுமதுதிரு வுளத்துக்கேற்கத்
தங்கடங்கள் பணிவிடைக டலைமேற்கொண்டு

வருக்கமுடன் பத்துவகைக் கொத்துளோரு
மற்றுமுள்ள பரிகாரமும் வந்துசூழ
அருக்கனென முடிவிளங்க வழகுவீற
அண்டர்கள்பூ மழைபொழிய வடியார்போற்றச்
செருக்கிவினை யாடியுகந் தாடிரூசல்
சீரங்க நாயகியார்! ஆடிரூசல். (௮)

மின்றுவு கொடிமதில்சூழ் கூரவேர்தன்
வேதாசா ரியனன்னை யாடிரூசல்
பின்றுத பரசமயக் குறும்பறுக்கும்
பெரியநம்பி யுளத்துறைவார்! ஆடிரூசல்
கந்தாடைக் குலத்தில்வரு மழகோன்வாழக்
கருணைவிழிக் கடையருள்வார்! ஆடிரூசல்
செந்தாரும் பசுந்தாரும் புடையுலாவச்
சீரங்க நாயகியார்! ஆடிரூசல். (௯)

ஆரணஞ்சேர் வில்லிபுத்தூ ருறையூர்வாழ
அவதரித்த நாயகியார்! ஆடிரூசல்
பேரணிபூ ணழகுடையார் தாமேயென்னும்
பெண்டுகெடர் நாயகியார்! ஆடிரூசல்
காரணர்பூ ரணர்பெரிய பெருமாளெங்க
ணம்பெருமா ணாயகியார்! ஆடிரூசல்
தோரணியு நெடுவீதி புடைசூழ்கோயிற்
சீரங்க நாயகியார்! ஆடிரூசல். (௧௦)

கோலமந்தா நிலமுலவ வதனுலாடுங்
கோகனகத் திருந்தாடு மன்னம்போல்
மாலரங்கர் திருமேனி வண்மையாலு
மழைமுகில்கண் டுகந்தாடு மயிலும்போல்

வேலைகடைந் திடவ தனி லெழுந்தபோது
வெண்டிரைமே லசைந்தாடும் வீறுபோலச்
சீலமுடன் மாணிக்கத் தவிசிலேறிச்
சீரங்க நாயகியா ராடிரூசல். (௧௧)

குடமாடிச் சீராடி வெண்ணெய்க்காடிக்
குரவைதனைப் பிணைத்தாடிக் கோளராவின்
படமாடி விளையாடு மங்காளந்தப்
பரமனுரத் திருந்தாடும் படியேபோல
வடமாடக் குழையாட விடைதள்ளாட
வளையாட விளையாடி மாலையாடத்
திடமாடக் கொடியாடத் திகழுங்கோயிற்
சீரங்க நாயகியா ராடிரூசல். (௧௨)

கோந்தாருங் குழலசைய வாடிரூசல்
குல்மகரக் குழையசைய வாடிரூசல்
நந்தாருங் காமனசைய வாடிரூசல்
நல்கியநூ லிடையசைய வாடிரூசல்
சந்தாருந் தனமசைய வாடிரூசல்
தாளமணி வடமசைய வாடிரூசல்
செந்தாளிற் சிலம்பசைய வாடிரூசல்
சீரங்க நாயகியா ராடிரூசல். (௧௩)

கரியகுழ லசையுமென வரிவண்டார்ப்பக்
கழையணிதோ ளதிருமெனத் தொடிகளார்ப்ப
மருமலர்க்கை யலங்குமென வளைகளார்ப்ப
வடிவமெலாம் வருந்துமென மறைகளார்ப்ப
இருமுலைகள் குலுங்குமென வடங்களார்ப்ப
விடையொசிந்தே யிறுமெனமே கலைகளார்ப்பத்

திருவடிகள் சிவக்குமெனச் சிலம்புமார்ப்பச்
சீரங்க நாயகியா ராடிரூசல். (௧௪)

மேவியபங் கயன்றவஞ்செய் திறைஞ்சுங்கோயில்
வேணியரன் புராணநூல் விளம்புங்கோயில்
தாவுதிரைக் காவேரி புடைசூழ்கோயில்
சந்திரவா வியின்மருங்கு தழைத்தகோயில்
பாவளர்சத் தாவரண முடையகோயில்
பணியணிசே ரோங்கார மானகோயில்
தேவர்தொழுந் திருவரங்கம் பெரியகோயில்
சீரங்க நாயகியா ராடிரூசல். (௧௫)

தாரங்கத் திருவரங்கர்க் கூசல்பாடிச்
சாத்தினன் பேரனெனுந் தன்மையாலும்
ஆருங்கண் டேதெளியு மவன்சொல்பாட்டி
னதிசயத்தை யறிவனென்னு மாசையாலும்
பாரெங்கும் புகழ்வேத வியாசபட்டர்
பதம்பணிகோ னேரியப்பன் புன்சொல்லாகச்
சீரங்க நாயகியார்க் கொருபத்தைந்து
திருவூசற் றிருநாமஞ் செய்திட்டானே. (௧௬)

## சீரங்கநாயகியார் ஊசல்

முற்றிற்று.

# அழகரந்தாதி

ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்

திருமாலிருஞ்சோலைமலை

# அழகரந்தாதி

## சிறப்புப்பாயிரம்

### கட்டளைக்கலித்துறை

திருகவி மங்கை மணவாள வள்ளல்செங் தேன்றளித்து
முருகவிழ் தென்றிரு மாலிருஞ் சோலை மலைமுகுந்தற்
கிருகவின் ருள்களிற் சூடுமந் தாதியி னீரைம்பதில்
ஒருகவி கற்கினு ஞானமும் வீடு முதவிடுமே.

## காப்பு

அங்கத் தமிழ்மறை யாயிரம் பாடி•யளித்துலகோர்
தங்கட்கு வீடரு ளும்புரு டோத்தமன் றண்வகுளத்
தொங்கற் பராங்குசன் ருளிணை மாலிருஞ் சோலைமலைச்
சங்கத் தழகரந் தாதிந டாத்தத் தலைக்கொள்வனே.

## நூல்

நீராழி வண்ணனைப் பாலாழி நாதனை நின்மலனைச்
சீராழி யங்கைத் திருமகள் கேள்வனைத் தெய்வப்புள்ளூர்
கூராழி மாயனை மாலலங் காரனைக் கொற்றவெய்யோன்
ஓராழித் தேர்மறைத் தானையெஞ் ஞான்று முனைநெஞ்சமே! (க)

உரைமாற்ற முண்டென் பொறியைந்து முன்னிடத் தன்றியுண்ணும்
இரைமாற்ற வேண்டு மிதுவேயென் விண்ணப்ப மென்னப்பனே!
உரைமாற் றளவற்ற பொன்னுடுத் தாய்! வில் லெடுத்திலங்கை
வரைமாற் றலரைச்செற் றாய்! அழ கா! கரு மாணிக்கமே! (௨)

மாணிக் கனகம் புரைமேனி மாலுக்கு வார்சடையோன்
பாணிக் கனகம் பலியொழித் தானுக் குப் பச்சைத்துழாய்
ஆணிக் கனக முடியலங் காரனுக் கண்டமெல்லாம்
பேணிக் கனகனுக் குப்பித்த ரானவர் பித்தான்றே. (௩)

பித்தரும் பாநின்ற நெஞ்சனை வஞ்சனைப் பேருலகோர்
கைத்தரும் பாவி யெனுங்கடை யேனைக் கடைக்கணியாய்!
முத்தரும் பாருந் தொழுமழ கா! வண்டு மூசுந்துழாய்ப்
புத்தரும் பார்முடி யாய்! அடி யாரைப் புரப்பவனே! (௪)

புரந்தர னுமெனப் பூபதி யாகிப் புகர்முகமா
துரந்தர சாளிலென்? நல்குர வாகிலென்? தொல்புவிக்கு
வரந்தர மாலிருஞ் சோலைநின் றார்க்கென் மனத்தினுள்ளே
நிரந்தர மாயலங் காரர்க்கிங் காட்பட்டு நின்றபின்னே. (௫)

நின்றபி ராணன் கழலுமுன் னேநெஞ்ச மே! நினையாய்
சென்றபி ராயம்வம் பேசென்ற தாற்றிரு மங்கைகொங்கை
துன்றபி ராமனைச் சுந்தரத் தோளனைத் தோளின்மல்லைக்
கொன்றபி ரானை யடைந்தடி யாரொடுங் கூடுகைக்கே. (௬)

கூடுகைக் குஞ்சர மத்தடி யேற்குக் கொடியவஞ்சம்
சாடுகைக் குஞ்சர ணந்தர வேண்டுநின் தடத்தழுந்தி
வாடுகைக் குஞ்சரங் காத்தீர்! விண் வாழ்கைக்கும் வாளரக்கர்
வீடுகைக் குஞ்சரந் சோத்தீர்! விடைவெற்பின் வித்தகரே! (௭)

[பாங்கி வெறிவிலக்கிச் செவிலியர்க்கு அறத்தொடுநிற்றல்]

வித்தக ரும்பர்க் கரசா னவனும் விதியுங்கங்கை
மத்தக ரும்பர வும்மலங் காரர் மறைகொண்டகார்
ஒத்தக ருப்பரஞ் சோதியர் நாம முரைத்தன்னைமீர்!
இத்தக ரும்பர தெய்வமுங் கூத்தும்விட் டேத்துமினே! (அ)

ஏத்தும்! இன் பத்தியி னுலெட் டெழுத்து மிணையடிக்கே
சாத்துமின்! பத்திரத் தண்ணந் துழாய்மதி தாங்கிக்கஞ்சம்
பூத்துமின் பத்திசெய் யும்பச்சை மாமுகில் போலழகர்
காத்துமின் பத்தி விருத்தியும் வைப்பர் கருணைசெய்தே. (௯)

செய்தவ ராக வருந்தியுந் தீர்த்தத் துறைபடிந்தும்
கைதவ ராகமங் கற்றுமென் னும்? கடற் பார்மருப்பிற்
பெய்தவ ராகனை மாலலங் காரனைப் பேரிலங்கை
எய்தவ! ராகவ! என்றேத்த நீங்கு மிருவினையே. (௧௦)

[தலைவியின் ஆற்றாமையைத் தோழி தலைவனுக்குக் கூறல்]

வினைக்கு மருந்தரிக் கும்பிணி மூப்புக்கும் வீகின்றவே
தனைக்கு மருந்தன்ன தாளழ கா!செய்ய தாமரையங்
கனைக்கு மருந்தமு தே!அரு ளாய்நின்னைக் காதலித்து
நினைக்கு மருந்ததி தன்னுயிர் வாழ்க்கை நிலைபெறவே. (௧௧)

நிலையாமை யான வுடலு முயிரு நினைவுந்தம்மிற்
கலையாமை யானங் கலக்குமுன் னேகங்கை வைத்தசடைத்
தலையாமை யானனன் றுமறை யான்றெழுந் தாளழகன்
அலையாமை யானவன் மாலிருஞ் சோலை யடைநெஞ்சமே! (௧௨)

நெஞ்ச முருக்கு முயிருருக் குந்தொல்லை நீள்வினையின்
வஞ்ச முருக்கும் பவமுருக் கும்வண்டு மூாயழகர்
கஞ்ச முருக்கு மலர்வாய்த் திருநண்பர் கஞ்சனுக்கு
நஞ்ச முருக்கு வளையாழி யன்னவர் நாமங்களே. (௧௩)

நாமங்க ளாவி நழுவுந் தனையு நவின்றவரைத்
தாமங்க ளாவி மனத்துள்வைப் பார்தண் டலையினகில்
தூமங்க ளாவி மணநாறு மாலிருஞ் சோலையன்பர்
சேமங்க ளாவின் கனியனை யார்பதஞ் சேருவரே. (கச)

சோராத காத நரகேழ் தலைமுறை சேர்ந்தவர்க்கும்
வாராத காதம் வசைபிணி பாவ மறிகடன்முன்
தூராத காதங்க ணேர்த்தானை மாலிருஞ் சோலையிற்போய்
ஆராத காத லுடன்பணி வீர்!என் னழகனையே. (கடு)

[பாங்கிவிடுதூது]

அழக்கன் றியகருங் கண்ணிக்குக் கண்ணி யளித்திலரேல்
வழக்கன்றி முன்கொண்ட வால்வளை கேளு மறுத்ததுண்டேல
குழக்கன்றின் பின்குழ லூதலங் காரர்க்குக் கோதைநல்லீர்!
சழக்கன்றில் வாய்ப்பளர் தாலுய்ய லாமென்று சாற்றுமினே! (கசு)

[தலைமகளது மடலூர்தற்றுணிவைத் தோழி
செவிலிக்கு உணர்த்தல்]

சாற்றுக் கரும்பனைக் கூற்றென்னு மாசைத் தமிழ்மலயக்
காற்றுக் கரும்பனை யுங்கண் படாளலங் காரற்கண்டர்
எற்றுக் கரும்பனை யக்கொங்கை யாள்கொண்ட வின்னலுக்கு
மாற்றுக் கரும்பனை யல்லாது வேறு மருந்தில்லையே. (கஎ)

மருந்துவர் தார்தொழு மாலிருஞ் சோலை மலையழகர்
அருந்துவர் தாரணி யென்றபின் றூரட லாயிரவாய்
பொருந்துவர் தார்பணிப் பாயார் விதுரன் புதுமனையில்
விருந்துவர் தாரடி யார்க்கில்லை நோயும் வெறுமையுமே. (கஅ)

[தலைமக ளிளமைக்குச் செவிலி இரங்கல்]

வெறுத்தவ ரைக்கஞ்ச னைச்செற்று ளார்விடை வெற்பர்வெங்கண்
சுறுத்தவ ளைக்கஞ்ச லென்றவந் தார்சன காம்பரத்தைப்
பொறுத்தவ ரைக்கஞ் சனமேனிக் காவி புலர்ந்துருகிச்
சிறுத்தவ ளைக்கஞ்சங் கூப்புமென் பேதைக்கென் செப்புவதே. (௧௯)

செப்போ? தனஞ்செழுந் துப்போ? செவ் வாயென்று சேயிழையார்க்
கொப்போ தனஞ்சுரு கித்திரி வீர்! கன லூதைமண்விண்
அப்போ தனமென் றமுதுசெய் தாரலங் காரர்பொற்றாள்
எப்போது! அனந்த றவிர்ந்தேத்த நீங்க ளிருக்கின்றதே. (௨௦)

இருக்கந் தரத்தனை வோர்களு மோதி யிடபகிரி
நெருக்கந் தரத்தனை யேத்தநின் றானை நிறத்ததுப்பின்
உருக்கந் தரத்தனைத் துன்பொழித் தானை யுலகமுண்ட
திருக்கந் தரத்தனை யல்லாதெண் ணேனொருதெய்வத்தையே. (௨௧)

தெய்வம் பலவவர் நூலும் பலவவை தேர்பொழுதிற்
பொய்வம் பலவென்று தோன்றும்புல் லோர்கட்குப் போதநல்லோர்
உய்வம் பலனு மவனேயென் றோதி யுணர்வர்நெஞ்சே!
கொய்வம் பலர்சொரி யுஞ்சோலை மாமலைக் கொண்டலையே. (௨௨)

கொண்டலை யாநிற்கு மைம்புலக் கோண்மக ரங்களினீர்ப்
புண்டலை யார்பிற விக்கடன் மூழ்குவ ருத்தமனைத்
தண்டலை யார்திரு மாலிருஞ் சோலைத் தனிச்சுடரைப்
புண்டலை யால்வணங் காரணங் கார்வினை போகவென்றே. (௨௩)

என்று தரங்கலந் தேனற்றை நான்றுதொட் டிற்றைவரை
நின்று தரங்கிக்கின் றேற்கருள் வாய்நெடுங் கான்கடந்து
சென்று தரங்கக் கடறூர்த் திலங்கையிற் றீயவரைக்
கொன்றுத ரங்குவித் தாய்!சோலை மாமலைக் கோவலனே! (௨௪)

கோவலன் பார்ப்புடன் கேகயஞ் சூழ்குளிர் சோலைமலைக்
காவலன் பாற்கடற் கண்டுயின் மாலலங் காரனென்றே
பாவலன் பாற்பணி வாரணி வானவ ராகிமறை
நாவலன் பார்ப்பதி நாதனண் ணாப்பத நண்ணுவரே. (உரு)

நண்ணின னாக முடிமே னடித்தென்னை நாசமறப்
பண்ணின னாகமும் பாரு மளந்தன பண்டுதம்பி
மண்ணின னாக வனம்போ யினவளர் சோலைமலைக்
கண்ணின னாகங் கரியான் சிவந்த கழலிணையே. (உசு)

[தலைவனைப் பிரிந்த தலைவி இரங்கல்]

கழலப் புகுந்த வளையறி யாரென் கருத்தறியார்
அழலப் புகன்றொறுப் பாரன்னை மாரறு காற்சுரும்பு
சுழலப் புனைந்த துழாய்மார்பர் மாலிருஞ் சோலையென்னார்
தழலப் புவரென் றனங்களி லேசந் தனங்களென்றே. (உஎ)

தனத்துக் கராவிய வேல்விழிக் கேக்கற்றுத் தையலரால்
தினத்துக்க ராகித் திரிவார் பலர்சிலர் செங்கமல
வனத்துக்க ராசலங் காத்தாற்குச் சோலை மலையினின்ற
கனத்துக்க ராவணை யாற்கெம்பி ராற்குள்ளங் காதலரே. (உஅ)

காதலைப் பத்தினி மேல்வைத்த நீசக் கருநிருதன்
மாதலைப் பத்தியை மண்ணிலிட் டாய்!நின்னை வாழ்த்தித்தொண்டர்க்
கீதலைப் பத்தியைச் செய்வோர்கள் வாழு மிடபவெற்பா!
தீதலைப் பத்தியங் கித்திரி வேற்கருள் செய்தருளே. (உகூ)

அருடரு மங்கை விடாதேத்து மன்பருக் கன்பரெல்லில்
இருடரு மங்கை யெறியாழி யாரிசைக் கிந்நரரும்
கெருடரு மங்கைய ரும்வா ழிடப கிரியிற்கல்லா
முருடரு மங்கைய லெய்திலன் றேயவர் முத்தரன்றே. (௩0)

முத்தரன் றேநின் கழலொரு காற்றை முகிழ்க்கப்பெற்றோர்
பித்தரன் றேநினக் கேபித்த ராகிற் பிரமன்கங்கை
வைத்தரன் றேய்துயர் தீர்த்தாய்!நின் சோலை மலைமருவும்
பத்தரன் றேபரி வாலென்னை யாளும் பரமர்களே. (௩௧)

பரந்தா மரைத்திரு மாலிருஞ் சோலைப் பரமரைக்கால்
கரந்தா மரையன்ன கார்நிறத் தாரைக் கடல்கடக்கும்
சரந்தா மரைதிரி கான்போ யிலங்கைத் தலைவன்பத்துச்
சிரந்தா மரைக்கணத் தெய்தாரை யெய்தற்குத் தேர்மனமே. (௩௨)

தேரா யிரவு பகலிரை தேடுவை தீமைநன்மை
பாரா யிரங்குவை பாவைய ராற்பண்டு மாவலிபால்
சோரா யிரந்தவ னைத்திரு மாலிருஞ் சோலைநின்ற
பேரா யிரமுடை யானைநெஞ் சே!என்று பேணுவையே? (௩௩)

[தலைவி தனது வேட்கை மிகுதியைக் கூறுதல்]

பேணிக் கவித்தவ ரைக்குடை யாய்!பெரி யோர்பதின்மர்
ஆணிக் கவித்தமிழ் மாலைகொண் டாயழ கா!கரிய
மாணிக்க வித்தக மாமலை யே!வண் டுளவுக்கல்லால்
பாணிக் கவித்தடங் காதுவெங் காமப் படர்கனலே. (௩௪)

[பிரிவாற்றாத தலைவி சந்திரனை நோக்கி
இரங்கிக் கூறுதல்]

படராகு வால்குவி யக்குழ லூதிய பாலரையம்
அடராகு வாகனன் றூதைக்கிட் டாரலங் காரர்துழாய்க்
கிடராகு வார்பலர் காண்?தமி யேனை யெரிப்பதென்?நீ
விடராகு வாய்க்கொண் டேல்சுட்டுக் கான்றிட்ட வெண்டிங்களே! ()

[நிலவினால் வருந்துந் தலைவியின் தளர்ச்சியைக் கண்ட பாங்கி இரங்கல்]

திங்களைப் பாநின்ற செந்தீக் கொழுந்திற் செழுஞ்சங்குபோ
லுங்களைப் பாவை யுருகுவ தோர்கில ரும்பரெல்லாம்
எங்களைப் பா! எமைக் காவாய்! எனவுல கீரடியால்
அங்களைப் பான்வளர்ந் தார்சோலை மாமலை யாதிபரே. (௬௬)

ஆதிய ராவிற் றுயிலலங் கார ரழகரன்பாம்
வேதிய ராவுதி வீற்றிருப் பாரண்ட மீதிருக் தும்
சோதிய ராவின்பின் போந்தாரை யன்றித் தொழேனுடலைக்
காதிய ராவினும் பொன்மா மருடங் கவிக்கினுமே. (௬௭)

கவித்தானை மன்னற்கு நட்பாய் முடிகவித் தானையன்று
புவித்தானை வற்றப் பொழிசரத் தானைப் பொருதிலங்கை
அவித்தானை மாலிருஞ் சோலைநின் றானை யழகனைமுன்
தவித்தானை வா! என வந்தானைப் பற்றினென் றஞ்சமென்றே. (௬௮)

தஞ்சந் தனமென் றுதேடிப்புல் லோர்தைய லார்கடைக்கண்
வஞ்சந் தனங்கொள்ள வாளா விழப்பர் மதியுடையோர்
செஞ்சந் தனப்பொழின் மாலிருஞ் சோலைத் திருநெடுமால்
செஞ்சந் தனக்குவப் பாகநல் காநிற்பர் நேர்படினே. (௬௯)

நேராய வேதனை நெஞ்சிடந் தாய்! நெடுஞ் சோலைமலைக்
காராய்! வேதனை முன்படைத் தாய்! நின் கழற்குத்தொண்டென்
றோராய வேதனைப் புன்பிறப் போயு மவாவழியிற்
பேராய வேதனை யில்லுழைப் போரும் பிழைப்பர்களே. (௭௦)

[தலைவி தோழியர்க்கு அறத்தொடுநிற்றல்]

பிழைத்தலை யானென்ணிப் பேசுகின் றேனிப் பிணிமற்றென்றால்
மழைத்தலை வார்குழ லீர்! தணி யாது வருணனைமுன்
அழைத்தலை யங்கடைத் தாரலங் கார ரலங்கனல்கீர்!
முழைத்தலை நின்று மலயா நிலம்வந்து மோதுமுன்னே. (௭௧)

மோதாக வந்தனை மூட்டிலங் கேசன் முடிந்துவிண்ணின்
மீதாக வந்தனை வில்லெடுத் தேவிடை வெற்பினின்ற
நாதா! கவந்தனைச் செற்றாய்! உனையன்றி நான்மறந்தும்
தீதாக வந்தனை செய்யேன் புறஞ்சில தேவரையே. (௪௨)

தேவரை யாதன் மனிதரை யாதல் செழுங்கவிதை
நாவரை யாம னவிலுகிற் பீர்!நம்மை யாளுஞ்செம்பொன்
மேவரை யானை யிருஞ்சோலை வேங்கட மெய்யமென்னு
மாவரை யானை யொருவனை யேசொல்லி வாழுமினே! (௪௩)

வாழுமின் பங்கயச் சுந்தர வல்லி மணாளன்வெற்பைச்
சூழுமின்! பக்தித்த தொல்வினை தீர்ந்துய்யத் தொங்கல்சுற்றும்
தாழுமின் பஞ்சணை மேன்மட வார்தட மாமுலைக்கே
வீழுமின் பங்கரு தித்துன்ப யோனியில் வீழ்பவரே! (௪௪)

வீழம ராமர மெய்தார் மதிதவழ் வெற்பைநெஞ்சே!
தாழம ராடச் சமன்குறு கானிச் சரீரமென்னும
பாழம ராமற் பரகதி யேற்றவர் பார்க்கில்விண்ணோர்
வாழம ராவதி யுந்நர காமந்த மாநகர்க்கே. (௪௫)

நகரமு னாடும் புரந்தவர் நண்ணல ரால்வனமும்
சிகரமு னாடுஞ் சிறமைகண் டோமஞ்ஞை தேனிசைகள்
பகரமு னாடும் பனிச்சோலை வெற்பினிற் பார்க்குக்கஞ்சன்
தகரமு னாடுகைத் தார்க்கறிந் தீர்கள் சரண்புகுமே! (௪௬)

சரணிய னாகத் தனைநினைந் தாரைத்தன் போலவைக்கும்
அரணிய னாகத் தணையா னரங்க னழகனெங்கோன்
இரணிய னாக மிடந்தான் கதையன்றி யீனர்தங்கள்
முரணிய னாகத்தும் புன்குர லோரி முதுக்குரலே. (௪௭)

ழுதுவிருந் தானவத் தானிலை மேய்த்தவர் முன்விதுரன்
புதுவிருந் தானவர் மாலலங் காரர் பொலங்கழலா
மதுவிருந் தாமரைக் காளா யிரார்க்கு மதிநுட்பநூல்
எதுவிருந் தாலு மதனால் விடாவிங் கிருவினையே. (௪௮)

[தலைவி வெறிவிலக்கிச் செவிலியர்க்கு அறத்தொடுநிற்றல்]

வினையாட்டி யேன்கொண்ட வெங்காம நோய்வெறி யாட்டினுஞ்
சினையாட்டி னுந்தணி யாதன்னை மீர்!செய்ய பூங்கயல
மனையாட்டி நாயகன் மாலிருஞ் சோலை மலைச்சிலம்பாற்
றெனையாட்டி வாருஞ்சொன் னேனந்த நோயு மெனக்கில்லையே ()

[வண்டு விடுதூது]

எனக்கா வியங்கு முடலிங்கு மாகி யிருப்பதைச்சந்
தனக்கா வியங்குந் தமரவண் டீர்!சொல்லுந் தத்துவநூல்
கனக்கா வியங்கவி வல்லோர் புகழலங் காரனுக்கு
வனக்கா வியங்கண்ணி மாமல ராண்மண வாளனுக்கே. (௫௦)

மணவாள ராவி நிகர்திரு மாதுக்கு மாலழகர்
பணவாள ராவிற்கண் பள்ளிகொள் வார்திருப் பாதமெண்ணக்
குணவாள ராவிரின் றேயுயிர் காள்!உம்மைக் கூற்றுவனார்
திணவாள ராவி யறுக்குமப் போது நினைப்பரிதே. (௫௧)

நினைப்பரி யாய்!எளி யாய்!உம்பர் யார்க்குநின் னன்பருக்கும்
வினைப்பரி யானவன் வாய்பிளந் தாய்!வியன் சோலைமலை
தனைப்பரி யாநின்ற தாளழ கா!முற் சனனத்துள்ளும்
உனைப்பரி யாமலன் றேபரித் தேனிவ் வுடலத்தையே. (௫௨)

உடலம் புயங்கத் தரிபோல் விடுமென் றுவணப்புள்ளின்
னுடலம் புயமிசை நீவரல் வேண்டுமை யானனற்கு
மடலம் புயற்கும் வரந்தருஞ் சோலை மலைக்கரசே!
கடலம் புயர்வரை யாலடைத் தாய்!என்னைக் காப்பதற்கே. (௫௩)

காப்பவ னந்த மலரோனை யுங்கறைக் கண்டனையும்
பூப்பவ னந்தரம் போக்கவைப் பான்புனல் பார்விசும்பு
தீப்பவ னந்தருந் தெய்வசி காமணி சேவடியை
நாப்பவ னந்தப் புகழ்வார்க் கொப்பில்லை நவகண்டத்தே. (௫௪)

கண்டா கனன்கண்ண னல்லாற் கதியின்மை கண்டடைந்த
துண்டா கனம்பவொட் டாதுங்க ளூழ்வினை யுண்மையறிந்
தண்டா கனவண்ண னே!அரு ளாயென் றழகனுக்கே
தொண்டாக னன்னெஞ்சி னாலுரைப் பீர்பிறர் தொண்டர்களே. ()

தொண்டுப டார்திரு மாலிருஞ் சோலையிற் சோதிக்கன்பு
கொண்டுப டாமல ரிட்டிறைஞ் சார்மடக் கோதையரைச்
கண்டுப டாமுலை தோயனு ராகங் கருதியிரா
உண்டுப டாநிற்கும் போதுனை வாரெங்ங னுய்வதுவே. (௫.)

உய்வந் தொழும்புசெய் தென்றிருப் போமையுய் யாமலைவர்
பெய்வந் தொழுவினைக் கேயென்ப ராற்பெருந் தேன்சிகரம்
தைவந் தொழுகு மலையலங் கார! சதுமுகத்துத்
தெய்வந் தொழுந்தெய்வ மே!என்கொ லோ?உன் றிருவுளமே. ()

திருவிளை யாடுதிண் டோட்செங்கண் மால்பல தேவருடன்
மருவிளை யான்றிரு மாலிருஞ் சோலை மலையெனவோர்
உருவிளை யாமற் பிறப்பார் பலர்புக ழோதிச்சிலர்
கருவிளை யாநிற்க வித்தாவர் முத்தியிற் காமமற்றே. (௫௮)

காமத் தனைப்பொய் யழுக்காறு கோபங் களவுகொலை
யாமத் தனையு முடையேனை யாளுங்கொல்? ஆன்பொருப்பாம்
தாமத் தனைவரும் போற்றநின் றான்பண்டு தாமரையோன்
பூமத் தனைச்செய்த நோய்துடைத் தானடிப் போதுகளே. (௫௯)

போதகத் தானும்வெண் போதகத் தானும் புராந்தகனும்
நீதகத் தானது தீர்தருங் காலேத் திருவரைசேர்
பீதகத் தாய்!அழ கா!அரு ளாயென்பர் பின்னையென்ன
பாதகத் தான்மறந் தோதனி நாயகம் பாவிப்பரே. (௬0)

பாவிக் கமல விரிவஞ்சற் றிறையவர் பத்தர்தங்கள்
ஆவிக் கமலத்து வீற்றிருப் பாரளிப் பாடல்கொண்ட
வாவிக் கமல மணநாறுஞ் சோலை மலையைக்கண்ணால்
சேவிக் கமல மறுமன மே!எழு செல்லுதற்கே. (௬௧)

செல்லுக் குவளை குழனுட்ட மென்று தெரிவையர்பால்
பல்லுக் குவளை முதுகாந் தனையும்புன் பாட்டுரைப்பீர்!
அல்லுக் குவளை யுழும்பாண்டி நாட்டை யடைந்துநுங்கள்
சொல்லுக் குவளை யுண் டார்க்கலங் காரர்க்குச் சூட்டுமினே! (௬௨)

[மேகவிடுதூது]

சூட்டோ திமஞ்சென்று சொல்லாதென் காதலைத் தும்பியிசைப்
பாட்டோதி மங்கைய ரும்பணி யார்பண்டு கன்மழைக்காக்
கோட்டோ திமமெடுத் தார்சோலை மாமலைக் கோவலனூர்
மாட்டோ திமஞ்சனங் காள்!உரைப் பீர்!மறு வாசகமே. (௬௩)

வாசம் பரந்த துழாயுமென் பாடலு மாலையொளி
வீசம் பரம்பசும் பொன்னுமென் வேட்கையும் வீற்றிருக்கும்
தேசம் பரம பதமுமென் சிந்தையுந் தீவளியா
காசம் பரவைமண் கண்டுண்ட மாலலங் காரனுக்கே. (௬௪)

அலங்காரன் சுந்தரத் தோள னழக னணிமுடியில்
இலங்கார ணேறு திருவுடை யானெட் டெழுத்துங்கற்றூர்
கலங்கா ரனங்கன் கணையாலெச் செல்வமுங் காதலியார்
மலங்கா ரருந்துயர் மேவினு மாகுவர் வானவரே. (௬௫)

வானவ தாரணி சுந்தரத் தோளன்முன் மாவலியைத்
தானவ! தாரணி தா!என்ற மாயன் றராதலத்து
மீனவ தார முதலா னவைவினை யின்றியிச்சை
யானவ தாறி வாரவ ரேமுத்த ராமவரே. (௬௬)

[பிரிவாற்றது வருந்துந் தலைவியைக் குறித்துச்
செவிலி இரங்கல்]

ஆமவ ரைப்பணித் தாள்வா ரழக ரயனுமையாள்
வாமவ ரைப்பணி யான்பணி பாதத்தை வாழ்த்துங்கொங்கை
ஏமவ ரைப்பணி பூணுள்சந் தேந்திழை யாளுரைத்தால்
வேமவ ரைப்பணி யாதே யெனுமெங்கண் மெல்லியலே. (௬௭)

[பிரிவாற்றது வருந்துந் தலைவி நிலைகண்டு
தோழி இரங்கல்]

மெல்லிய லைப்பரி யங்கனை யாரும் வெறுத்துவசை
சொல்லிய லைப்பரி யங்கவொட் டார்சுடர் மாமலையைப்
புல்லிய லைப்பரி யங்கத்தி லேறும் புயல்பதின்மர்
கல்லிய லைப்பரி யங்கழற் ருமை நயந்தபின்னே. (௬௮)

பின்னிறப் பும்பிறப் புங்நரை மூப்பும் பிணியுமனே
முன்னிறப் பும்பிரித் தானிருந் தானவர் மூதிலங்கை
மன்னிறப் புங்கக் கணைதொட்ட சோலை மலையழகன்
பொன்னிறப் புண்டரி கத்திருத் தாளன்றிப் போற்றிலமே. ()

[பிரிவாற்றத தலைவி, செவிலியைக் குறித்து இரங்கல்]

போற்றியி ராம!என் றூர்சோலை மாமலை போதவிடார்
மாற்றியி ராவைப் பகலாக் கிலார்வண்டு மூழ்குழன்மேல்
ஏற்றி யிராசத மாகவை யாரென் னிடரையெல்லா
மாற்றியி ராரன்னை மாரென்னை! வாய்வம் பளக்கின்றதே. (௭௦)

அளப்பது மங்கையி னீரேற் பதுந்தந் தளிப்பதும்பின்
பிளப்பது மங்கையில் வெண்கோட்டிற் கொள்வதும் பேருணவாக்
கிளப்பது மங்கை யெனத்தோள் புணர்வதுங் சேட்கில்வையம்
வளப்பது மங்கையஞ் சேர்சோலை மாமலை மாதவரே. (எக)

மாதவ ராலும்ப ராலறி யார்மது ரைப்பிறந்த
யாதவ ராலிலை மேற்றுயின் றூரிருந் தாழ்சுனையில்
போதவ ராலுகண் மாலிருஞ் சோலையிற் போம்பிறவித்
தீதவ ராலன்றி யெத்தேவ ராலுந் தெறலரிதே. (எஉ)

அரியவ ரந்தந் தயன்முத லோர்க்கருள் செய்தவரைப்
பெரியவ ரந்தமில் வாழ்வின ராக்கித்தம் பேரருளால்
கரியவ ரந்தணர் கைதொழு மாலலங் காரர்வையத்
துரியவ ரந்தரங் கத்துயர் தீர்க்க வுலாவுவரே. (எங)

உலகுதிக் கும்படி சிந்தித்தத் தந்திவ் வுலகிலுறு
நலகுதிக் கும்படி நின்றபி ரானிட நானிலமும்
இலகுதிக் கும்விசும் புந்தொழ வோங்கி யிருல்வருடை
பலகுதிக் குந்தொறுந் தேன்பாயுஞ் சோலைப் பருப்பதமே. (எச)

பருப்பதந் தாமன்னி நிற்பது பாற்கடல் பள்ளிகொள்வ
திருப்பதந் தாமம்பண் டிப்போதெ லாமிள ஞாயிறன்ன
உருப்பதந் தாமதர்க் கியாம லன்பர்க் குதவழகர்
திருப்பதந் தாமரை போல்வா ருகப்பதென் சிந்தனையே. (எரு)

சிந்திக் கலாரங் கொழிக்குந் திருச்சிலம் பாற்றழகும்
பந்திக் கலாப மயிலாடுஞ் சாரலும் பங்கயனோ
டந்திக் கலாமதி யாற்கரி யாருறை யான்பொருப்பும்
வந்திக் கலாமெனிற் சந்திக்க லாமுயர் வைகுந்தமே. (எசு)

வைதா ரையுமுன் மலைந்தா ரையுமலர்த் தாளில்வைத்தாய்
மொய்தாரை யத்தனைத் தீங்கிழைத் தேனையு மூதுலகிற்
பெய்தாரை வானிற் புரப்பா னிடபப் பெருங்கிரியாய்!
கொய்தாரை வேய்ந்த திருவடிக் கீழ்த்தொண்டு கொண்டருளே. ()

கொண்ட மருந்துங் கடைவாய் வழியுகக் கோழைவந்து
கண்ட மருந்துய ராம்போ துன்பாதங் கருதறியேன்
வண்ட மருந்துள வோனே! தென்சோலை மலைக்கரசே!
அண்ட மருந்தும் பிரானே! இன் றேயுன் னடைக்கலமே. (௭௮)

அடைக்கலந் தானை யிரந்தாள் புகல வவள்பொருட்டாற்
படைக்கலந் தானைத் தருமன் கெடாமல்வெம் பாரதப்போ
ரிடைக்கலந் தானை யலங்கார னைச்சர ணென்றடைந்தேன்
முடைக்கலந் தானையு மப்போ தயர்ப்பினு முத்தியுண்டே. (௭௯)

உண்டிறக் கும்புவ னங்களை மீள வுமிழ்ந்திலையேல்
பண்டிறக் கும்பது மத்தோன் புரந்தரன் பைந்தழல்போல்
கண்டிறக் குஞ்சங் கரன்முத லோர்களைக் கண்டவரார்?
திண்டிறக் குஞ்சரஞ் சேர்சோலை மாமலைச் சீதரனே! (௮௦)

[பிரிவாற்றது வருந்துந் தலைவியின் நிலைமையைக் குறித்துத்
தோழி இரங்கல்]

சீரரி தாழ்பொழின் மாலிருஞ் சோலையிற் செல்வர்செங்கண்
போரரி தாள்புனை தாரரி தாகிற்றண் பூந்துளவின்
தாரரி தாவுந் தழையரி தாகிற் றழைதொடுத்த
நாரரி தாகிற் பிழைப்பரி தாமெங்க ணன்னுதற்கே. (௮௧)

நன்னுத லைப்பணி பூண்மார்பில் வைத்துவிண் ணாட்டிருப்பார்
மின்னுத லைப்பணி மேற்றுயில் வார்விடை வெற்பினிற்பார்
மன்னு தலைப்பணி யன்பரை வைக்கு மலரடிக்கீழ்த்
துன்னு தலைப்பணி செய்வதெஞ் ஞான்று? என் றுயர்தொலைந்தே.

தொலைந்தானை யோதுந் தொலையானை யன்னைசொல் லான்மகுடம்
கலைந்தானை ஞானக் கலையானை யாய்ச்சி கலைத்தொட்டிலோ
டலைந்தானைப் பாலி னலையானை வாணன்கை யற்றுவிழ
மலைந்தானைச் சோலை மலையானை வாழ்த்தென் மடநெஞ்சமே! ()

[தலைவி, தோழியறத்தொடுநிற்றல்]

செஞ்சிலம் பாற்ற முடியாது வேளெய்து கீளிரவுந்
துஞ்சிலம் பாற்றுளி யுந்நஞ்ச மாஞ்சொரி கன்மழையை
அஞ்சிலம் பாற்றடுத் தாரலங் கார ரடிவிளக்கும்
செஞ்சிலம் பாற்றரு கேகிடத் திருயிர் தேற்றுதற்கே. (அச)

தேற்றுவித் தாற்புன றேற்றுநர் போற்றிரு வெட்டெழுத்தால்
மாற்றுவித் தானென் மயக்கமெல் லாமண்ணும் விண்ணுமுய்யப்
போற்றுவித் தாரப் புயலலங் காரன்பொன் மேருவைப்போல்
தோற்றுவித் தாரணி யுஞ்சுங் தாத்திருத் தோளண்ணலே. (அரு)

அண்ணலை வான்மதி தோய்சோலை மாமலை யச்சுதனைத்
தண்ணலை வானவனைத்தெய்வ நாதனைத் தாளடைவான்
எண்ணலை வான்பகை யாமைவ ரோடிசைந் தின்னமுடற்
புண்ணலை வானெண்ணி னுய்மன மே!உன் புலமைநன்றே! ()

புலமையி லேகிமிர்க் தற்பரைப் போற்றிப் பொதுமகளைக்
குலமையி லே!குயி லே!கொடி யே!என்றுங் கூர்விழியாம்
பலமையி லேயென்றும் பாடாமற் பாடுமின்! பாவலர்காள்!
நலமையி லேய்முத்த மார்சோலை மாமலை நம்பனையே. (அஎ)

நம்பிநின் றேனுன் சரணா விந்தத்தை நன்னெஞ்சென்னும்
செம்பிநின் றேபொறித் தேனுனக் காளென்று தெய்வக்குழாம்
பம்பிநின் றேசெறிக் கும்பதங் காணப் பதறுகின்றேன்
கொம்பிநின் றேன்சொரி யுஞ்சோலை மாமலைக் கொற்றவனே! ()

கோற்ற விராவணன் பொன்முடி வீழக் கொடுங்கண்டுஞ்சல்
உற்ற விராவணன் மாளவெய் தோனென் பாதனுக்குச்
சொற்ற விராவணன் மாலிருஞ் சோலை தொழுதுவினை
முற்ற விராவண னற்றமிழ் மாலை மொழிந்தனனே. (அகூ)

மொழித்தத்தை கொஞ்சு மலையலங் காரன்முன் னூற்றுவரை
அழித்தத்தை மைந்தர்க் கரசளித் தோனடி நாட்டொடர்ந்தென்
னுழித்தத்தைச் செய்தன்றிப் போகா வினையை யொருநொடியிற்
கழித்தத்தை யென்சொல்லு கேன்றனக் காட்பட்ட காலத்திலே. ()

கால மலைக்கும் புவனங்க ளைக்காந் தாய்!உதிரம்
கால மலைக்குமைத் தாயழ கா!கம லத்துப்பஞ்சார்
கால மலைக்கும் புவிக்குமன் பா!உயிர் காயம்விடுங்
கால மலைக்குங் கடுங்கூற்றைக் காய்ந்தென்னைக் காத்தருளே. (கக)

அருளக் கொடியிடைப் பூமாது நீயும்வந் தாளினுமாம்
இருளக் கொடிய நமன்வருங் காலத் திகழினுமாம்
கருளக் கொடியழ கா!அலங் கார!வன் கஞ்சனெஞ்சத்
துருளக் கொடிய வுதைத்தாய்! எனதுயி ருன்னுயிரே. (கஉ)

[பிரிவாற்றாத தலைவி தனது நிலைமையைக் கூறுதல்]

உயிர்க்கும் படிக்குமுன் னாயிரம் பேரோன் றொருத்தன்னைமார்
செயிர்க்கும் படிக்குநின் றேனென்செய் கேன்!செழுந் தேவர்களும்
அயிர்க்கும் படிக்குற ளாமழ கா!அலங் கார!நெய்க்கும்
தயிர்க்கும் படிக்குஞ்செவ் வாய்மலர்ந் தாய்!நின்னைத் தாள்பணிந்தே.

பணிபதி வாடநின் றாடின நூற்றுவர் பாற்சென்றன
பணிபதி னாலு புவனமுந் தாயின பாப்பதின்மர்
பணிபதி யெங்கு முவந்தன பங்கயப் பாவையுடன்
பணிபதி மார்ப னலங்காரன் பொற்றிருப் பாதங்களே. (கச)

பாதக ரத்தனை பேருங் கனகனும் பன்னகத்தா
லேதக ரத்தனை யற்கரு ளாளியை யெட்டெழுத்துள்
ஓதக ரத்தனைச் சுந்தரத் தோளுடை யானைநவ
நீதக ரத்தனைச் சேர்ந்தார்க்குத் தேவரு நேரல்லரே. (கூ௫)

அல்லலங் காரையுஞ் சேர்விக்கு மைம்புல வாசையென்றும்
பல்லலங் காணைந்து கோலூன்றி யும்பற்ற றுதுகண்டாய்
மல்லலங் காரிகை யார்மரு டீர்ந்து வணங்குநெஞ்சே!
தொல்லலங் காரனைத் தென்றிரு மாலிருஞ் சோலையிலே. (கூ௬)

[பிரிவாற்றாத தலைவி நிலையைக் குறித்துப்
பாங்கி இரங்கல்]

சோலையி லாமையில் சேர்திரு மாலிருஞ் சோலைநின்றான்
வேலையி லாமையில் வேடங்கொண் டான்புய மேவப்பெறுச்
சேலையி லாமையி லங்குகண் ணாளவன் றெய்வத்துழாய்
மாலையி லாமையின் மாலையுற் றுளந்தி மாலையிலே. (கூ௭)

[பிரிவாற்றாது வருந்துந் தலைவி நிலையைத் தலைவனுக்குப்
பாங்கி கூறல்]

மாலைக் கரும்பு சிறுகாறு கைக்க வருந்துமெங்கள்
ஆலைக் கரும்புதன் னாசையெல் லாஞ்சொல்லி லாயிரந்தோட்
டோலைக் கரும்புண் டொடமுட மாமதி யூர்குமிச்
சோலைக் கரும்புய லேயரு ளாயுன் றுளவினையே. (கூ௮)

துளவிலை யார்பொன் னடிமுடி சூட்டித்தொண் டாக்கியென்னை
வளவிலை யாக்கொண்ட நீகை விடேன்மங் கலகுணங்கள்
அளவிலை யா! அலங் கார! சமயிக ளாய்ந்தவண்ணம்
உளவிலை யாயுரு வாயரு வாய வொருமுதலே! (கூ௯)

ஒருபா லமர ரொருபான் முனிவ ருடனிருந்தென்
இருபார் வையுங்கொண் டெப்பதென் றோ!இட பக்கிரிக்கும்
பொருபாற் கடற்கு மயோத்திக்கும் பொற்றுவ ராபதிக்கு
திருபா!வை குந்தமு நீவீற் றிருக்கின்ற நீர்மையுமே. (௧௦௦)

---

அலங்கார ருக்குப் பரமச் சுவாமிக் கழகருக்குக்
கலங்காப் பெருநக ரங்காட்டு வார்க்குக் கருத்தன்பினால்
நலங்காத சொற்றொடை யந்தாதி யைப்பற்ப நாபப்பட்டன்
விலங்காத கீர்த்தி மணவாள தாசன் விளம்பினனே. (௧௦௧)

## அழகரந்தாதி

முற்றிற்று.

# நூற்றெட்டுத்திருப்பதியந்தாதி

ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்

# நூற்றெட்டுத்திருப்பதியந்தாதி

## சிறப்புப்பாயிரம்

### வெண்பா

ஏற்ற மணவாள ரிசைத்தாரந் தாதிவெண்பா
தோற்றக்கே டில்லாத தொன்மாலைப்—போற்றத்
திருப்பதியா நூற்றெட் டினையுஞ்சே விப்போர்
கருப்பதியா வண்ணமுண்டாக.

[ஆழ்வார்கள் பன்னிருவர்]

பொய்கைபூ தன்பேயார் பொன்மழிசைக் கோன்மாறன்
செய்ய மதுரகவி சேரர்பிரான்—வையகமெண்
பட்டர்பிரான் கோதைதொண்டர் பாதப் பொடிபாணன்
கட்டவிழ்தார் வாட்கலியன் காப்பு. (௧)

[நம்மாழ்வார்]

பிறவாத பேறு பெறுதற்கெஞ் ஞான்று
மறவா திறைஞ்சென் மனனே!—துறவாளன்
வண்குருகூர் வாவி வழுதிவள நாடுடைய
தண்குருகூர் நம்பி திருத் தாள். (௨)

[உடையவர்]

முன்னே பிறந்திறந்து மூதுலகிற் பட்டவெல்லாம்
என்னே மறந்தனையோ வென்னெஞ்சே!—சென்னேன்
இனியெதிரா சன்மங்க ளின்றுமுதற் பூதூர்
முனியெதிரா சன்பேர் மொழி. (௩)

[கூரத்தாழ்வான்]

மூக்கால மில்லா முகில்வண்ணன் வைகுந்தத்
தெக்காலஞ் செல்வா னிருக்கின்றேன்?—தக்காரெண்
கூரத்தாழ் வானடியைக் கூடுதற்கு நாயடியேன்
போரத்தாழ் வானசடம் போட்டு. (ச)

[பட்டர்]

நான்கூட்டில் வந்தவன்றே நானறியா நன்மையெல்லாம்
தான்கூட்டி வைத்தநலந் தான்கண்டீர்—ஆங்கூட்டச்
சிட்டருக்கு வாய்த்த திருவரங்க னின்னருளால்
பட்டருக்காட் பட்ட பயன். (ரு)

[திருப்பதிகளின் வகை]

ஈரிருப தாஞ்சோழ மீரொன்ப தாம்பாண்டி
ஓர்பதின் மூன்றாமலைநா டோரிரண்டாம்—சீர்நடுநா
டாறோடீ ரெட்டுத்தொண்டை யவ்வடநா டாறிரண்டு
கூறுதிரு நாடொன்றாக் கொள். (சு)

---

## நூல்

## சோழநாட்டுத் திருப்பதிகள்-சo

### க. திருவரங்கம் பெரியகோயில்

சீர்வந்த வுந்தித் திசைமுகனு லல்லாதென்
சோர்வந்த சொல்லிற் சுருங்குமோ?—ஆர்வம்
ஒருவரங்கக் கோயி லுகந்தவரை யாள்வான்
திருவரங்கக் கோயிற் சிறப்பு. (க)

### ௨. திருவுறையூர்

சிறப்புடைய செல்வத் திருப்பதிகள் போல
மறப்புடைய நாயேன் மனத்துள்—உறப்போந்
தறந்தையா நின்ற வரங்கா! திருவாழ்
உறந்தையாய்! இங்குறைந்த சோது! (௨)

### ௩. திருத்தஞ்சை

ஓதற்கே னெஞ்சே! உனக்குமிது நன்றெனக்கும்
மேதக்க நன்மையினி வேறில்லை—போதப்
பெருந்தஞ்சை மாமணியைப் பேணி வடிவம்
பொருந்தஞ்சை மாமணியைப் போற்று. (௩)

### ௪. திருவன்பில்

போற்றிசெய வோர்குடைக்கீழ்ப் பொன்னாடு மிந்நாடு
நாற்றிசையு மாண்டாலு நன்கில்லை—தோற்றமிலா
எந்தையன்பி லாதி யிணைத்தா மரையடிக்கே
சிந்தையன்பி லாதார் சிலர். (௪)

### ௫. திருக்காம்பனூர்

சீலமா தவஞ்செய்துந் தீவேள்வி வேட்டும்
பலமா நதியிற் படிந்தும்—உலகில்
பரம்பநூல் கற்றும் பயனில்லை நெஞ்சே!
காம்பனூ ருத்தமன்பேர் கல். (௫)

### ௬. திருவெள்ளறை

கல்லிருந்தான் றந்தை கமலத்தோ னக்கமலத்
தில்லிருந்தான் றந்தையரங் கேசனென்றே—தொல்லைமறை
உள்ளறையா நின்றமையா லுள்ளமே! கள்ளமின்றி
வெள்ளறையான் ருளே விரும்பு. (௬)

### எ. திருப்புள்ளம்பூதங்குடி

விரும்பினவை யெய்தும் வினையனைத்துந் தீரும்
அரும்பரம வீடு மடைவீர்—பெரும்பொறிகொள்
கள்ளம்பூ தங்குடிகொள் காயமுடை யீர்! அடிகள்
புள்ளம்பூ தங்குடியிற் போம். (எ)

### அ. திருப்பேர்நகர்

போமானை யெய்து பொருமானைக் கொம்புபறித்
தாமானை மேய்த்துவந்த வம்மானைத்—தாமச்
செழுந்திருப்பே ரானைச் சிறுகாலைச் சிந்தித்
தெழுந்திருப்பேற் குண்டோ விடர். (அ)

### கூ. திருவாதனூர்

இடரான வாக்கை யிருக்க முயலார்
மடவார் மயக்கின் மயங்கார்—கடவுளர்க்கு
நாதனூ ராதரியார் நா[illegible]னனெதென் னாமலன்
ஆதனூ ரெந்தையடி யார். (கூ)

### க0. திருவழுந்தூர்

அடியாராய் வாழ்மி னறிவிலாப் பேய்காள்!
செடியார் வினையனைத்துந் தீரு—முடிவில்
செழுந்தூரத் தன்னெனினுஞ் செங்கண்மா லெங்கள்
அழுந்தூரத் தன்னணிய னாம். (க0)

### கக. திருச்சிறுபுலியூர்

ஆமருவி மேய்த்த வரக்கரெதி ரார்நிற்பார்?
தாமருவி வாணனைத்தோள் சாய்த்தநாள்—சேமம்
உறுபுலியூர் வன்றோ லுடையா னுடைந்தான்
சிறுபுலியூ ரெந்தைமேற் சென்று. (கக)

### கஉ. திருச்சேறை

சென்றுசென்று செல்வஞ் செருக்குவார் வாயிற்றொறு
நின்றுநின்று தூங்குமட நெஞ்சமே!—இன்றமிழைக்
கூறைக்குஞ் சோற்றுக்குங் கூறாதே பேறாகச்
சேறைக்கு நாயகன்பேர் செப்பு! (கஉ)

### கங. திருத்தலைச்சங்கநாண்மதியம்

செப்புங்கா லாதவனுந் திங்களும்வா னுந்தரையும்
அப்புங்கா லுங்கனலு மாய்நின்றான்—கைப்பால்
அலைச்சங்க மேந்து மணியரங்கத் தம்மான்
தலைச்சங்க நாண்மதியத் தான். (கங)

### கச. திருக்குடந்தை

தானே படைத்துலகைத் தானே யளித்துநீ
தானே யழிக்குந் தளர்ச்சியோ—வானில்
திருமகுடந் தைக்கச் சிறுகுறளாய் நீண்ட
பெரும!குடந் தைக்கிடந்தாய்! பேசு. (கச)

### கரு. திருக்கண்டியூர்

பேசவரிற் றென்னரங்கன் பேரெல்லாம் பேசுகவாய்;
கேசவனைக் காண்கவிழி; கேட்கசெவி;—ஈசனார்
உண்டியூர் தோறு முழன்றிரவா மற்றவிர்த்தான்
கண்டியூர் கூப்புகவென் கை. (கரு)

### கசு. தீருவிண்ணகர்

கையு முரையுங் கருத்துமுனக் கேயடிமை
செய்யும் படிநீ திருத்தினாய்—ஐயா!
திருவிண் ணகரானா! சிந்தையிலு மெண்ணேன்
பெருவிண் ணகராளும் பேறு. (கசு)

### ௧௭. திருக்கண்ணபுரம்

பேறு தரினும் பிறப்பிறப்பு நோய்மூப்பு
வேறு தரினும் விடேன்கண்டாய்—ஏறுநீர்
வண்ணபுரத் தாய்!என் மனம்புகுந்தாய்! வைகுந்தா!
கண்ணபுரத் தாய்!உன் கழல். (௧௭)

### ௧௮. திருவாலி

கழன்றுபோம் வாயுவினைக் கட்டாமற் றீர்த்தம்
உழன்றுபோ யாடாம லுய்ந்தேன்—அழன்று
பொருவாலி காலன் பரகாலன் போற்றும்
திருவாலி மாயனையே சேர்ந்து. (௧௮)

### ௧௯. திருநாகை

சேர்ந்துனக்குக் குற்றேவல் செய்திலனென் சிந்தையினீ
ஆர்ந்ததற்கோர் கைம்மா றறிகிலேன்—பூந்துவரை
மன்னா!கை யாழி வலவா! வலம்புரியாய்!
தென்னாகை யாய்!அருளிச் செய். (௧௯)

### ௨௦. திருநறையூர்

செய்ய சடையோன் றிசைமுகத்தோன் வானவர்கோன்
ஐயமறுத் தின்ன மறியாரே—துய்ய
மருநறையூர் வண்டுழாய் மாயோன்செவ் வாயோன்
திருநறையூர் நின்றான் செயல். (௨௦)

### ௨௧. திருநந்திபுரவிண்ணகரம்

செயற்கரிய செய்வோமைச் செய்யாம னெஞ்சே!
மயக்குவா ரைவர் வலியால்—நயக்கலவி
நந்திபுர விண்ணகர மென்பர்திருச் செங்கண்மால்
நந்திபுர விண்ணகர நாடு. (௨௧)

### உஉ. திருவிந்தளூர்

நாடுதும்வா! நெஞ்சமே! நாராய ணன்பதிகள்
கூடுதும்வா! மெய்யடியார் கூட்டங்கள்—சூடுதும்வா!
வீதியிந்த ளத்தகிலின் வீசுபுகை வாசமெழும்
ஆதியிந்த ளூரா னடி. (உஉ)

### உ௩. திருச்சித்திரகூடம்

அடியா லுலகெல்லா மன்றளந்து கொண்ட
நெடியானைக் கூடுதியே நெஞ்சே!—கொடிதாய
குத்திரகூ டங்கி கொளுந்தாமுன் கோவிந்தன்
சித்திரகூ டங்கருதிச் செல். (உ௩)

### உ௪. திருச்சீராமவிண்ணகரம்

செல்லுந் தொறுமுயிர்ப்பின் செல்லு மிருவினையை
வெல்லு முபாயம் விரும்புவீர்!—தொல்லரங்கர்
சீராம விண்ணகரஞ் சேர்மின்!பின் மீளாத
வூராம விண்ணகர முண்டு. (உ௪)

### உ௫. திருக்கூடலூர்

உண்டுகேட் டுற்றுமோந் துப்பார்க்கு மைவர்க்கே
தொண்டுபட லாமோ?உன் றொண்டனேன்—விண்டிலங்கும்
ஆடலூர் நேமிமுத லம்படையாய்! அன்புடையாய்!
கூடலூ ராய்!இதனைக் கூறு! (உ௫)

### உ௬. திருக்கண்ணங்குடி

கூறுபுகழ்த் தன்னடிக்கே கூட்டுவனோ? இன்னமென்னை
வேறுபடப் பல்பிறப்பில் வீழ்த்துவனோ?—தேறுகிலேன்
எண்ணங் குடியா யிருந்தானின் றுன்கிடந்தான்
கண்ணங் குடியான் கருத்து. (உ௬)

### ௨௭. திருக்கண்ணமங்கை

கருத்தினால் வாக்கினா னன்மறையுங் காணா
ஒருத்தனை நீ நெஞ்சே! உணரில்—பெருத்தமுகில்
வண்ணமங்கை கண்கால் வனசந் திருவரங்கம்
கண்ணமங்கை யூரென்று காண். (௨௭)

### ௨௮. திருக்கவித்தலம்

காணியு மில்லமுங் கைப்பொருளு மீன்றோரும்
பேணிய வாழ்க்கையும் பேருறவும்—சேணில்
புவித்தலத்தி லின்பமும் பொங்கரவ மேறிக்
கவித்தலத்திற் கண்டுயில்வோன் கால். (௨௮)

### ௨௯. திருவெள்ளியங்குடி

காலளவும் போதாக் கடன்ஞாலத் தோர்கற்ற
நூலவே யன்றி நுவல்வாரார்?—கோலப்
பருவெள்ளி யங்குடியான் பாதகனூன் மாய்த்த
திருவெள்ளி யங்குடியான் சீர். (௨௯)

### ௩௦. திருமணிமாடக்கோயில்

சீரே தருங்கதியிற் சேருகைக்கு நானுன்னை
நேரே வணங்கினே னெஞ்சே!நீ—பாரில்
அணிமாடக் கோயி லரக்கனார் நாங்கூர்
மணிமாடக் கோயில் வணங்கு. (௩௦)

### ௩௧. திருவைகுந்த விண்ணகரம்

வணங்கேன் பிறதெய்வ மாலடி யாரல்லாக்
குணக்கேடர் தங்களுடன் கூடேன்—இணங்கிநின்று
வைகுந்த விண்ணகரம் வாழ்த்துவே னீதன்றோ
வைகுந்த விண்ணகர வாழ்வு. (௩௧)

## கஉ. திருவரிமேயவிண்ணகரம்

வாழு மடியார் யடநெஞ்சே! நம்மளவோ?
தாழுஞ் சடையோன் சதுமுகத்தோன்—பாழிக்
கரிமேய விண்ணகரக் காவலோன் கண்டாய்
அரிமேய விண்ணகரத் தார்க்கு. (கஉ)

## கஙு. திருத்தேவனார்தொகை

ஆர்க்கும் வலம்புரியா லண்டமு மெண்டிசையும்
கார்க்கட லும் வெற்புங் கலங்கினவால்—சீர்க்கும்
திருத்தேவ னார்தொகைமால் செவ்வாய்வைத் தூதத்
தருத்தேவ னார்தொகையுஞ் சாய்ந்து. (கங)

## கச. திருவண்புருடோத்தமம்

சாய்ந்த திருவரங்கந் தண்வேங் கடங்குடந்தை
எய்ந்த திருமா லிருஞ்சோலை—பூந்துவரை
வண்புருடோத் தமமாம் வானவர்க்கும் வானவனும்
ஒண்புருடோத் தமன்ற னூர். (கச)

## கரு. திருச்செம்பொன்செய்கோயில்

[தலைவி ஆற்றாமை மிகுதியால் மடலூரத்துணிதல்]

ஊர்வேண் மடலை யொழிவேன் மடநாணம்
சேர்வேன் கரிய திருமாலைப்—பாரறிய
அம்பொன்செய் கோயி லரங்கனணி நாங்கூர்ச்
செம்பொன்செய் கோயிலினிற் சென்று. (கரு)

## கசு. திருத்தெற்றியம்பலம்

சென்றது காலந் திரைநரைமூப் பானவினி
என்றுகொல்? சாவறியோ மென்னெஞ்சே!—கன்றால்
உருத்தெற்றி யம்பலத்தை யோர்விளவின் வீழ்த்தான்
திருத்தெற்றி யம்பலத்தைச் சேர்! (கசு)

### ௧௭. திருமணிக்கூடம்

சோராது முன்செய்த தீவினைபின் செய்வதுவும்
வாரா தினிநீ மடநெஞ்சே!—நேராக்
குருமணிக்கூ டத்தானைக் கொம்புபறித் தானைத்
திருமணிக்கூ டத்தானைச் செப்பு. (௧௭)

### ௧௮. திருக்காவளம்பாடி

செப்பேன் மனிதருக்கென் செஞ்சொற் றமிழ்மாலை
கைப்பேன் பிறதெய்வங் காண்பாரை—எப்போதும்
காவளம்பா டித்திருமால் காற்றா மரைதொழுது
நாவளம்பா டித்திரிவே னான். (௧௮)

### ௧௯. திருவெள்ளக்குளம்

நானடிமை செய்யவிடாய் நானானே னெம்பெருமான்
தானடிமை கொள்ள விடாய் தானானான்—ஆனதற்பின்
வெள்ளக் குளத்தே விடாயிருவ ருந்தணிந்தோம்
உள்ளக் குளத்தேனை யொத்து. (௧௯)

### ௨௦. திருப்பார்த்தன்பள்ளி

ஒத்தமர ரேத்து மொளிவிசும்பும் பாற்கடலும்
இத்தலத்திற் காண்பரிய வென்னெஞ்சே!—சித்துணர்ந்த
தீர்த்தன்பள் ளிக்கிருந்த செப்பவெளி நின்றானைப்
பார்த்தன்பள் ளிக்குட் பணி. (௨௦)

சோழநாட்டுத் திருப்பதிகள் முற்றும்.

## பாண்டியநாட்டுத் திருப்பதிகள்-கஅ.

### க. திருமாலிருஞ்சோலைமலை

பணிந்தேன் றிருமாலைப் பாமாலை தாளில்
அணிந்தே னருட்டஞ்ச மாசத்—துணிந்தேன்
திருமா லிருஞ்சோலை சேர்ந்தே னெனக்கு
வருமா லிருஞ்சோதி வான். (சக)

### உ. திருக்கோட்டியூர்

வான்பார்க்கும் பைங்கூழ்போல் வாளா வுனதருளே
யான்பார்க்க நீபார்த் திரங்கிறெய்—தேன்பார்ப்பின்
ஓசைத் திருக்கோட்டி யூரானே! இன்னமுமென்
ஆசைத் திருக்கோட்டி யாள். (சஉ)

### ங. திருமெய்யம்

[பிரிவாற்றாத தலைவி இரங்கிக் கூறுதல்]

ஆளா யுனக்கன்பா யாசையாய் நாணிலியாய்
வாளா மனைவியென்று வாழ்வேனைக்—கேளாய்
திருமெய்ய மாயா! சிலைகால் வளைத்து
வருமெய்ய மாயா மதன். (சங)

### ச. திருப்புல்லாணி

மதயானைக் கோள்விடுத்து மாமுதலை கொன்ற
கதையா விதயங் கரையும்—முதலாய
புல்லாணி மாலே! புறத்தோர் புகழிருப்பு
வல்லாணி யென்செவிக்கு மாறு. (சச)

### ரு. திருத்தண்காலூர்

[தலைவனைப் பிரிந்த தலைவி வாடைக்கு வருந்தி யிரங்கல்]

மாறுபட வாடையெனும் வன்கால்வந் தென்முலைமேல்
ஊறுபட வூர்ந்த வுளைவெல்லா—மாறத்
திருத்தண்கா லூரான் றிருத்தண் டுழாயின்
மருந்தண்கா லூராதோ வாய்ந்து. (சரு)

### ௬. திருமோகூர்

[அன்னத்தைத் தூதுவிடுத்த தலைவி அதனைக் குறித்து ஐயுறுதல்]

வாயான் மலர்கோதி வாவிதொறு மேயுமோ?
மேயாம லப்பால் விரையுமோ?—மாயன்
திருமோகூர் வாயின்று சேருமோ? நாளை
வருமோ? கூர் வாயன்னம் வாழ்ந்து (௪௬)

### ௭. திருக்கூடல்

வாழ்விப்பா னென்னமோ? வல்வினையி னின்னமென்னை
ஆழ்விப்பா னென்னமோ? அஃதறியேன்—தாழ்விலாப்
பாடலழ கார்புதுவைப் பட்டர்பிரான் கொண்டாடும்
கூடலழ கா!நின் குறிப்பு. (௪௭)

### ௮. ஸ்ரீவில்லிபுத்தூர்

குறித்தொருவர் கொண்டாடுங் கொள்கைத்தோ? கோதை
பிறந்தவூர் விண்டுசித்தர் சீரோ—பிறப்பிலியூர்
தாழ்விலவி புத்தூரென் றைவர்க்குத் தானிரந்தான்
வாழ்வில்லி புத்தூர் வளம். (௪௮)

### ௯. திருக்குருகூர்

வளந்தழைக்க வுண்டாலென்? வாசமணந் தாலென்?
தெளிந்தகலை கற்றாலென்? சீசீ—குளிர்ந்தபொழில்
தண்குருகூர் வாவிச் சடகோப னூரெங்கள்
வண்குருகூ ரென்னாத வாய். (௪௯)

### ௧௦. திருத்தொலைவில்லிமங்கலம்

வாயு மனைவியர்பூ மக்கையர்க ளெம்பிராற்
காயுதங்க ளாழிமுத லைம்படைகள்—தூய
தொலைவில்லி மங்கலமூர் தோள்புருவ மேனி
மலைவில்லி மங்கலந்த வான். (௫௦)

### ௧௧. ஸ்ரீவரமங்கை (வானமாமலை)

வானோர் முதலா மரமளவா வெப்பிறப்பும்
ஆனேற் கவதியிட லாகாதோ?—தேனேயும்
பூவர மங்கை புவிமங்கை நாயகனே!
சீவர மங்கையர சே! (௫௧)

### ௧௨. திருப்பேரை

அரைசாகி வையமுழு தாண்டலு மின்பக்
கரைசேர மாட்டார்கள் கண்டீர்—முறைசாரும்
தென்றிருப்பே ரைப்பதியான் சீர்கேட்டு நாவிலவன்
தன்றிருப்பே ரைப்பதியா தார். (௫௨)

### ௧௩. ஸ்ரீவைகுந்தம்

[தலைவியின் இளமை கண்ட செவிலி இரங்கல்]

தாருடுத்துத் தூசு தலைக்கணியும் பேதையிவள்
நேருடுத்த சிந்தை நிலையறியேன்—போருடுத்த
பாவைகுந்தம் பண்டொசித்தான் பச்சைத் துழாய்நாடும்
சீவைகுந்தம் பாடுந் தெளிந்து. (௫௩)

### ௧௪. திருப்புளிங்குடி.

[தலைவி தோழியர்க்கு அறத்தொடுநிற்றல்]

தெளியும் பசும்பொற் சிறைக்காற்று வீச
விளியுந் துயர்போய் விடுமே—எளியேற்
கருளப் புளிங்குடிவா ழச்சுதனைக் கொண்டு (௫௪)
கருடப் புளிங்குவந்தக் கால்.

### ௧௫. திருவரகுணமங்கை

[பாங்கி வெறிவிலக்கிச் செவிலியர்க்கு அறத்தொடுநிற்றல்]

காலமு நோயுங் கருதாத வன்னைமீர்!
வேலன் வெறியை விலக்குமின்கள்!—மாலாம்
வரகுண மங்கையன்றாள் வண்டுழாய் மேலா
தரகுண மங்கை தனக்கு. (௫௫)

### க௬. திருக்குளந்தை

தனக்குடலம் வேறான தன்மை யுணரான்
மனக்கவலை தீர்ந் துய்ய மாட்டான்—நினைக்கில்
திருக்குளந்தை யாருரைத்த சீர்க்கீதை பாடும்
தருக்குளந்தை யாமலிருந் தால். (௯௬)

### க௭. திருக்குறுங்குடி

தாலத் திழிகுலத்துச் சண்டாள னாலும்
மேலத் தவாதனின் மேன்மைத்தே—கோலக்
குறுங்குடிவாழ் மாயன் குறைகழற்கா ளாகப்
பெறுங்குடியாய் வாழ்வார் பிறப்பு. (௯௭)

### க௮. திருக்கோளூர்

பிறப்பற்று மூப்புப் பிணியற்று நாளும்
இறப்பற்று வாழ விருப்பீர்!—புறப்பற்றுத்
தள்ளுங்கோள் ஊராமாற் றுமோ தான்பள்ளி
கொள்ளுங்கோ ளூர்மருவுங் கோள்! (௯௮)

பாண்டியநாட்டுத் திருப்பதிகள் முற்றும்.

---

## மலைநாட்டுத் திருப்பதிகள் - க௩

### க. திருவனந்தபுரம்

கோளார் பொறியைந்துங் குன்றியுட லம்பழுத்து
மாளாமு னெஞ்சே! வணங்குதியால்—கேளார்
சினந்தபுரஞ் சுட்டான் றிசைமுகத்தான் போற்றும்
அனந்தபுரஞ் சேர்ந்தா னடி. (௯௧)

## உ. திருவண்பரிசாரம்

[பிரிவாற்றது வருந்துந் தலைவியின் நிலை கண்ட
செவிலி இரங்கல்]

அடியுங் குளிர்ந்தா ளறிவுங் குலைந்தாள்
முடிகின்றாண் மூச்சடங்கு முன்னே—கடிதோடிப்
பெண்பரிசா ரங்குப் பிறப்பித்து மீளுவார்
வண்பரிசா ரங்கிடந்த மாற்கு. (கூ0)

## ங. திருக்காட்கரை

மார்க்கமுந் தாந்தாம் வழிபடுந் தெய்வமும்
ஏற்க வுரைப்பார்சொ லெண்ணாதே—தோற்குரம்பை
காட்கரையா முன்னமே நன்னெஞ்சே! நாரணனும்
காட்கரையாற் காளாகாய்! காண். (கூக)

## ச. திருமூழிக்களம்

காண்கின்ற வைம்பூதங் கட்கு மிருசுடர்க்கும்
சேண்கலந்த விந்திரற்குந் தேவர்க்கும்—யாண்கரிய
பாழிக் களத்தாற்கும் பங்கயத்து நான்முகற்கு
மூழிக் களத்தான் முதல். (கூஉ)

## ரு திருப்புலியூர்

[தலைவி தோழியர்க்கு அறத்தோடுநிற்றல்]

முதல்வண்ண மாமே முலைவண்ண முன்னே
விதிவண்ண நீங்கி விடுமே—சதுரத்
திருப்புலியூர் நின்றான் றிருத்தண் டுழாயின்
மருப்புலியூர் தென்றல் வரின். (கூங)

## சு. திருச்செங்குன்றூர்

வரவேண்டுங் கண்டாய் மதிகலங்கி விக்குள்
பொரவே யுயிர்மாயும் போழ்து—பரமேட்டி!
செங்குன்றூர் மாலே! சிறைப்பறவை மேற்கனகப்
பைங்குன்றூர் கார்போற் பறந்து. (கூச)

### ௭. திருநாவாய்

பறந்து திரிதரினும் பாவியே னுள்ளம்
மறந்தும் பிறிதறிய மாட்டா—சிறந்த
திருநாவாய் வாழ்கின்ற தேவனையல் லாலென்
ஒருநாவாய் வாழ்த்தா துகந்து. (௬௫)

### ௮. திருவல்லவாழ்

உகந்தார்க்கெஞ் ஞான்று முளனா யுகவா
திகந்தார்க்கெஞ் ஞான்று மிலனாய்த்—திகழ்ந்திட்
டருவல்ல வாமுருவ மல்லவென நின்றான்
திருவல்ல வாழுறையுந் தேனு (௬௬)

### ௯. திருவண்வண்டூர்

தேவு முலகு முயிருந் திரிந்துநிற்கும்
யாவும் படைத்த விறைகண்டீர்—பூவில்
திருவண்வண் டூருறையுந் தேவாதி தேவன்
மருவண்வண் டூர்துளவ மால். (௬௭)

### ௧௦. திருவாட்டாறு

மாலைமுடி நீத்து மலர்ப்பொன் னடிநோவப்
பாலைவன நீபுகுந்தாய் பண்டென்று—சாலவுநான்
கேட்டாற் றுயிலேன்காண் கேசவனே! பாம்பணைமேல்
வாட்டாற்றுக் கண்டுயில்கொள் வாய். (௬௮)

### ௧௧. திருவிற்றுவக்கோடு

வாய்த்த கருமமினி மற்றில்லை நெஞ்சமே!
தோய்த்த தயிர்வெண்ணெய் தொட்டுண்ட—கூத்தன்
திருவிற் றுவக்கோடு சேர்ந்தாற் பிறவிக்
கருவிற் றுவக்கோடுங் காண். (௬௯)

### கஉ. திருக்கடித்தானம்

காண விரும்புமென்கண் கையுந் தொழவிரும்பும்
பூண விரும்புமென் றன் புன்றலைதான்—வாணன்
திருக்கடித்தா னத்தான் றிகிரியான் றண்டான்
திருக்கடித்தா னத்தானைச் சென்று. (எ௦)

### கங. திருவாறன்விளை

சென்று புனன்மூழ்கிச் செய்தவங்கள் செய்தாலும்
வென்றுபுல னைந்தடக்கி விட்டாலும்—இன்றமிழால்
மாறன் விளைத்த மறையோதார்க் கில்லையே
ஆறன் விளைத்திருமா லன்பு. (எக)

மலைநாட்டுத் திருப்பதிகள் முற்றும்.

---

## நடுநாட்டுத் திருப்பதிகள்-உ.

### க. திருவயிந்திரபுரம்

அன்பணிந்த சிந்தையரா யாய்ந்த மலர் தூவி
முன்பணிந்து நீரெமக்கு மூர்த்தியரே—என்பர்
எமையிந் திரபுரத்தார்க் கின்றெண்ட ரானூர்
தமையிந் திரபுரத்தார் தாம். (எஉ)

### உ. திருக்கோவலூர்

தாமரையா ளாதியாய்த் தாவரங்க ளீறான
சேம வுயிருஞ் செகமனைத்தும்—பூமடந்தைக்
காங்கோவ லாயுதன்பின் னாக வவதரித்த
பூங்கோவ லாயன் பொருள். (எஙு)

நடுநாட்டுத் திருப்பதிகள் முற்றும்.

---

## தொண்டைநாட்டுத் திருப்பதிகள் - ௨௨.

### ௧. திருக்கச்சி - அத்திகிரி

பொருளாசை மண்ணாசை பூங்குழலார் போகத்
திருளாசை சிந்தித் திராதே—அருளாளன்
கச்சித் திருப்பதியா மத்தியூர்க் கண்ணன்றாள்
இச்சித் திருப்பதியா மென்று? (௭௪)

### ௨. திருவட்டபுயங்கம்

என்றுந் துயருழக்கு மேழைகாள்! நீங்களிளங்
கன்றுபோற் றுள்ளிக் களித்திரீர்—அன்றுநடம்
இட்ட புயங்கத் திருசரண மேசரணென்
றட்டபுயங் கத்தர்க்கா ளாய். (௭௫)

### ௩. திருத்தண்கா

[பிரிந்து ஆற்றளாய தலைவி தலைமகன் பக்கல் தனக்கு உள்ள அன்புறுதியைத் தோழிக்குக் கூறுதல்]

ஆட்பட்டே னைம்பொறியா லாசைப்பட் டேனறிவும்
கோட்பட்டு நாணங் குறைபட்டேன்—சேட்பட்ட
வண்காவை வண்டுவரை வைத்த விளக்கொளிக்குத்
தண்காவைச் சேர்ந்தான் றனக்கு. (௭௬)

### ௪. திருவேளுக்கை

தனக்குரிய னாயமைந்த தானவர்கோன் கெட்டான்
உனக்குரிய னாயமைந்த னுய்ந்தான்—நினைக்குங்கால்
வேளுக்கை யாளரியே! வேறுதவி யுண்டோ?உன்
தாளுக்கா ளாகாத வர்க்கு. (௭௭)

### ௫. திருப்பாடகம்

தவம்புரிந்த சேதனரைச் சந்திரனு தித்தன்
சிவன்பிரம னிந்திரனைச் செய்கை—உவந்து
திருப்பா டகமருவுஞ் செங்கண்மா றன்மார்
பிருப்பா டகவுரை யாலே. (௭௮)

## கா. திருநீரகம்

ஆலத் திலைசேர்ந் தழியுலகை யுட்புகுந்த
காலத்தி லெவ்வகைநீ காட்டினாய்?—ஞாலத்துள்
நீரகத்தாய்! நின்னடியே னெஞ்சகத்தாய்! நீண்மறையின்
வேரகத்தாய்! வேதியற்கு மீண்டு. (எசு)

## எ. திருநிலாத்திங்கட்டுண்டம்

மீண்டுந் தெளியார்கண் மேதினியோர் நின்னடிப்பூப்
பூண்டாங்க மாடி படர்சடைமேல்—தீண்டிக்
கலாத்திங்கட் டுண்டத்தின் மீதிருப்பக் கண்டு
நிலாத்திங்கட் டுண்டத் தானே! (அ௦)

## அ. திருவூரகம்

நேசத்தா லன்றுலகை நீர்வார்க்க வைத்தளந்த
வாசத்தா ளென்றலைமேல் வைத்திலையேல்—நாசத்தால்
பாரகத்து ளன்றிநான் பாழ்நரகில் வீழ்ந்தென்கொல்?
ஊரகத்து ணின்றாய்! உரை. (அக)

## கூ. திருவெஃகா

உரைகலந்த நூலெல்லா மோதி யுணர்ந்தாலும்
பிரைகலந்த பால்போற் பிறிதாம்—தரையில்
திருவெஃகா மாயனுக்கே சீருறவார் தங்கள்
உருவெஃகா வுள்ளத்தி னோர்க்கு. (அஉ)

## க௦. திருக்காரகம்

ஓராதார் கல்வி யுடையேங் குலமுடையேம்
ஆரா தனமுடையேம் யாமென்று—சீராயன்
பூங்கா ரகங்காணப் போதுவார் தாடலைமேல்
தாங்கா ரகங்காரத் தால். (அஙு)

### கக. திருக்கார்வானம்

தாலேலோ வென்றாய்ச்சி தாலாட்டித் தன்முலைப்பா
லாலேயெவ் வாறுபசி யாற்றினள்? முன்—மாலே! பூங்
கார்வானத் துள்ளாய்! கடலோடும் வெற்போடும்
பார்வான முண்டாய்நீ பண்டு. (அச)

### கஉ. திருக்கள்வனூர்

பண்டேயுன் றொண்டாம் பழவுயிரை யென்னதென்று
கொண்டேனைக் கள்வனென்று கூறாதே—மண்டலத்தோர்
புள்வாய் பிளந்த புயலே! உனைக்கச்சிக்
கள்வாவென் றோதுவதென் கண்டு? (அரு)

### கங. திருப்பவளவண்ணம்

கண்டறிந்துங் கேட்டறிந்துந் தொட்டறிந்துங் காதலால்
உண்டறிந்து மோந்தறிந்து முய்யேனே—பண்டைத்
தவளவண்ணா! கார்வண்ணா! சாமவண்ணா! கச்சிப்
பவளவண்ணா! நின்பொற் பதம். (அசு)

### கச. திருப்பரமேச்சுரவிண்ணகரம்

பதத்தமிழாற் றன்னையே பாடுவித்தென் னைத்தன்
பதத்தடியார்க் கேயாட் படுத்தான்—இதத்த
பரமேச் சுரவிண் ணகரான் பலவான்
வரவேச் சுரலணைந்த மால். (அஎ)

### கரு. திருப்புட்குழி.

மால்வே ழமுமரவு மாயையும்வெற் புங்கடலு
மேல்வீழ் படையும் விடமும்போய்ப்—பாலன்
நெருப்புட் குழிகுளிர நின்றதுங்கேட் டோதார்
திருப்புட் குழியமலன் சீர். (அஅ)

### கசு. திருநின்றவூர்

[தலைவி தோழியர்க்கு அறத்தொடுநிற்றல்]

சீரறிந்து தோழிமீர்! சென்று கொணர்ந்தெனக்குப்
போர முலைமுகட்டிற் பூட்டுமினோ!—நேரவுணர்
பொன்றவூர் புட்கழுத்திற் பொன்னைமா ணிக்கத்தை
நின்றவூர் நித்திலத்தை நீர். (அகூ)

### கஎ. திருவெவ்வுளூர்

நீர்மைகெட வைதாரு நின்னோ டெதிர்த்தாரும்
சீர்மைபெற நின்னடிக்கீழ்ச் சேர்கையினால்—நேர்மையிலா
வெவ்வுளத்த னேன்செய் மிகையைப் பொறுத்தருளி
எவ்வுளத்த னே!நீ யிரங்கு. (கூ0)

### கஅ. திருநீர்மலை

இரங்கு முயிரனைத்து மின்னருளாற் காப்பான்
அரங்க னொருவனுமே யாதல்—கரங்களால்
போர்மலைவான் வந்த புகழ்வாணன் காட்டினான்
நீர்மலைவா ழெந்தையெதிர் நின்று. (கூக)

### ககூ. திருவிடவெந்தை

நின்று திரியும் பிறவியெல்லா நேர்வித்துக்
கொன்று திரியுங் கொடுவினையார்—இன்று
வெருவிடவெந் தைக்கே விழுமியதொண் டானேன்
திருவிடவெந் தைக்கே செறிந்து. (கூஉ)

### உ0. திருக்கடன்மல்லை

செறிந்த பணைபறித்துத் திண்களிற்றைச் சாடி
முறிந்துவிழப் பாகனையு மோதி—எறிந்த
தருக்கடன்மல் லைக்குமைத்தான் றஞ்சமென்று நெஞ்சே!
திருக்கடன்மல் லைக்குட் டிரி! (கூந)

### உக. திருவல்லிக்கேணி

திரிந்துழலுஞ் சிந்தைதனைச் செவ்வே நிறுத்திப்
புரிந்து புகன்மின்! புகன்றால்— மருந்தாம்
கருவல்லிக் கேணியா மாக்கதிக்குக் கண்ணன்
திருவல்லிக் கேணியான் சீர். (கச)

### உஉ. திருக்கடிகை

சீரருளா னம்மைத் திருத்திநா முன்னறியாக்
கூரறிவுந் தந்தடிமை கொண்டதற்கே—நேரே
ஒருகடிகை யும்மனமே! உன்னுகிலாய் முத்தி
தருகடிகை மாயவனைத் தான். (கரு)

தொண்டைநாட்டுத் திருப்பதிகள் முற்றும்.

---

## வடநாட்டுத் திருப்பதிகள்-கஉ.

### க. திருவேங்கடம் (திருப்பதி)

தானே சரணமுமாய்த் தானே பலமுமாய்த்
தானே குறைமுடிக்குந் தன்மையான்—தேனேய்
